# கலையரசி




1886 - 2007

KP 37

கலாபூஷணம் - தாமரைச்செல்வநாயகம்
(கலைஞர் விருதுகள் ஆளுநர் விருது)
RETD / FOREST OFFICER,
PETHALAI,
VALAICHENAI.

# கலையரசி

முத்து - 01

மட்/கல்குடா நாமகள் வித்தியாலயம்
கல்குடா.

2007

# நூல் விபரங்கள்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | கலையரசி |
| முத்து | : | 01 |
| இதழாசிரியர் | : | திரு.க.கதிர்காமநாதன் |
| இணை இதழாசிரியர் | : | திரு.ந.ஜெயகரன் |
| பதிப்பும் வெளியீடும் | : | 2007 |
| பிரதிகள் | : | 400 |
| பக்கங்கள் | : | (xviii) + 81 |
| பதிப்புரிமை | : | மலர்க்குழு<br>மட்/கல்குடா நாமகள் வித்தியாலயம். |
| அட்டைப்படம் | : | செல்வன்.லோகநாதன் சுபோசன் |
| கணனி வடிவமைப்பு | : | திரு.சி.இளங்கோவன் (ஆசிரியர்) |
| உதவி வடிவமைப்பு | : | செல்வி.க.கேமலா, திரு.இ.சசிகாந் |
| கணனி நெறியாள்கை | : | செல்வி.அ.ஜெயசுதா (சண் அச்சகம்) |
| ஒளிப்படக் கலவை | : | திரு.க.கதிர்காமநாதன் (ஆசிரியர்) |
| அச்சுப்பதிப்பு | : | சண் அச்சகம்<br>05, இருதயபுரம் மேற்கு,<br>மட்டக்களப்பு.<br>தொ.பேசி : 065 - 2222597 |
| வெளியீடு | : | மட்/கல்குடா நாமகள் வித்தியாலயம்<br>கல்குடா. |

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி!
வாழிய வாழியவே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வன்மொழி வாழியவே!

ஏழ் கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ் மொழியே!
வானமறிந்த தனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழியவே!

# பாடசாலை கீதம்

வாழ்க என்றும் வாழ்க
வாழ்க நன்று வாழ்க
நாங்கள் கற்கும் ஆலயம்
நாமகள் வித்தியாலயம்

இலங்கை நாட்டின் கிழக்கிலே
மட்டு நகரின் வடக்கிலே
மீனும், இறாலும், தேங்காயும்
நானிலத்தோர் களித்திடும்
கல்குடா கிராமத்தில்
அமைந்த தெங்கள் ஆலயம்
(வாழ்க என்றும்)

உண்மையாண்மை நேர்மையும்
உள்ளவராய் வாழவும்
ஒழுங்கான நிலையிலே
ஒற்றுமையாய் வாழவும்
கீர்த்திமிக்க குரவரை
கீழ்ப்படிந்து வாழவும்
கல்வியறிவு தந்திடும்
நாமகள் வித்தியாலயம்
(வாழ்க என்றும்)

களைப்பு நீங்கிக் குளித்திட
காற்று வாங்கிக் களித்திட
அமைதியான கடற்கரை
அழகு காட்சி நிறைந்திடும்
கல்குடா கிராமத்தில்
அமைந்த தெங்கள் ஆலயம்
(வாழ்க என்றும்)

தமிழ் மொழியுடன் ஆங்கிலம்
தகுந்த சமயம் கணிதமும்
வாழ்க்கை நெறியும் கலைகளும்
ஆக்கமழகு ஞானமும் – நாங்கள்
கற்றுத் தேர்ந்திடும்
நாமகள் வித்தியாலயம்
(வாழ்க என்றும்)





மட்/கல்குடா நாமகள் வித்தியாலயத்தில் கல்வி கற்று
26.12.2004ல் சுனாமி ஆழிப் பேரலையில் உயிர்நீத்த
மாணவர்களுக்கு இம் மலர் சமர்ப்பணம்.

# ஆசிச்செய்தி



“ தங்கணே சாய வித்மஹே
வத்ர துண்டாய தீமகி
தன்னே தந்நிப் பிரயோதயாத்’’ (காயத்திரி)

இந்த உலகத் தோற்றமானது ஏதோவொரு அனுமாஸ்த சக்தியுடன் இயங்கிக் கொண்டிருக்கிறது. நாமும் காலவோட்டத்திற்கேற்ப சுற்றிச் சுழன்று அதற்கேற்ற வகையில் எமது வாழ்க்கையை அமைக்க பழகிக்கொண்டு விட்டோம். மனிதனாகப் பிறந்தவன் தான் பிறந்த நோக்கத்தை ஏதோவொரு வகையில் பயனுள்ளதாக்கிக் கொள்ள வேண்டும். இந்த வகையில் மனித சமுதாயத்திற்கு பெரும் விருட்சமாக இருப்பது பாடசாலையாகும். இங்கிருந்து தான் சிறந்த பண்பாளர்கள் உருவாக்கப் படுகின்றார்கள். அத்துடன் பல வகையான மாணவ நலன் விருத்திச் செயற்பாடுகளும் இடம்பெறுகிறது.

அந்த வகையில் இப்பாடசாலை வரலாற்றில் 120 வருடங்களுக்குப் பின்பாவது கலையரசி என்ற பெயரில் ஒரு சஞ்சிகை வெளியிடுவதை நினைக்கும் போது மிக மகிழ்ச்சியை எனக்கு மட்டுமல்லாது இக்கிராம மக்களுக்கும் ஏற்படுத்தும். கலைகளை வளர்க்கும் இடமாக திகழும் இவ்விடத்திற்கு பொருத்தமாக “கலையரசி” என்ற பெயரில் பல அம்சங்களைத் தாங்கி வருவதும் இதற்கு அயராது உழைத்த அனைவருக்கும் இவ்வெளியீடு மேலும் வரும் ஆண்டுகளிலும் வெளிவரவும், “சீரும் சிறப்புமாய்த் தளைக்க” எனது பூரண நல்லாசிகளை வழங்குகின்றேன்.

“வரதாம் ஸ்ீகதாம் தேவிம்
சுவதாம் ஸ்ீபல ப்ரதாம்
தனதாம் ஸித்திதாம் வாணீம்
வந்தே வித்யா பி வர்தினீம்”

**சிவஸ்ரீ.மா.புஸ்பராசா குருக்கள்**
கல்குடா.

# ஆசிச்செய்தி



எமது கரங்களில் தவழும் கல்குடா நாமகள் வித்தியாலய 'கலையரசி' இதழுக்கு ஆசியுரை வழங்குவதில் பேருவகை கொள்கின்றேன்.

நூற்றாண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்ட நாமகள் வித்தியாலயத்தில் மலரும் புத்தம் புதிய மலரிது. நீண்டதொரு வரலாற்றினைக் கொண்ட இவ்வித்தியாலயம் கிறிஸ்தவ அங்கிலிக்கன் மிசனரிமாரால் பாமர மக்களின் பிள்ளைகளுக்கு கல்வியினை வழங்கும் ஒரு புனித திருப்பணியினை கருத்திற் கொண்டே ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் ஆங்கிலக் கல்வியோடு மிகவும் தேர்ச்சி பெற்ற கண்டிப்பான எமது ஊர் ஆசான்கள் கல்வி புகட்டுவதில் ஈடுபட்டனர். அவர்களின் வாழ்வு குறித்த சுவையான கதைகள் இன்றும் எமது பெரியோர் களினால் சொல்லப்படுதலும் உண்டு.

பல அறிஞர்களையும், கல்விமான்களையும் மட்டுமல்லாது, சிறந்த பண்பு கொண்ட மக்களையும் உருவாக்கி அமைதியான ஒரு ஆல விருட்சமாய் இப்பாடசாலை இருப்பது கண்டு என்னுள் வியக்கிறேன். பலர் இப்பாடசாலையின் வளர்ச்சிக்காய் தம் வாழ்வுதனை அர்ப்பணித்ததை எண்ணிப் பெருமையடைகின்றேன். இத்தகைய பெருமை மிக்க கல்விக் கூடத்தின் இன்னொரு விடிவெள்ளியாய் "கலையரசி' வெளிவருவது கண்டு களிப்படைகின்றேன்.

இப்பாடசாலையோடு ஒன்றரக் கலந்த அங்கிலிக்கன் திருச்சபையின் பிரதேச குருமுதல்வராய் இவ் வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவச் செல்வங்கள், மற்றும் சிறப்பாக "கலையரசி' இதழாசியர், ஆசிரியர் குழு அனைவருக்கும், வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். உங்கள் பணி ஓங்கவும், அறியாமை இருள் அகன்று கல்வி என்னும் விளக்கு சுடர்விட்டெரியவும், உங்கள் சேவை தொடரட்டும்.

இறையாசிகள்.

அருட்பணி.சந்திரன் கிறிஸ்பஸ்
கிழக்கு/ஊவா பிரதேச குருவானவர்,
புனித ஆந்திரேயா குரு இல்லம்,
மட்டக்களப்பு.

# வலயக்கல்விப் பணிப்பாளரின் மனதிலிருந்து....



ஒரு சமூகத்தின் விழிப்புணர்ச்சியைத் தூண்டுவது அந்தப் பிரதேச சமூகத்தின் கல்வி நிலை என்றால் மிகையாகாது. ஒரு சமூகத்திலுள்ள கல்வி நிலையம் அந்த சமூகத்தை தட்டியெழுப்புவதற்கு உணர்ச்சிகளையும், திறன்களையும் கொண்டு உருவாக்கப்படுகின்ற கலை ஆக்கங்களையும் படைப்புக்களாக்குதல் எழுச்சிக்குச் சான்றாகின்றது. இந்த வகையில் மட்/கல்குடா நாமகள் வித்தியாலயம் கலையின் இருப்பிடமாம் கலைமகளின் நாமத்தில் "கலையரசி" என்ற பெயரில் பாடசாலை மாணவர்களின், ஆசிரியர்களின் ஆக்கங்களைக் கொண்டு சஞ்சிகை ஒன்றை ஆக்க முன்வந்துள்ளமை பாராட்டுக்குரியது. 120 வருட கால வரலாற்றில் முதல் முறையாக ஆக்க நூல் ஒன்றை வெளியிட முன்வந்தமை, அவர்களது நல்லெண்ணத்தையும் பாடசாலை மாணவர்களின் திறனை வெளிக்கொணர்வதிலுள்ள ஆர்வத்தையும் காட்டுகின்றது. இச்சஞ்சிகை தொடர்ந்தும் ஆண்டு தோறும் மலர வேண்டும், மாணவர்களின் ஆக்க சக்தி பெருக வேண்டும், இச்செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்லும் அதிபருக்கும், ஆசிரியர்களுக்கும் இறையாசி கிடைக்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.


**திருமதி.எஸ்.சக்கரவர்த்தி**

வலயக்கல்விப் பணிப்பாளர்,
கல்குடாவலயம்,
வாழைச்சேனை.

# வாழ்த்துச் செய்தி



கல்குடா நாமகள் வித்தியாலயம் "கலையரசி" என்னும் சஞ்சிகையை வெளியிடுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். "கல்வியைக் கற்க மறுப்பவன் மனித வாழ்க்கையை வாழ மறுப்பவனாகின்றான்" என்ற நிலையில் இன்று பாடசாலை கல்வி கற்கும் இடம் என்ற நிலை மாறி வாழும் இடமாக சமூக வாழ்க்கைக்கு வழிகாட்டும் இடமாக விளங்க வேண்டியுள்ளது. இந்நிலைக்கு மாணவர்களை நெறிப்படுத்த சஞ்சிகை ஆக்கம் வழிகாட்டும். மாணவர்களிடையே உள்ள ஆக்கச் சிந்தனையை கிளர்ந்தெளச் செய்து ஆக்கத்திறனை வெளிக்கொணரும் முயற்சியே இது என்பதில் ஐயமில்லை.

கடலன்னையின் தாலாட்டில் தவழும் நாமகள் அவ்வன்னையின் அகோரப்பசிக்கும் ஆளாகி தளராது நடைபயிலுகின்றாள். அக்கலைமகள் கரங்களால் வெளிவரும் "கலையரசி" கல்குடாவின் கல்விச் சமூகத்தை ஆக்கபூர்வ விமர்சன சிந்தனையாளராக மாற்றி மென்மேலும் சிறப்பாக வெளிவர வேண்டுமென்று இறைவனை வேண்டி ஆசி கூறுகின்றேன்.

**திரு. க. சத்தியநாதன்**
(SLEAS, BA, DIP IN EDU. (MERIT), MLIS (MALAYSIA)
பிரதிக் கல்விப்பணிப்பாளர், கல்வி அபிவிருத்தி
கல்குடா வலயம்
வாழைச்சேனை



# வாழ்த்துச் செய்தி

எமது கல்குடா வலயத்தில் தற்போது சுமார் 79 பாடசாலைகள் உள்ளன. எமது கோறளைப்பற்று கோட்டத்தில் 36 பாடசாலைகள் உள்ளன. இவற்றில் ஒரு சில பாடசாலைகளே இப்படியான சஞ்சிகை வெளியீட்டில் ஈடுபடுகின்றன. காரணம் இதிலுள்ள சிரமம், செலவு என்பனவாகும். 1886ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மட்/கல்குடா நாமகள் வித்தியாலயம் 120 வருட வரலாற்றினைக் கொண்டதாகும். கடந்த 2004ம் ஆண்டில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் இப்பாடசாலையில் கற்றுக் கொண்டிருந்த 66 மாணவர்கள் காவு கொள்ளப்பட்டனர். இவர்களின் உயிர்த்தியாகம் இப்பாடசாலைக்கு ஒரு உந்துதலை கொடுத்துள்ளது எனலாம். பௌதீக வளத் தேவையில் நிறைவு கண்டு வரும் இப்பாடசாலை இன்று தனது கன்னி முயற்சியாக "கலையரசி" என்ற சஞ்சிகையை வெளியிட முன்வந்தமை பாராட்டிற்குரியதாகும்.

ஒரு பாடசாலை பாடவிதான செயற்பாடுகளில் மாத்திரமின்றி இணைப் பாடவிதானச் செயற்பாடுகளிலும் திறமையைக் காட்டும் போதுதான் சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் கிடைக்கின்றன. இச்சஞ்சிகை வெளியீடு இப்பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களின் ஆற்றலையும் ஆக்கத்திறனையும் அதிகரிக்கவும் அவர்களிடையே மறைந்துள்ள திறன்களை வெளிக்கொண்டு வரவும் வழியமைத்துள்ளது. எனவே இச்சஞ்சிகை வெளியீடு இத்தோடு நின்று விடாமல் எதிர்வரும் வருடங்களிலும் தொடர்ந்து வெளிவர வேண்டும் என்பதே எனது அவா, இப்பணியில் ஈடுபட்டுள்ள கல்குடா நாமகள் வித்தி யாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களைப் பாராட்டுவதில் மகிழ்சியடைகின்றேன்.

**திரு.சி.தங்கராசா**

**கோட்டக்கல்விப் பணிப்பாளர், கோறளைப்பற்று.**

# அதிபர் உள்ளத்திலிருந்து....



கல்குடா கல்வி வலயத்திலுள்ள கல்குடாவை தன்னகத்தே கொண்டமைந்த நாமகள் வித்தியாலயம் நீண்டகால வரலாற்றைக் கொண்ட ஒரு பாடசாலையாகும். இப்பாடசாலையில் சஞ்சிகை ஒன்று வெளியிடப்படாதிருந்தது ஒரு குறைபாடாகக் காணப்பட்டது. இக்குறைபாடு நிவர்த்தி செய்யப்பட வேண்டியதன் அவசியத்தை 2004ல் ஏற்பட்ட சுனாமி ஆழிப்பேரலையின் தாக்கம் எமக்கு உணர்த்தியது. அந்த உந்து சக்தியின் வெளிப்பாடாக "கலையரசி" என்ற நாமத்தைக் கொண்டு வெளிவருகின்றது. இதற்கு முதலில் இறைவனுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சமூகத்தின் ஓர் அங்கமாக விளங்கும் பாடசாலை அச்சமூகத்திலுள்ள சிறார்களின் கல்வி வளர்ச்சியில் மாத்திரம் நின்றுவிடாது இணைப்பாடவிதான செயற்பாடுகளையும் விருத்தி செய்து கொடுக்க வேண்டிய பாரிய பொறுப்புக்களையும் கொண்டுள்ளது. இந்த வகையில் ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் சிந்தனை விருத்திக்கும் எழுத்தாக்கத்திறன் விருத்திக்கும் களமமைத்துக் கொடுத்ததன் விளைவே "கலையரசி என்ற சஞ்சிகையாகும்.

"கலையரசி" இவ்வித்தியாலயத்தில் முதல் சஞ்சிகையாகவும் பாடசாலை வரலாற்றுப் பதிவாகவும் காணப்படுவதோடு மாணவச் செல்வங்களின் ஆக்கங்களையும், ஆசிரியர்களின் ஆக்க சிந்தனைகளையும் ஏற்று வருவதோடு எதிர்காலச் சந்ததியி னரின் சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய பங்களிப்பு என்ன என்பதையும் வெளிப் படுத்துகிறது. இச்சஞ்சிகை எனது காலத்தில் வெளிவருவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைவதுடன் தொடர்ந்து வரும் காலங்களிலும் பல்கலைகளையும் வளர்க்கும் எனவும், மீண்டும் புதுப்பொழிவுடனும் வரவேண்டும் என்றும் வாழ்த்துக் கூறுகின்றேன்.

இச்சஞ்சிகை வெளிவர ஆக்கங்களை வழங்கிய ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும், ஆலோசனை வழங்கிய பெருந்தகைகளுக்கும், "கலையரசி யை" வடிவமைக்க பேருதவிபுரிந்த திரு.க.கதிர்காமநாதன் அவர்களுக்கும், திரு.சி.இளங்கோவன் அவர்களுக்கும் திரு.ந.ஜெயகரன் அவர்களுக்கும் அத்துடன் ஒத்துழைப்பு வழங்கிய எனது ஆசிரியர் குழாத்திற்கும் ஆசியுரை வழங்கிய அனைவருக்கும் மீண்டும் நன்றியை தெரிவிப்பதில் அளவில்லாத மகிழ்ச்சி அடைகின்றேன்.

**திரு.வி.அரசரெத்தினம்**
அதிபர் - 2II, Trd.Soc
மட்/கல்குடா நாமகள் வித்தியாலயம்.

# செயலாளரின் வாழ்த்துச் செய்தி



மாணவர்களின் அறிவுக் கண்ணைத்திறக்கும் நாமகள் வித்தியா லயத்தில், 120 வருடத்திற்குப் பின்பு கலையரசி என்ற பெயரில் சஞ்சிகை ஒன்று வெளிவருகின்றது என்றால், அதனை இட்டு நாம் எல்லோரும் பெருமைப்பட வேண்டியதொன்றாகும்.

மாணவர்களின் ஏட்டுக் கல்வியை மாத்திரம் வளர்த்தெடுக்காது அவர்களின் பிற கற்றல் விடயங்களிலும் ஈடுபடுத்தி, இத்தகைய சஞ்சிகை மூலமாக ஆற்றல்களை வெளிக்கொணர்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டது பாராட்டுக்குரியதாகும்.

பல வருடங்களாக பாடசாலையுடன் நெருங்கிய தொடர்புடைய எனக்கு இப்போதுள்ள அதிபர் பல வழிகளிலும் இப்பாடசாலையின் வளர்ச்சியில் முக்கிய பங்கெடுத்து கொண்டுள்ளமை மகிழ்ச்சிதரும் ஒரு விடயமாகும். அத்துடன் பாடசாலை மட்டுமல்லாது அதனைச் சூழவுள்ள பிரதேசங்களின் அதாவது சமூகத்தின் வளர்ச்சிக்கும் இவரது பங்கு குறிப்பிடத்தக்கதொன்றாகும். பல வகைகளிலும் துரிதமாக வளர்ச்சியடைந்து வரும் பாடசாலைக்கு பொருத்தமான அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள் அமைந்திருப்பது சிறப்பான விடயமாகும்.

இந்த வகையில் இவரது காலத்தில் இச்சஞ்சிகை வெளிவருவது பாராட்டப்படக்கூடிய ஒரு விடயமாகும். எனவே கலையரசியை கலைக்கு வித்தாகக் கொண்டு இதனுடன் நிற்காது தொடர்ந்து வரும் காலங்களிலும் புகழ் மணக்க வேண்டுமென வாழ்த்துக் கூறுகின்றேன்.

**திரு.வே.விநாயகமூர்த்தி**
பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர்



திரு.வீ.அரசரெத்தினம்

# நூலாசிரியரின் செழுந்தமிழ் ஓலை...



கடலும் கடல் சூழ்ந்த 'நெய்தல்' நிலப்பரப்பில் சீர்புகழும் நிலையில் அமையப்பெற்ற கல்குடா நாமகள் வித்தியாலயம் 1886 இல் ஆரம்பிக்கப்பட்டு 120 வருடகால வரலாற்றுப் பின்னணியைக் கொண்டு விளங்கும் இந்நிலையில் 'கலையரசி' எனும் நாமம் தாங்கி முதன்முதலாக மலர் ஒன்று வெளியிடுவது வித்தியாலயத்தின் பெருமைக்கும் சிறப்புக்கும் ஓர் எடுத்துக்காட்டாகும்.

இச் சஞ்சிகை பாடசாலைச் சமூகத்தின் ஆக்கத்திறன்களை வெளிக் கொணரும் நன் நோக்கத்திற்காகவும், சமகாலக் கல்வியின் பாடசாலையின் கருத்துப் பரிமாற்றத்தினை முன்னெடுத்து கற்றல் குவிப்பை அனைவரிடமும் ஏற்படுத்தி, திறந்த தேடல்களை உருவாக்கி, கற்போரினை நன் நிலைக்கு ஆளாக்கி, நவீன கல்வித் தொடர்பாடல் இலக்குடைய மாணவர் பரம்பரையை உருவாக்கும் சிறந்த ஒரு களமாக இச் சஞ்சிகை சிறந்து விளங்கும் ஒரு களமாக இது துணை புரியும் என நம்புகிறேன்.

இந்த வகையில், சஞ்சிகை வெளிவருவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய சகல நல் உள்ளங்களுக்கும், அதிபர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி.

திரு.க.கதிர்காமநாதன்

மலராசிரியர்

"எண்ணித்துணிக கருமம், துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு"

(குறள் - 467)

# சஞ்சிகை அமைப்புக்குழு

**காப்பாளர் ஆலோசகர்**

**திரு.வீ.அரசரெத்தினம்** (அதிபர்)

**இதழாசிரியர்**

**திரு.க.கதிர்காமநாதன்** (பிரதி அதிபர்)

**இணை இதழாசிரியர்**

**திரு.ந.ஜெயகரன்**

**செயலாளர்**

**திரு.சு.ஜெகநாதன்**

**இணைச்செயலாளர்**

**செல்வி.த.தமிழ்ச்செல்வி** (ஆலோசனை வழிகாட்டல்)

**பொருளாளர்**

**திருமதி.ம.மனோகரசிங்கம்** (பகுதித் தலைவர் - ஆரம்பப்பிரிவு)

**ஆலோசகர்கள்**

**திரு.வே.கார்த்திகேசு** (சிரேஷ்ட ஆசிரியர்)
**திருமதி.த.கமலேஸ்வரன்** (பகுதித் தலைவர் இடைநிலை)
**திருமதி.கீ.லோகநாதன்**
**திருமதி.ரா.ரகுநாதன்**

**கணனி வடிவமைப்பு**

**திரு.சி.இளங்கோவன்**

**உதவி வடிவமைப்பு**

**1) செல்வி.க.கேமலா 2) திரு.இ.சசிகாந்**

**கணனி நெறியாள்கை**

**செல்வி.அ.ஜெயசுதா** (சண் அச்சகம்)

**பத்திராதிபர் குழு**

**திரு.ப.அமிர்தராஜா**
**செல்வி.வி.வினிதா**
**திருமதி.மே.ரமேஸ்வரன்**
**திருமதி.ப.பிரதீஸ்வரன்**
**திருமதி.சு.சாம்டினேஸ்**
**திருமதி.ம.ரமேஸ்காந்தன்**
**திரு.சி.இளங்கோவன்**

**வெளியீட்டுக்குழு**

**திரு.டே.விஜயகுமார்**
**திரு.பி.பிரமிதன்**
**திரு.இ.கனகராசா**
**திருமதி.ப.சின்னத்தம்பி**
**திருமதி.ஜெ.யூ.ஏனஸ்ட்**
**செல்வி.தி.விமலேந்தினி**
**செல்வி.த.பிரதீபா**

# பாடசாலை ஆசிரியர் குழாம் விபரம்

| | | |
|---|---|---|
| திரு. வீ. அரசரெத்தினம் | அதிபர் 2 II | (Social Trd.) |
| திரு. க. கதிர்காமநாதன் | பிரதி அதிபர் | (BA, Tamil Trd.) |
| திரு. வே. கார்த்திகேசு | | (Maths.Trd) |
| திரு. சு. ஜெகநாதன் | | (BA) |
| திரு. பி. பிரமிதன் | | (NDTE. Marit) |
| திரு. ப. அமிர்தராஜா | | (BA) |
| திரு. இ. கனகராசா | | (BA) |
| திரு. டே. விஜயகுமார் | | (BA) |
| திரு. ந. ஜெயகரன் | | (BA) |
| திரு. சி. இளங்கோவன் | | (BA (Hons), PGDE) |
| திருமதி. வ. மனோகரசிங்கம் | | (Primary.Trd) |
| திருமதி. ரா. ரகுநாதன் | | (Primary.Trd) |
| திருமதி. கீ. லோகநாதன் | | (H.Eco.Trd) |
| திருமதி. ஜெ. யூலியன் ஏனஸ்ட் | | (Primary.Trd) |
| திருமதி. த. கமலேஸ்வரன் | | (BA,PGDE) |
| திருமதி. எஸ். பவானி | | (Primary.Trd) |
| திருமதி. ப. பிரதீஸ்வரன் | | (BA (Hons), PGDE) |
| செல்வி. தி. விமலேந்தினி | | (BA) |
| செல்வி. வி. வினிதா | | (NDTE) |
| செல்வி. மேரி அன்றனியா | | (BA) |
| திருமதி. சு. சாம்டினேஸ் | | (BBA) |
| செல்வி. த. தமிழ்ச்செல்வி | | (BA (Hons), PGDE) |
| திருமதி. ம. ரமேஸ்காந்தன் | | (BA, DIP.IN.(Music) |
| செல்வி. பிரதீபா தவராசா | | (HNDA) |
| செல்வி. க. கேமலா | | (Con.English) |
| திரு. இ. சசிகாந் | | (A/L Tea.) |
| திரு. வி. விக்னேஸ்வரன் | | (BBA, PGDE, MED) |



பிரதி அதிபர்



பகுதித் தலைவர்
(இடைநிலைப் பிரிவு)



பகுதித் தலைவர்
(ஆரம்பப் பிரிவு)


# பாடசாலைச் சின்னம்

"குறி சாரும் வரை நில்லாது துணிமின்"

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 01) | பாடசாலையின் படிமுறை வளர்ச்சிப் படிகள் | 01 |
| 02) | ஆரம்பகால கல்குடாக் கிராமமும் வரலாற்றுப் பின்னணியும் | 06 |
| 03) | சமூகம் நோக்கிய பணிகளில் ஆலயங்கள் | 11 |
| 04) | தெரிந்து கொள்ளுங்கள் | 14 |
| 05) | உலகத் தோற்றம் | 16 |
| 06) | மருத்துவக் கண்டுபிடிப்புக்கள் | 16 |
| 07) | உங்கள் வாழ்க்கை உங்கள் கைகளில் | 17 |
| 08) | பெண் மொழிகள் | 18 |
| 09) | மாறாத அடையாளம் | 18 |
| 10) | கொழுகொம்பு (சிறுகதை) | 19 |
| 11) | பெண்ணுரிமை | 20 |
| 12) | பொது அறிவு | 21 |
| 13) | தந்தையர்களை அறிவோம் | 21 |
| 14) | ஆரோக்கிய வாழ்விற்காக... | 22 |
| 15) | சமைத்துப் பார்க்கலாம் வாறீங்களா... | 23 |
| 16) | தெரிந்து கொள்ளுங்கள் | 24 |
| 17) | அழகு என்பது | 24 |
| 18) | பெண்ணின் வெற்றிப்பயணம் | 25 |
| 19) | உபகரணப்பாடல் | 25 |
| 20) | ஒலிம்பிக் விளையாட்டுக்கள் | 26 |
| 21) | மனதில் உறுதி வேண்டும் | 27 |
| 22) | குழந்தைகள் ஏன் தோல்வியடைகிறது? | 29 |
| 23) | கோறளைப்பற்றுப் பிரதேச சபைக்குட்பட்ட.... | 32 |
| 24) | பெண்ணே நின்றுவிடு! | 38 |
| 25) | "நா" பற்றிய குறிப்புக்கள் | 38 |
| 26) | உலகத் தோற்றம் | 39 |
| 27) | பொது அறிவு | 39 |
| 28) | விண்மீன்களுக்கு இத்தனை சக்தியா? | 40 |

# Our Principal




Mr. V. Arasarethinam
Principal - 2 - II

ஆசிரியர் குழாம் - 2007



29) தாயன்பு (சிறுகதை) 41
30) வருட நிறைவு விழாக்கள் 43
31) கல்வியைப் பற்றி நீதி நூல்களிலிருந்து 44
32) விளையாட்டுத் துறைசார்ந்த விடயம் 45
32) தந்தையர்களை அறிவோம் 45
33) அறிஞர்களின் கல்விப் பொன்மொழிகள் 45
34) முதுகில் ஒரு மூட்டை 46
35) எண் விந்தை 47
36) கலை 48
37) தேசிய விளையாட்டுக்கள் 49
38) *English in the..........* 49
39) *Thoughts* - சிந்தனைகள் 50
40) *What is Life?* 51
41) இலங்கையில் இடைநிலைப் பாடசாலை.... 52
42) அமில மழை 55
43) கல்வி 56
44) தெரிந்துகொள்வோம் 56
45) வாசிப்புப் பழக்கமும், அதன் உயர்வும் 58
46) சிவனின் 64 திருப்பாடல்கள் 60
47) பங்குபற்றல் முகாமைத்துவம் 62
48) பழமொழிகள் 63
49) நாட்டின் இலட்ச ஊழலின் தாக்கமும் அபிவிருத்தியும் 64
50) உலகமயமாதல் செயல்முறைகளும் சவால்களும் 66
51) அகதிகள் அவலம் 68
52) இலங்கையின் வறுமை ஒழிப்புத்திட்டத்தின்.... 70
53) பெண்ணே! நீ அறிவாய்.... 71
54) மல்தூசின் சனத்தொகைக் கோட்பாடு 72
55) இலங்கையின் சுதந்திரத்தின் பின்.... 72
56) விளம்பரங்கள் 73
57) பாடசாலை ஆசிரிய குழாம் 78
58) நன்றி நவிலல் 81

# பாடசாலையின் படிமுறை வளர்ச்சிப் படிகள்



திரு.வீ.அரசரெத்தினம்
அதிபர் - 2II, Trd.Soc

கிழக்குக்கரையின் வங்காள விரிகுடா விடிவானில் கடலன்னையின் ஓசையுடன் கூடிய தென்னைமரப் பசுந்தோட்டத்தின் மத்தியில் கல்குடா, பாசிக்குடா, பட்டியடிச் சேனை கல்மடு, விநாயகபுரம் என்றும் அடைக்கலம் தேடிவரும் இதர கிராம மாணவர்களுக்கென்றும் அறிவு புகட்டி வரும் பாடசாலையாக மட்டக்களப்பிற்கு வடக்கே 37 கிலோ மீற்றருக்கு அப்பால் அமைந்துள்ள கல்குடா நாமகள் வித்தி யாலயம் சிறப்புற்று விளங்கி வருகிறது.

**வரலாற்றுப் பின்னணி**

நீண்டகால வரலாற்றுப் பின்னணியை தன்னகத்தே கொண்டமைந்ததுடன் வர லாற்று சிறப்புமிக்க பகுதியில் இப்பாடசாலை அமைந்திருப்பதும் பெருமைக்குரிய விட யமாகும். அந்நியரின் ஆட்சிக்குட்பட்டிருந்த இலங்கைத் திருநாட்டின் கல்குடாவை துறைமுக வசதி கருதி போர்த்துக்கேயரும், ஒல்லாந்தரும், பிரித்தானியரும் மாறி மாறி ஆட்சி செய்திருந்தனர். மட்டக்களப்பு கோட்டைப் பகுதியை ஒல்லாந்தர் வசப் படுத்திக் கொண்டது போல் பிரித்தானியர் கல்குடாவை தங்களது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்த போது தான், 1886ம் ஆண்டு சுமார் 130 வருடங்களுக்கு முன்னர் கிறிஸ்தவ மிசனரிகளால் இங்கு ஒரு பாடசாலை அமைக்கப்பட வேண்டும் என்ற நிலை ஏற்படவே வாழைச்சேனையைச் சேர்ந்த “உமையர்” என்பவரிடம் விலையாக காணி யொன்று கொள்வனவு செய்யப்பட்டு “சேர்ச் ஒப் இங்கிலாந்து அங்கிலிக்கன்” என்ற பெயரில் பாடசாலை இயங்கத் தொடங்கியது இக்கால கட்டத்தில் தான் வாழைச்சேனை பரியோவான் ஆலய காணியை கொள்வனவு செய்து ஆலயம் அமைக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. (தகவல் கொழும்பு கிறிஸ்தவ சங்கப் பதிவேடு)

ஆரம்ப காலத்தில் கிறிஸ்தவ மிசன் மார்களினால் நிருவகிக்கப்பட்ட நிலையில் பின்னர் ஏற்பட்ட இரண்டாம் உலக போர் நடவடிக்கை காரணமாக பாடசாலை அழி வடைய மீண்டும் பாடசாலையை ஓலைக் குடிசையில் அதே இடத்தில் இயங்கத் தொடங்கிய போது “சிலோன் சேர்ச் ஒப் மிக்ஸ் ஸ்கூல்” (இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலை) என்ற பெயரில் அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டது. இக்கால கட்டத்தில் திரு கார்த்திகேசு மாஸ்டரும் அவரது துணைவியாரும் ஆரம்ப காலத்தில் கடமையாற்றியதுடன் பாடசா லையை வளர்க்கப் பாடுபட்டனர். ஓலைக் குடிசை நாளடைவில் களிமண், முருகைக் கற்கள், சுண்ணாம்பு நீறு, சீமெந்து கொண்டும் அரைக்கட்டிட அமைப்பில் கட்டப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

ஆரம்பப் பாடசாலையாக இப் பகுதி மக்களுக்கு கல்வி புகட்டி வந்த இப்பாடசாலையில் மட்டக்களப்பிலிருந்து பல பண்டிதர்கள் அதிபர்களாக சேவை யாற்றி இப்பகுதி மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்கப் பாடுபட்டனர். இந் நேரத்தில் பின்வந்த திரு.இராமச்சந்திரன் அதிபர் அவர்கள் இப்பகுதி மக்கள் மத்தியில் சிறப்புற்று விளங்கியிருந்தார். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் ஏற்பட

ஊக்குவித்ததுடன் கலை, கலாசார ரீதியாக ஈடுபடுத்தி புதிய உத்வேகத்தை ஏற்படுத்தியிருந்தார் பின்னர் பதவி ஏற்ற வை.சி. ஆறுமுகம் அதிபர், திருமதி வில்லியம் அதிபர் (01.04.1972 – 31.12.1972) திரு.எஸ். மயில்வாகனம் அதிபர் (01.01.1973 – 31.07.1978) இவரது காலத்தில் 5ம் தரம் வரை வகுப்புக்கள் நடைபெற்றதுடன், 100 அடிகள் கொண்ட இரு கட்டிடங்களும் அமைந்திருந்தது. பின்னர் 1978ம் ஆண்டு வீசிய சூறாவளிக் காற்றில் இக்கட்டிடங்கள் உடைந்து தரைமட்டமாகியது. பின்னர் அரசாங்கத்தின் மீள் கட்டுமானத்தின் பிரகாரம் 100 அடி கட்டிடங்கள் இரண்டு கட்டிக்கொடுக்கப்பட்டது. இவர்களுக்குப் பின்னர் பொறுப்பேற்ற செல்வி.கே.செல்வநாயகம் அதிபர், திரு தாமோதரம் அதிபர் (1979) திரு. கிருஷ்னபிள்ளை அதிபர் (சந்தியூரான்) திரு.எஸ்.யோகநாதன் (1985) அதிபர் என மாறிமாறி பதவியேற்று சேவையாற்றியிருந்தனர்.

## 1986ம் ஆண்டின் பின்னர் துரித வளர்ச்சி

1986ம் ஆண்டு அதிபராக பதவியேற்றுக் கொண்ட திரு.பெ.புண்ணியமூர்த்தி அவர்கள் காலத்தில்தான் பாடசாலை புதிய மறுமலர்ச்சிக்குள்ளாகி துரித வள்ர்ச்சி கண்டிருந்தது. இவர் கல்வி அமைச்சிற்கு செய்த விண்ணப்பம் காரணமாக 1991ம் ஆண்டு "இலங்கை திருச்சபை தமிழ்க் கலவன் பாடசாலையாக" இருந்த இப்பாடசாலையை "கல்குடா நாமகள் வித்தியாலயமாக" பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அத்துடன் 01.01.1992ம் ஆண்டு இரண்டாம் தரப் பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டு ஆண்டுகள் தோறும் ஒவ்வொரு தரங்களாக வளர்ச்சி அடைந்து வந்தது. இந்நேரத்தில் ஆசிரியர் பற்றாக்குறையாக இருந்த போதும் தொண்டராசிரியர்களை உதவிக்கு வைத்துக்கொண்டும் கற்பித்தலை மேற்கொண்டார். பாடசாலைக் கீதமும், மாணவர்களின் கழுத்துப்பட்டியையும் அறிமுகம் செய்தார். பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ திரு.ஜோசப் பரராஜசிங்கத்தின் நிதி ஒதுக்கீட்டின் மூலமாக 80 அடி நீள கட்டிடம் ஒன்றையும் இவர் காலத்தில் அமைக்கப்பட்டது. 1994ம் ஆண்டு இடமாற்றம் பெற்றுச் செல்லும் போது மாணவர்கள் க.பொ.த சாதரணதரப் பரீட்சைக்கு முதன் முதலில் தோற்றியிருந்தனர்.

1994ம் ஆண்டு இறுதிப் பகுதியில் திரு.எஸ்.அழகரெட்னம் அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்றுயிருந்தார். இவருடைய காலத்தில் இப்பாடசாலையில் பயிற்றப்பட்ட சமூகக்கல்வி ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும் கடமையாற்றினேன். இதன் பின்னர் 2000ம் ஆண்டில் நான் அதிபராக கடமையேற்றுக் கொண்ட காலம் தொடக்கம் 4 ஆண்டுகள் வரைக்கும் எட்டு ஆசிரியர் களுடன் 11ம் தரம் வரைக்கும் பல்தரக் கற்பித்தலில் ஈடுபட்டு 5ம் தரப் புலமைப் பரிசில் என்றும், க.பொ.த சாதாரனதரப் பரீட்சையிலும் மாணவர்கள் குறிப்பிட்ட வெற்றியைப் பெற வழிவகுத்தேன்.

## 2000ம் ஆண்டின் பின் அதிபரின் செயற்பாடுகள்

2001ம் ஆண்டு எனது ஆலோசனையை கருத்திற்கொண்டு ஏற்கனவே இருந்த பாடசாலைச் சின்னத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி திரு.க.கதிர்காமநாதன் ஆசிரியரால் வரைந்தெடுக்கப்பட்டது. இதன் பின்னர் பாடசாலையில் ஆசிரியர், மாணவர்களின் கல்வி விருத்திக்கு அத்தியாவசியத் தேவையான நூலகம் காணப்படாமை குறைபாடக இருந்தது. இதன் நிமித்தம் 2002ம் ஆண்டு பெப்ரவரி மாதம் நூலகம் ஒன்று அமைக்கப்பட்டு வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.எஸ்.சரவணபவான் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இக்கால கட்டத்தில் பாடசாலையின் முன்பக்கம் வாழைச்சேனை ஈ.பி.டி.பி. பொறுப்பாளர்

திரு.சிவா அவர்கள் மூலமாக சுற்று மதில் ஒன்று அமைக்கப்பட்டது. இக்காலத்தில் கல்விச் சுற்றுலா, மற்றும் வலய ரீதியான உடற்பயிற்சி, அணிநடை, சாரணியம் என்ப வற்றில் மாணவர்கள் சிறந்து விளங்கினர். 2003ம் ஆண்டில் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ திரு.எஸ்.ஜெயானந்தமூர்த்தி அவர்களிடம் நான் கதைத்ததன் பிரகாரம் பாடசாலையின் பின்பகுதியில் ஒரு பகுதி சுற்றுமதில் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இக்காலகட்டத்தில் எனது விருப்பத்திற்கும், ஆலோசனைக்கும் இனங்க மிகப் பிரமாண்டமாக பொருட் கண்காட்சி ஒன்று 3 நாட்கள் இடம்பெற்ற தோடு இக்கண்காட்சியை இப்பாரளுமன்ற உறுப்பினரே ஆரம்பித்து வைத்தார். மாணவர்களின் கல்வியில் முன்னேற்ற மடைய தொண்டர் ஆசிரியர்களையும் சேர்த்துக்கொண்டு மாணவர்களின் கல்வியில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டது. மாணவர்களின் நலன் கருதி 40 அடி நீளம் கொண்ட வெவ்வேறு இரு தற்காலிக கொட்டில்கள் வகுப்பறைகள் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

இப்பாடசாலையில் மாணவர்கள் விளையாட்டுக்களில் சலைத்தவர்கள் அல்ல என்பதை வெளிக்கொணரும் வகை யில் 2004ம் ஆண்டு எனது ஆலோசனைக் கிணங்க உடற்கல்வி ஆசிரியர் திரு.பிரமிதன் அவர்கள் சிறிந்த வழிகாட்டலின் கீழ் அகில இலங்கை ரீதியாக குண்டு, ஈட்டி எறிதல் நிகழ்ச்சியில் செல்வன் சௌ.ரதீஸ்வரன் என்ற மாணவன் தெரிவாகியிருந்தார். (2004–2007 வரை தொடர்ந்தும் அகில இலங்கை ரீதியாகப் போட்டியிட்டு வருகின்றார்). அத்துடன் கலை, கலாச்சார ரீதியாக நாட்டுக்கூத்து, நாடகம், வில்லுப் பாட்டு, ஆடல் பாடல்கள் என மாணவர்கள் போட்டியிட்டிருந்தனர். அதேநேரம் விஞ்ஞான அறிவில் மாணவர்கள் மாகாண மட்டத்தில் போட்டியிட்டு வந்துள்ளமையும் குறிப்பிடத் தக்கதாகும். மாணவர்கள் எண்ணிக்கை 550 தாண்டி இருந்தது. நீண்டகால அயராத முயற்சி காரணமாக கல்வியில் திட்டமிடப்பட்ட வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு மாணவர் களின் கல்வி வேகத்தை அதிகரித்துக் கொண்டு ஆசிரியர்கள் அயராத பாடுபட்டு வந்த வேளையில் 26.12.2004ம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி ஆழிப்பேரலை காரணமாக பாடசாலை மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. சுமார் 3 அடி உயரத்தில் எமது வித்தியால யத்தினுள் உட்புகுந்த கடல் நீரானது, தற்காலிக கொட்டில்களை அழித்ததுடன் நிரந்தரக் கட்டிடத்தினை பகுதி அளவில் சேதத்திற்குள்ளாக்கியும், விடுமுறை காலமாக இருந்த காரணத்தினால் எமது வித்தியாலயத்தில் கல்வி கற்ற 66 மாணவர் களின் இன்னுயிர்களையும் காவுகொண்டது. இதில் தாய் தந்தையர்களை இழந்தவர்க ளாகவும், சகோதரர்களை இழந்த மாண வர்களாகவும் உள்ளடக்கி பாடசாலை சோகமாகப் பரிணமித்தது.

2005ம் ஆண்டு ஜனவரி, பெப்ரவரி மாதங்கள் வரை பாடசாலை இடைத் தங்கல் முகாமாக காணப்பட்டது. பின்னர் மக்களை வேறு இடத்திற்கு இடம்மாற்றப் பட்டனர் இவ்வேளையில் இன்னுயிர் நீத்த மாணவர்களோடு ஒன்றாகக் கூடிக்கழித்த மாணவர்களும் அதிபர், ஆசிரியர்களும் அவர்களின் அனுதாபத்தில் மூழ்கி வேதனையின் விளிம்பில் நின்றனர். இருந்த போதும் எனது விடாமுயற்சி காரணமாகவும், இவ்வாண்டில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்ற இருந்த மாணவர்களின் திடமான ஒத்துழைப்போடு பாடசாலை மீண்டும் படிப்படியாக கல்வி புகட்டும் அளவிற்கு உத்வேகத்துடன் வளர்ந்தது. இதேவேளை இன்னுயிர் நீத்த 66 மாணவர் களின் நினைவு என்றைக்கும் எமது மனதை விட்டு நீங்காது இருக்க வேண்டும் என்பதற்காக மாபெரும் நினைவாலயம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் என் உள்ளத்தில் பிறந்தது இதன் பிரகாரம் எனது ஆலோசனைக்கிணங்க

பலரிடமும் உதவி நாடிச் சென்று சிறப்பாக உலகத்தமிழர் வானொலி தாளம் எப்.எம், ஒபேர், எஸ்கோ போன்ற நிறுவனத்தாரி டமிருந்தும் இத்தாலி நாட்டைச் சேர்ந்த SCHMERVE MARIE LUCE என்பவரிடம் இருந்தும் பணத்தைப் பெற்று ஆசிரியர் களின், மாணவர்களின் ஒத்துழைப்போடு அயராது பாடுபட்டு இன்னுயிர் நீத்த மாணவர்களுக்கு 25 அடி உயரமான மாபெரும் நினைவுத்தூபி ஒன்று கட்டி முடிக்கப்பட்டது. இதனை முன்னால் வலயக்கல்விப் பணிப்பாளராக இருந்த U.L.M.ஜெயினுதீன், பிரதிக்கல்லிப் பணிப் பாளர் ஜனாப்.M.I.சேகுஅலி, கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.எஸ்.தங்கராஜா ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது. அத்துடன் சகல விதமான உதவிகளையும் முழுமையான அளவிற்கு பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு என்னால் பெற்றுக் கொடுக்கப்பட முடிந்தது இதில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள், வங்கிக்கணக்குகள் என்பன பெற்றுக் கொடுக்கப்பட்டது. அத்துடன் "லெபனான் அமெரிக்கன் கொமியூனிட்டி ஸ்கூல்" ஆசிரியர், மாணவர்களும் எமது வித்தியாலயத்திற்கு வருவதாக அன்பர் ஒருவர் தெரிவித்ததிற்கினங்க அங்கிருந்து அவர்கள் மூன்று தடவைகள் வருகை தந்திருந்த ஆசிரியர்கள், மாணவர்களினால் பாடசாலை சுத்தம் செய்யப்பட்டு சகல வழிகளிலும் பாடசாலை வளர்ச்சிக்கு உதவி புரிந்திருந்தனர். மாணவர் நலன் கருதி என்னால் விண்ணப்பம் செய்யப்பட்ட விளையாட்டுப் பொருட்கள், இரண்டு கணினிகள், ஒரு மேலெறி கருவி, மனைப் பொருளியலுக்கான மின் சாதனப் பொருட்கள், தற்காலிக தண்ணீதாங்கி அமைத்து குடிநீர் வசதி செய்தும், சிறுவர் பூந்தோட்டமும் அமைத்துத் தந்திருந்தனர்.

அரசாங்கத்தினால் பகுதி அளவில் பாதிக்கப்பட்ட பாடசாலையாக பிரகடனப் பட்டதினால் மேலும் "நோர்வே அகதிகள் புனர்வாழ்வுக் கழகமும், நோர்வே சொய்ஸ் ஹோட்டல் உரிமையாளரும் சேர்ந்து 100 அடி x 30 அடி கொண்ட ஒன்றுகூடல் மண்டபத்தின் உடனான மூன்று மாடிக் கட்டிடம் ஒன்றும், ஆசிரியர் விடுதி, 40அடி கொண்ட இரு வகுப்பறைக்கட்டிடம், மலசல கூடம், தண்ணீர்த்தாங்கி, சுற்று மதில் என்பவற்றை புதிதாக கட்டித்தருவதாகவும் பழைய கட்டிடங்களை புதிப்பித்துத் தருவ தாகவும் என்னிடம் கூறிய போது நான் வலயக்கல்விப்பணிப்பாளரிடம் சென்று ஆலோசனைபெற்று அனுமதி அளித்தேன் இதன்படி இவர்களால் பழைய கட்டிடங்கள் புதிப்பிக்கப்பட்டும், சீமெந்து கொண்டு நடைபாதையும் அமைத்துத் தந்தனர். அதேநேரம் கல்வி அமைச்சினால் திரு.க. கதிர்காமநாதன் ஆசிரியருக்கு சிறந்த ஆசிரியராகத் தெரிவு செய்து ஜனாதிபதி விருதான வித்தியாகீர்த்தி ஸ்ரீசமன்ன என்ற பட்டமும் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான செயற்பாடுகளின் அடிப்படையில் கட்டிடங்கள் அதிகரித்ததன் விளைவால் ஏற்கனவே இருந்த மைதானம் இல்லாமல் போய்விடும் எனற அபாயம் எனது மனதில் தோன்றியதன் விளைவாகவும், மாணவர்கள் அகில இலங்கை ரீதியாக விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றும் நிலையில் ஒரு விளையாட்டுமைதானமும் தேவை என்பதை உணர்ந்தேன். இதனடிப் படையில் எனது அயராத உழைப்புக் காரணமாக வண பிதா கி.ஞானகாருண்யன் அவர்களை நாடிய போது அவர்கள் மூலமாக 2007 ஜனவரி மாதம் கொழும்பு கிறிஸ்தவ சங்கத்தின் நிதியுதவியுடன் 2¼ ஏக்கர் காணியொன்று மைதானத்திற்கு கொள்வனவு செய்யப்பட்டது. இதற்கு பிரதி அதிபர் அவர்கள் முன்னின்று செயறபட்டிருந்தார். இவருடன் ஆசியர்களும் மற்றும் திரு.அ. ஜெயஜீவன் அதிபர், திரு.எஸ். புவிநாயகம் (ரூனி) என்பவர்கள் காணிபெற செயல் பட்டனர். அத்துடன் பாடசாலையில் மாண வர்கள் விவசாயப் பாடத்தைக் கற்று வந்த போதிலும் அவர்களுக்கு சிறந்த பயிற்சி அளிக்க விவசாயத்தோட்டம் ஒன்று இல்

லாதது பாரிய குறைபாடாக காணப்பட்டது. இதனை உணர்ந்த நான் விவசாயப் பாடத்திற்கு பொறுப்பானவரும், நூலக ஆசிரியருமான திரு.சு.ஜெகநாதன் ஆசிரியர் அவர்களிடம் கூறியபோது அவர் எனது ஆலோசனைக்கினங்க குறுகிய நிலப் பரப்பில் அழகிய விவசாயத் தோட்டம் ஒன்றை அமைத்து மாணவர்களை ஊக்குவிப்பதோடு அங்கு செய்விக்கப்பட்டு உற்பத்தியாகும் மரக்கறிகளை பாடசாலைக்கான உலக உணவுத்திட்டத்திற்கு வழங்கியும், மிகுதி ஆசிரியர் மாணவர்களுக்கு விற்பனை செய்யப்பட்டும், அதில் ஈட்டப்படும் வருமானத்தின் மூலமாக மாணவர்களின் வளர்ச்சிக்குத் தேவையான "பிறின்டர்" உபகரணமும், பாடசாலை நுலைவாயில் கட்டிடச் சுவரில் அழகிய கீதாசாரம் சுவர் ஓவியமும் வரைந்து தந்துள்ளார். இன்றும் இவ்விவசாயத் தோட்டம் பாடசாலைக்குப் பொருளாதார வளத்தை ஈட்டித்தருவது மாத்திரமன்றி சுற்றாடல் அழகைச் சேர்பதாகவும் அமைந்து விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

புதிதாகக் கட்டப்பட்ட புதிய மாடிக் கட்டிடத்தினை எனது ஆலோசனையின் பிரகாரம் ஆசிரியர்களும் மாணவர்களும் வழங்கிய ஒத்துழைப்புக் காரணமாக இக்கட்டிடம் 2007ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 13ம் திகதி வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி. சுபா சக்கரவர்த்தி அவர்களாலும் நோர்வேக்கான வதிவிடப் பிரதிநிதி திரு.ஜோன் கிறிஸ்டின்சன் அவர்களாலும் வைபக ரீதியாக திறந்து வைத்தனர். வித்தியாலயத்தில் நீண்ட காலமாக கணித ஆசிரியராக சேவையாற்றி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளத்தில் நீங்காத இடத்தைப் பிடித்தவரும் அனைத்துப் பாடங்களிலும் புலமைமிக்க சிறந்த ஆசிரியருக்கான பண்புகளைக் கொண்டவருமான திரு.வே.கார்த்திகேசு அவர்களுக்கு அவர் ஓய்வு பெற்று சென்ற வேளையில் பிரியாவிடை வைபவம் நடாத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவற்றுடன் பாடசாலையில் கல்வி தொடர்பான விருத்திக்கு பல வழிகளிலும் ஆசிரியர்கள் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர். குறிப்பாக இளங்கோவன் ஆசிரியர் கணனிக்கல்வி மற்றும் கற்பித்தல் சாதனங்களின் பயன்பாடு என்பன தொடர்பாக மாணவர்களுக்கு அறிவினை அளித்து வருவதுடன், எனது ஆலோசனையின் பெயரில் க.பொ.த.சா/த, உயர்தர மாணவர்களுக்கான "தேசப்படக்கல்வி" என்னும் பெயரில் இறுவட்டு ஒன்றும் வெளியிடப் பட்டதுடன் ஆசிரிய வள நிலையத்தில் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு ஒன்றையும் நடாத்தியமை குறிப்படத்தக்க தாகும்.

இந்த வகையில் பெற்றோர்களும், மாணவர்களும் பெரும் பங்காற்றி வருவதுடன் புதிய ஆசிரியர்கள் பலரும் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல இடங்களிலும் இருந்தும் இங்கு வந்து கற்பித்து வருவதனால் மாணவர்கள் மத்தியில் கல்வி அடைவு மட்டத்தில் குறிப்பிட்ட காலகட்டத்தில் சிறந்த பெறுபேற்றைப் பெற வழிவகுக்கும் எனலாம் எனினும் நீண்ட காலமாக விஞ்ஞானம், ஆங்கிலப் பாடத்திற்கும் ஆசிரியர்கள் இல்லாது பின்தங்கிய நிலையிலிருப்பதும் அத்துடன் தற்போது கணிதப்பாடத்திற்கும் ஆசிரியர் இல்லாமையும் மிகுந்த குறைபாடாகவுள்ளது. இவை நிவர்த்தி செய்யப்படும் பட்சத்தில் மாணவர்கள் வேறு பாடசாலைக்கு நாடிச் செல்லும் நிலை மாறி சிறந்த பெறுபேற்றை இப்பாடசாலை பெற வழிவகுக்கலாம். தற்போது 425 மாணவர்களும், 23 ஆசிரியர்களும் கல்வி புகட்டி வருகின்றனர். இவ்வாறாக பாடசாலை இன்று ஒரு குறிப்பிடத்தக்க வளர்சியை கண்டுள்ளமை இப்பாடசாலையில் என்னுடன் சேர்ந்து பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர்களின் கூட்டுறவான ஒத்துழைப்பும் செயற்பாடும் காரணம் என்று கூறலாம்.

# ஆரம்பகால கல்குடாக் கிராமமும் வரலாற்றுப் பின்னணியும்



வித்தியா கீர்த்தி
திரு.க.கதிர்காமநாதன்
BA, Tr.Tamil

கல்குடா கிராமம் மட்டக்களப்பு மாவட்டத்தில் வடக்கிலும் கிழக்கிலும் வங்களா விரிகுடா கடலையும், தெற்கேயும், மேற்கேயும் குடியேற்றக்கிராமங்களையும் எல்லைகளாக கொண்டமைந்துள்ள இயற்கை எழில்கொஞ்சும் வளமிக்க கிராமமாகக் காணப்படுகின்றது. கல்குடாவில் பாசிக்குடா பட்டியடிச்சேனை (ஆரம்ப காலத்தில் பட்டியடிச்சேனை பழஞ்சேனை எனப்பட்டது) ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாகவும், வேடுவ இனத்தவர்களை ஆரம்பகால ஆதிக்குடிகளாகவும் கொண்டமைந்திருந்தது. நீராடுவதற்குரிய அழகிய இயற்கை கடல்வெளிகளும், உல்லாசபுரிக் ஹோட்டல்களையும், எக்காலத்திலும் பெறக்கூடிய கடலுணவுகளையும் பொருளாதாரப் பயிரான தென்னை வளங்களையும் கொண்டமைந்த இடமாகக் திகழ்ந்தது.

### *1901 ஆம் ஆண்டில்*
### பொருளாதாரமிக்க துறைமுகம்

முதலாம் உலக மகா யுத்த காலமான 1914ம் ஆண்டு தொடக்கம் 1920ம் ஆண்டு காலப்பகுதிகளிலும், இரண்டாம் உலக மகா யுத்த காலமான 1939ம் ஆண்டு தொடக்கம் 1945 ஆம் ஆண்டு காலங்கள் வரையிலும் கல்குடாத் துறைமுகம் உலக நாடுகள் பலவற்றிலும் பெயர்பெற்று விளங்கியதுடன், கிழக்கு மாநிலத்திற்கும், மத்திய மலைநாடு, தென் மாகாணங்கள் வரையிலுமான மக்களுக்கு உணவுப் பண்டங்களை வழங்கும் சேவையினைச் செய்துள்ளது. 1901 ஆம் ஆண்டு இத்துறைமுகம் கட்டப்பட்டுள்ளதாக இதில் காணப்படும் கல்வெட்டின் மூலம் அறியக் கூடியதாகவுள்ளது. கொழும்பு, காலி, திருகோணமலை, ஆகிய துறைமுகங்களுக்குப் போட்டியாக ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தில் முன்னிலை வகித்து வந்துள்ளது.

கல்குடாத் துறைமுகத்திற்கு உறுதுணையாக வாழைச்சேனை கொழும்பு பிரதான வீதியில் ஓட்டமாவடியில் 1922ம் ஆண்டு பாலம் ஒன்று அமைக்கப்பட்டது. தென்பகுதிக்கு பொருட்களை கொண்டு செல்லும் முகமாக புகையிரத வீதி அமைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. கல்குடா துறைமுகத்திற்கு கப்பல்களில் வரும் பொருட்களை "தெப்பத்தின்" மூலமாக இறக்கி "நிண்டுசி" என்ற பாரம்தூக்கும் கருவி மூலமாக கரையிலுள்ள ரேகு என அழைக்கப்படும் களஞ்சியத்தில் வைக்கப்பட்டது. துறைமுகத்தில் மூன்று பண்டகசாலைகள் இருந்தன. இவற்றில் நிலத்தின் கீழான களஞ்சிய அறைகளும் காணப்பட்டன. இவை "ரேகு" என்ற டச்சுச் சொல்லால் அழைக்கப்பட்டது. இறக்கப்பட்ட பொருட்களை டக் வீதியூடாக காலால் மிதித்துச் செல்லும் டக் வண்டியில் ஏற்றி 2 கிலோ மீற்றர் தூரத்திலிருந்த கல்மடு புகைவண்டி நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு இலங்கையின் நாலாபுறங்களுக்கும் அனுப்பப்பட்டன. அத்துடன் மத்திய மலைநாடான மாத்தளை, பதுளை ஆகிய பிரதேசங்களிலிருந்து மரக்கறி வியாபாரிகள் மாட்டு வண்டிகளில் ஆங்கில மரக்கறிகளை இப்பகுதியில் விற்றுவிட்டு துறைமுகத்திலுள்ள அரிசி, பருப்பு, மாசிக்கருவாடு, சீனி, செத்தல் மிளகாய், ஓடு, சீமெந்து ஆகியவற்றை ஏற்றிச்

சென்றனர். இத்தகைய வண்டில்களை 'பது ளைக்கரத்தை' எனவும் அழைத்தனர். இத்துடன் யானை வண்டில்களைக் கொண்டும் பொருட் களை ஏற்றிச் சென்றதாகவும் பாரமான வேலைகளை யானைகளைக் கொண்டும் செய்வித்ததாகவும் கூறப்படுகின்றது.



துறைமுகம் இருந்த இடம்

உலக வல்லரசு நாடுகளான பிரித் தானியா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கிடையே 1939ம் ஆண்டில் இரண்டாவது உலக மகா யுத்தம் ஆரம்பமாகியது. இதில் இலங்கை பிரித்தானியரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்ததால் அக்காலகட்டத்தில் 1940ம் ஆண்டில் திருகோண மலைத் துறைமுகத்திற்கு ஜப்பான் குண்டு களை வீசியது. 1945ம் ஆண்டில் யுத்தம் முடிவுறும் தறுவாயில் கல்குடாத்துறை முகம், கொழும்பு, காலித்துறை முகங்களுக் கும் குண்டுகளை வீசி அழிவடையச் செய் தனர். அக்காலத்தில் உக்கிரமான விமானச் சண்டைகளும் இப்பகுதியில் ஏற்பட்டிருந்தது. வர்த்தகத்தில் ஈடுபட்ட இரண்டு கப்பல்களும் பாசிக்குடா கடலில் தாக்கப்பட்டு கரையில் இருந்து ஏழுபாக கடல் ஆழத்தில் மூழ்கிப் போய் உள்ளதற்கான கப்பலின் எச்சங்கள் இன்றும் சான்று பகர்கின்றன. ஜப்பான் வீசிய குண்டு காரணமாக கல்குடாத்துறைமுகம் பாதிக்கப்பட்டாலும் அதற்குப்பிறகும் குறிப்பி டத்தக்களவு இயங்கினாலும் பின்னர் செய லற்றுப் போய்விட்டது. தற்போது துறைமுகம் இருந்ததற்கான எச்சங்களுடன் அரச பாது காப்புப் படைகளினது அரண்களாகவுள்ளன.

## *மக்களின் குடியியல் நிலை*

கல்குடா கிராமத்தில் பெரும் காடுக ளைக் கொண்டிருந்தமையால் சுமார் முப்பது தொடக்கம் ஐம்பது வரையிலுமான வேடுவக் குடும்பங்கள் காடுகளைவெட்டி சிறுசிறு குடிசை களில் வாழ்ந்து வந்துள்ளனர். பின்னர் அயல் கிராமங்களான களுதா வளை, கிரான்குளம், சந்தி வெளி, காயான்கேணி போன்ற இன்னும் பல கிரா மங்களிலிருந்தும் பிழைப் புத் தேடி பலரும் குடியே றத் தொடங்கினர். ஆரம்ப கால குடிகளான வேடுவ இன மக்கள் மரவள்ளிச் செய்கையிலும், மீன்பிடித் தொழிலிலும், வள்ளிக் கிழங்கு தோண்டி எடுத்தலுமே பிரதான தொழி லாகச் செய்து வந்தனர். இக்காலகட்டத்தில் கந்தன் செட்டியார் என்பவர் ஆரம்பத்தில் பாசிக்குடாவில் காடுகளை வெட்டி அவரது பிள்ளைகளும், உறவினர்களுமாக எட்டு குடும்பங்களுடன் குடியேறியிருந்தார். பின்னர் நாளடைவில் பல குடும்பங்களாக வளர்ச்சி யடையத் தொடங்கியது. இவர்கள் சேனைப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டனர். இதில் பிர தானமாக சோளப்பயிர், மீன்பிடி மரவள்ளிச் செய்கை என தொழிலில் ஈடுபட்டனர். சோளப் பயிர்செய்கையில் பெருமளவு வர்த்தகத்தில் ஈடுபட்டு வருமானத்தையும் ஈட்டிக்கொண்டனர். இவர்களது குலதெய்வமாக மாரியம்மனை வணங்கி வந்தனர். துறைமுகச் சந்தியில் துறைமுகத்தில் வேலை செய்யும் தொழிலா ளர்கள் தங்குவதற்கென அக்காலத்தில் மாடி வீடுகள் கட்டப்பட்டிருந்தது. அக்காலத்தில் 1886 இல் 'சேர்ச் ஒப் இங்கிலாந்து அங்கி லிக்கன்' என்ற பெயரில் பிரித்தானியரால் தமிழ்ப்பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டி ருந்தது. பின்னர் இலங்கைத் திருச்சபை தமிழ் கலவன் பாடசாலை என்றும் நாளடைவில் கல்குடா நாமகள் வித்தியாலயம் என்றும் பெயர்

மாற்றம் பெற்ற பாடசாலையாக திகழ்ந்து வருகின்றது. 1931ம் ஆண்டு கல்குடா மக்களின் தொகை (11000) பதினோராயிரமாக காணப் பட்டதாக புள்ளிவிபரங்கள் கூறுகின்றது. 1956ல் கல்குடா பாரளுமன்ற உறுப்பினராக இருந்த திரு.நல்லையா என்பவரால் ஐம்பது சிறிய கல்வீடுகள் கல்குடா கிராமத்தில் நிரந் தரமாக வசித்தவர்களுக்கு கட்டிக் கொடுக் கப்பட்டது. இதேவேளை காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை நீர்கொழும்பு, பொலனறுவை போன்ற மாவட்டங்களில் இருந்தும் கடற்க ரையை அண்டிய பகுதியில் மீன்பிடித்தொழில் வசதிகருதி படகுகளில் வந்த தென் பகுதி சிங்கள மீனவர்கள் வாடி கட்டி தொழிலில் ஈடுபட்டனர். பின்னர் அது வலைவாடி சிங்களக் கிராமமாக மாறியிருந்தது. இவர்கள் தமிழ், சிங் கள கலப்புத் திருமணமும் செய்துகொண்டனர். அத்துடன் சிங்கள மகா வித்தியாலயமும் சிங்கள மாணவர்களின் நலன் கருதி அமைக் கப்பட்டிருந்தது. இதில் இறுதியாக மட்டக்க ளப்பைச் சேர்ந்த திரு.ஜே.சீ.பீற்றர் இறுதிக் கால அதிபராகக் கடமையாற்றியிருந்தார். 1950ம் ஆண்டு காலப் பகுதியில் இப்பகுதி யின் பலமிக்க கிராம சபைத் தலைவராக இங்குள்ள பிரமுகர்களின் ஆதரவுடன் திரு.கணபதிப்பிள்ளை அண்ணாவியார் சிறந்து விளங்கியிருந்தார். 90 பின்னர் நாட்டில் ஏற் பட்ட இனக்கலவரம் காரணமாக மக்கள் இடம் பெயர்ந்து சென்றதனால் இப்பகுதி அழிவ டைந்த நிலையில் காணப்படுகின்றது. பின்னர் மக்களின் அயராத உழைப்பு காரணமாக படிப்படியாக முன்னேறி கல்வியிலும் அரசாங் கத் தொழிலிலும் முன்னேற்றம் கண்டிருந் தனர். தற்போது 693 குடும்பங்கள் வசித்து வருவதாக புள்ளி விபரங்கள் கூறுகின்றது.

## பொருளாதார நிலை

பாசிக்குடாவிலிருந்து மேற்குப் புறமாக பேத்தாழை வரைக்கும் ஆங்கிலேயருக்குச் சொந்தமான தென்னந் தோட்டங்கள் இருந்தன. இதில் ஐந்நூறு ஏக்கர் தென்னந்தோட்டம் துரையின் தோட்டம் என அழைக்கப்பட்டது. இதுவே மிகப் பெரிய தென்னந்தோட்டமாக காணப்பட்டது. இதைவிட தெற்கே கல்குடா புகையிரத நிலையம் வரையிலும் பல தென்னந் தோட்டங்களும் காணப்பட்டன. ஜேம்ஸ் தோட்டம், ச.குமாரசாமி தோட்டம், கொஸ்த் தாப்பர் தோட்டம், சங்கரப்பிள்ளை தோட்டம் இதைவிட சீனிமுகம்மது, ஈசாலெவ்வை தோட்டங்களும் காணப்பட்டன. (இவ்விரு தோட்டங்களும் இப்பகுதி மக்களின் குடி யேற்றத்திற்காக விலையாகப் பெறப்பட்டுள்ளன) இங்கு உற்பத்தியாகும் தேங்காய்கள் மற்றும் கொப்பறாக்கள் துறைமுகத்திற்கு வரும் கப்பல்களில் ஏற்றப்பட்டு பிற இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டது. தேங்காய்களை கப்பல்களில் ஏற்றும்போது தேங்காயை பல வாறாக ஒன்றாகப் பிணைத்து கடலில் வீசி எறிந்து பெரிய வட்டமாக வளைத்து உயர மான பெரும் குவியலாக மாற்றி தெப்பமாக வடக்கயிறு மூலமாக கப்பல்களில் அக்கால கட்டத்தில் ஏற்றிச் சென்றிருந்தார்கள். கடற் கரை பிரதேசம் தென்னை பயிற்செய்கைக்கு வளமான இடமாக காணப்பட்டது. இதனால் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் ஆயிரக் கணக்கான தேங்காய்கள் கப்பல்களில் ஏற்றப்பட்டிருந்தது.

தற்போது துரையின் ஐந்நூறு ஏக்கர் தோட்டமாக இருந்த தென்னந்தோட்டங்களை அரசாங்கம் 1974 ஆம் ஆண்டு சுவீகரித்து தென்னை அதிகார சபை ஊடாக அரசாங்க தோட்டங்களாக மாற்றியமைத்தது. தற்போது தென்னை உற்பத்தி தோட்டமாகவும், தென்னை மாதிரி தோட்டமாகவும் அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இக் காலகட்டத்தில் இலங்கையில் உல்லாச மாகக் கடலில் நீராடுவதற்கு ஏற்ற இடமாக பாசிக்குடா கடல் சிறப்புற்று விளங்கியதால், 1974 ஆம் ஆண்டு 'இம்பிரியல் ஹோட்டல்', 'சன்அன்டன் ஹோட்டல்', 'சன்றைஸ் ஹோட் டல்' மற்றும் சிறியரக 'ஹபானா'க்களும் காணப்பட்டது. இது இப்பகுதி மக்களின்

மிகவும் பொருளாதாரமிக்க தொழிலாக அமைந்து காணப்பட்டது. இந்நிலையில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் ஹுளன்ஹே பங்களா, கண்ணாடி பங்களா, துறைமுக உல்லாச விடுதி என்பன சிறப்புற்று விளங்கி யிருந்தது. உலகில் நாலா பாகங்களிலி ருந்தும் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் வந்து குவிந்திருந்த இடமாக பாசிக்குடா காணப்பட்டது. இந்தளவில் 1938ம் ஆண்டில் சீனாவிலிருந்து பாசிக்குடாவிற்கு மஞ்சள் நிறக் கப்பல் ஒன்று வருகை தந்திருந்தது. அதனை மக்கள் நாளாந்தம் ஏறிப் பார்வை யிட்டனர். அதன் பின்னர் 1960ம் ஆண்டில் அமெரிக்காவிலிருந்து ஒரு கப்பல் கிறிஸ்தவ மதத்தினை பரப்பும் நோக்கில் பாசிக்குடா கடலில் தரித்துநின்றது. இதனைப் பார்வையிட வந்த மக்களுக்கு இயேசுவைப் பற்றிய சுவி ஷேசக நூல்கள் இலவசமாக வழங்கப்பட்டது. பெரும்பாலும் போர்த்துக்கீசர் இப்பகுதியில் நிலைகொண்டிருந்ததால் இவர்கள் வழியில் வந்த பறங்கியின மக்கள் இப்பகுதியில் வாழ்ந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

பாசிக்குடாக் கடலில் பல வகையான கடலுணவுகள் எக் காலத்திலும் கிடைக்கக்கூடியதா கவும், மக்களின் பொருளாதாரத்தினை மேம் படுத்துவதற்காகவும் பெரும் பங்களித்திருந்தது. பலவகையான இறால், பெப்ரவரி மார்ச், மாதங்களில் ஆயிரக்கணக்காக பிடிக்கப்பட்டு வந்தது. டைக்கர் இறால், சிங்கி இறால், வெள் இறால், மணல் இறால் என இறால் இனங்களும், கணவாய், தளப்பத்து, அறுக் குளா, பாரை, கொடுவா, சூரை, திருக்கை, சுறா என ஆழ்கடல் மீனினங்களும், கரை வலை மூலம் பிடிக்கப்படும் மீனினங்களும், நடையில் வலை வீசிப் பிடிக்கும் சிறியரக மீனினங்களும் பிடிக்கப்படும். அத்துடன் நிற மீன்கள், பலவகையான அட்டைகளும், நண்டு என்பன அக்காலத்திலிருந்து இன்றுவரை ஏராளமாக பிடிக்கப்பட்டு வருகின்றது. இத்துடன் கடலில் கண்கவரும் பளிங்குப் பாறைகளும், முருகைக்கற் பாறைகளும் சங்கு வகைகளும் விஷம் கொண்ட கடல் உயிரினங்களும் ஏராளமாக காணப்படுவதும் சிறப்பம்சமாகும்.

## வெளிச்ச வீடு (நோனாக்கோரி)

மீனவர்களும் அக்காலத்தில் துறை முகத்துக்கு வரும் கப்பல்களும் கரையை இலகுவாக இனங்காண்பதற்கென்று துறை முகத்திலிருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்தில் தற்போது முருகன் கோயில் அமைந்துள்ள உயர்ந்த பாறைக் கல்லின் மேல் முருகைக் கல்லினாலும், கருங்கல் சீமெந்தைக் கொண்டும் கூம்பு வடிவில் வெளிச்ச வீடு ஒன்று கட்டப் பட்டிருந்தது. வெள்ளைக்காரப் பெண்ணின் அமைப்பில் இக்கோரி கட்டப்பட்டிருந்ததினால்


சுனாமியினால் சிதைவடைந்து போயுள்ள வெளிச்சவீட்டுச் சிதைவு

இதனை நோனாக்கோரி என்றழைத்தனர். ஐம்பதடி உயரமாக இது காணப்பட்டபோதி லும் காலம் செல்லச்செல்லக் குறைவடைந்து. 2004ம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி ஆழிப்பேரலை யினால் முற்றாக அழிவடைந்துவிட்டது. எனி னும் அதன் எச்சங்கள் இன்றும் உயர்ந்த பாறைக்கல்லில் காணப்படுகின்றது.

## கோயில்கள்

கல்குடாவில் பிரசித்திபெற்ற வகையில் கண்ணகி அம்மன் கோயில் கடற்கரையை அண்டிய பிரதேசத்தில் காணப்பட்டிருந்தது. பின்னர் ஏற்பட்ட அசம்பாவிதம் காரணமாக கல்குடா மத்தியில் புதிதாக அமைக்கப்பட்டது.

இத்துடன் பிள்ளையார் கோயில், காளி அம்மன் கோயில், விஷ்னு கோயில், துறைமுகம் அமைந்திருந்த இடத்தில் கத்தோலிக்க ஆலயம் இன்றும் மக்கள் தரிசிக்க முடியாத நிலை யிலே அமைந்து காணப்படுகிறது. அத்துடன் அந்தோனியார் கோயில் என்பன சிறப்புற்று விளங்குகிறது பாசிக்குடாவைப் பொறுத்தவரை யில் சுனாமி ஆழிப்பேரலையில் கூட சிறிய சேதங்களுடன் கடலலை மோதும் கடற்க ரைக்கு அருகே கம்பீரமாக கோயில் கொண் டருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் முருகன் கோயில் சக்தி படைத்த ஆலயமாக காணப்படுகிறது. இத்துடன் இப்பகுதி மக்களின் குல தெய்வமான மாரியம்மன் ஆலயமும் சிறப்புற்று விளங்குகிறது.

### *அனர்த்தங்கள்*

உள்நாடு தொடக்கம் வெளிநாடு வரை பலரையும் கவர்ந்திழுத்த வனப்புமிக்க கல்குடா கிராமம், இரண்டாம் உலகமகா யுத்தத்தின் போது 1945 ஆம் ஆண்டு ஜப்பான் வீசிய குண்டினால் கல்குடாத் துறைமுகம் சிதைவடைந்திருந்தது. இது இப்பகுதியின் ஆரம்ப அழிவாக அமைந்திருந்தது. 1978ஆம் ஆண்டு வீசிய பெரும் சூறாவளிக் காற்றினா லும், கடலலைப் பெருக்கத்தினாலும் ஏராள மான தென்னை மரங்களும், வீடுகளும் அழி வடைந்தன. இதில் ஏழு பொது மக்கள் பலியாகியதுடன் மக்கள் இடம் பெயர்ந்திருந் தனர். 1983 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட கலவரம் காரணமாகவும், 1990 ஆம் ஆண்டு ஏற்பட்ட அசம்பாவிதங்கள் காரணமாகவும் உல்லாசப்பிரயாணிகளின் வரவின்மையாலும், ஹோட்டல்கள் அழிவடைந்தமையாலும் மக்கள் பொருளாதாரத்தில் முடக்கப்பட்டிருந்தனர். இதன் பின்னர் மக்கள் தமது பொருளாதாரத் திற்காக கடற்கரையோரங்களில் காணப்படும் சுண்ணாம்புக்கற்கள், முருகைக்கற்கள் என்ப வற்றை தோண்டியெடுத்து சூளைகளை அமைத்து சுண்ணாம்பு உற்பத்தியில் ஈடுபட்ட னர். இதனை தென் பகுதி பிரதேசங்களுக்கு வியாபாரிகள் மூலமாக கொண்டு செல்லப் பட்டது. இவர்களை போன்று ஏனைய கிராம மக்களும் இத்தொழிலை ஆரம்பித்ததன் விளை வாக உடனடியாக கல்குடாவில் உள்ள சமூக புத்திஜீவிகள் பலவாறு முயன்று தடுத்திருந் தனர். இவ்விளைவின் தாக்கமே இப் பிரதே சத்தின் மிதமிஞ்சிய அழிவிற்கு காரணமாகி யது. இதன் தொடர்ச்சியாக 2004 ஆம் ஆண்டு 12 மாதம் 26ந் திகதி ஏற்பட்ட சுனாமி ஆழிப் பேரலை காரணமாக இப்பகுதி முற்றாக அழிவடைந்தது. இதில் பாசிக்குடாக்கிராமம் இனங்காண முடியாத அளவிற்கு முற்றாக அழிக்கப்பட்டது. அத்துடன் கல்குடாவின் கடற்கரையிலிருந்த ஒரு பகுதி முற்றாக அழிவடைந்திருந்தது. இங்கு 350 மேற்பட்ட பொதுமக்கள் பலியாகியிருந்தனர். இதில் 66 பாடசாலை மாணவர்களும் உள்ளடக்கப் பட்டிருந்தனர். அத்துடன் 672 வீடுகள் முழுமை யாகவும் 43 வீடுகள் பகுதியளவிலும் அழிவ டைந்திருந்தது. ஆழிப்பேரலை காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து ஒருவருட காலமாக தற்காலிக வாழ்விடங்களில் தங்கவைக்கப்பட் டிருந்தனர். பின்னர் ஜீ.ரி.சற் என்ற தனியார் நிறுவனம் மூலமாக மீள்குடியேற்றத் திட்டத்தின் கீழ் பாசிக்குடாவிலும் கல்குடாவின் ஒரு பகுதியிலும் வசித்த மக்களை பட்டியடிச்சேனை கிராமத்திலும் பாசிக்குடாவில் ஒரு பகுதி மக்களை பாசிக்குடா தென்னை பயிர்ச்செய் கைத் தோட்டத்தின் பின் புறமாகவும், கல் குடாவின் இன்னுமொரு பகுதியினரை மருத நகர் பகுதியிலும் குடியமர்த்தியுள்ளனர்.

இக் கிராமக்களின் நெஞ்சைவிட்டு அகலாத மிகப்பெரும் அனர்த்தத்தை சுனாமி ஆழிப்பேரலை ஏற்படுத்தியிருந்தது. மிகத் துரிதமாக பொருளாதாரத்திலும் கல்வியிலும், வளர்ச்சியடைந்து கொண்டு வந்த இக்கிராம மக்களை மிகவும் பின் தள்ளிய நிலைக்கு உள்ளாக்கியிருந்தது. எனினும் தற்போது மெல்ல மெல்ல இயல்பு வாழ்கைக்கு திரும்பும் இப் பகுதி மக்கள் தாங்கள் வாழ்ந்த சொந்த நிலத்தை இன்றும் மறக்க முடியாது ஏக்கப் பெருமூச்செறிந்தவர்களாக வாழ்ந்துகொண்டி ருப்பதை அவர்கள் மூலமாக நாம் அறியக் கூடியதாகவுள்ளது. ■



திரு.ந.ஜெயகரன்
BA



# சமூகம் நோக்கிய பணிகளில் ஆலயங்கள்

சமூகம் சமுதாயம் என்ற கட்டுக்கோப்புக்குள் வாழக் கற்றுக் கொண்ட மனிதன் நெறிமுறையான வாழ்க்கை வாழ்வதற்கு தோற்றுவித்ததே மதங்களாகும். மதங்களை அடிப்படை யாகக் கொண்டு ஆலயங்கள் தோற்றம் பெற்றன காலப்போக்கில் சமூகத்துடன் இரண்டறக் கலந்தன. சமூகம் ஆலயத்தை நாடியது, ஆலயம் சமூகத்தை நாடிச் சென்றது. மக்கள் ஆலயத்தின் புனிதத்துவத்தை உணர்ந்தனர். சமூக வாழ்கையின் ஒவ்வொரு அத்தியாயத்தையும், அம்சத்தையும் ஆலயத் துடன் இணைத்தனர். இதனை அடிப்படை யாகக் கொண்டே "ஆலயம் தொழுவது சாலவும் நன்று", "கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற மாணிக்க வாசகரின் உணர்வுகள் கோயிலை அடிப்ப டையாகக் கொண்டு தோற்றம் பெறலாயின.

அப்பர் பெருமானின் பாசுரங்கள் ஆல யத்தின் தூய்மைத் தன்மையை வெளிப்படுத் துகின்றது. " நிலைபெறுமா ரெண்ணுதியேல் நெஞ்சே நீ வா" எனத் தொடங்கும் பாடல் ஆலயத்திற்கு நாம் ஆற்றும் பணியை வெளிப்படுத்தி நிற்கின்றது. முற்காலத்தில் கோயிலானது வழிபாட்டிற்கு மட்டுமின்றி வாழ்கையின் பல்வேறு அம்சங்களையும் தழுவியதாய் இருந்தமை வரலாற்றைப் படிக்கும் போது தெளிவாகும். இத்தகைய பண்பு சோழப் பெருமன்னர் ஆட்சிக் காலத்தில் இருந்து வளர்ந்து வந்தது.

சோழர்காலப் பகுதியிலிருந்து கோயில் தொடர்பான கோட்பாடுகள் சமூகத்தில் முக் கியத்துவம் பெறுவதை அவதானிக்கலாம். சமூகத்தின் கோயில் பற்றிய கருத்தும் சிந்தனையும் புது வடிவம் பெற்றன.

1. ஆகம அடிப்படையில் ஆலயம் அமைத்தல்.
2. ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
3. ஊருக்கொரு கோயில் கட்டல்.
4. உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்.
5. கோயில் தத்துவத்திற்கு எதிரான சிந்தனைகள்.
6. சாதி, மதம், குலம், கோத்திரப்பாகு பாட்டிற்கு ஆலயங்கள் நிலைக் களமாகியது.

இவ்வாறு கோயில் தத்துவத்தில் - கோட்பாட்டில் - கருத்தில் - பகுத்தறிவாதச் சிந்தனையில் மாற்றங்கள் பல காணப்ப டுவதை வரலாறுகள் மூலம் கண்டுகொள்ள முடிகிறது.

ஆகம அடிப்படையில் கோயில் அமைக்கும் கட்டிடங்களை சோழராட்சிக்

காலத்திலிருந்து ஆரம்பமாகி விஜயநகரப் பேரரசு காலத்தில் உச்ச நிலை அடைந்தது. கற்பக்கிரகத்தின் அளவுப் பரிமாணங்களுக் கேற்ப கோயில் அமைக்கும் முறை ஆகமச் சார்புடையது. நாயன் மார்களும் ஆழ்வார்களும் பக்தி நெறியை வளர்க்க வென எடுத்த முயற்சிகள் இந்துக்களின் மானசீக உணர்வு களை வென்ற முயற்சிகளாகும்.

"நாமார்க்கும் குடியல்லோம் யமனை அஞ்சோம் நரகத்தில் இடர்படோம்" என்ற அப்பரின் திருவாக்கு அவரின் நெஞ்சுறுதியை வெளிப்படுத்துகின்றது. இறைவன் மீது பக்தி கொண்ட பக்தன் தன் நிலைமறந்து, தன் உணர்விழந்து, தன் உள்ளக்கிடக்கையை தனது குறைகள் துன்ப துயரங்களை இறைவனிடம் ஒப்புவித்து தொழுது வணங்கும் உயர்ந்த இடமே கோயிலாகும்.

## அப்பர் சுவாமிகள்

"ஆவுரித்து தின்றுழலும் புலைய ரேனுங்
கங்கைவார் சடைக்கரத்தார்க் கன்பராகில்
அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே"

என்ற உண்மையம் இறைவன் குணம் குறிகள் அற்றவன், சாதி, மத பேதங்களுக்கு அப்பாற்பட்டவன் என்பதை உணர்த்துகின்றான்.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"

என்ற கூற்றின் உண்மைத்தத்துவத்தை கருத் தூன்றி நோக்கின் தனிமனிதனுக்கும் ஆலயத்திற்கும் சமூகத்திற்கும் உள்ள இணையற்ற பிணைப்பு வெளிப்படும். இதே போன்று

"தாயிற் சிறந்த கோயிலும் இல்லை
தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை"

குடியிருந்த கோயில் என்ற கூற்று கோயிலின் மற்றுமொரு கருத்தை வெளிப்ப டுத்துகின்றது.

பிராமணியமும் அதன் வேதங்களும் சாதி, சமூக, சமய அமைப்பில் பாரிய தாக்கத்தை விளைவித்து ஏனையவர்களை தாழ்த்தியும் பேச ஆரம்பித்தனர். இருக்கு வேதத்தில், புருஷ சூத்திரம் எனும் பகுதியில் வர்ண – சாதிபேதம் கூறப்படுகின்றது. ஆலயங்களில் வேதமும், சாதி குல ஒழுக்க வேறுபாடுகளும், விஸ்பரூபம் எடுத்த போது சைவசித்தாந்தக் கோட்பாடுகள் வேரூன்ற ஆரம்பித்தன. சித்தர்களினதும் சித்தாந்திகளினதும் தோற்றமும் பிராமணிய எதிர்ப்பு வாதமும், கோயிலையும், கடவுளையும் மனிதனோடு தொடர்புபடுத்தின "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற கருத்தும்,

"யாதொரு தெய்வம் கொண்டீர்
அத்தெய்வமாகி யாங்கே
மாதொரு பாகனார் தாம் வருவார்"
(சிவஞான சித்தியார்)

என்ற கருத்தும் வழிபாட்டின் ஒருமைத்துவத்தை வெளிப்படுத்துவன

ஆலயத்திற்கும், உடலுக்கும் உள்ள தொடர்பினை பின்வரும் அட்டவனை வெளிப் படுத்துகின்றது.

| உறுப்பு | மண்டபம் | ஆதாரங்கள | தத்துவம் | தெய்வம் |
|---|---|---|---|---|
| தலை | கற்பக்கிரகம் | மூலாதாரம் | அதிதேவதை | விநாயகர், முருகன் |
| கழுத்து | அர்த்தமண்டபம் | சுவாதிஸ்டானம் | பிருதுவி | பிரம்மா, சரஷ்வதி |
| மார்பு | மகாமண்டபம் | மணிபூரகம் | அப்புதத்துவம் | திருமால், லட்சுமி |
| வயிறு | ஸ்நானமண்டபம் | அநாகதம் | தேயுதத்துவம் | சிவன், சக்தி |
| கால்கள் | அலங்கார மண்டபம் | விசுத்தி | வாயுதத்துவம் | மகேஸ்வரன், மகேஸ்வரி |
| பாதம் | கோபுர வாசல் | ஆக்ஞை | ஆகாயதத்துவம் | சுதாசிவம், மனோன்மனி |

நாயன்மார் பலரும் சித்தர்களும் இறைவனை உள்ளத்துள் கண்டனர். பூசலார் உள்ளத்துள் கோயில்கட்டினார் "வள்ளல் பிராணார்க்கு வாய் கோபுரவாசல்" என்ற உண்மை சித்தர்களால் வெளிப்பட்ட போது அத்தத்துவமே "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்ற கருத்திற்கும் காரணமாகியது.

சைவ மக்களின் இதயமாக உயிர்ப்பாக அமைந்தவை ஆலயங்களாகும். பேராசிரியர் சு.வித்தியானந்தன் "ஈழத்து தமிழர்களின் பண்பாட்டிலே சமயம் சார்ந்த உணர்வுகளும் நம்பிக்கைகளும் மிக முக்கிய பங்கினை வகிக்கின்றது இவற்றின் நிலைக்கண்ணாகத் திகழ்ந்தவை ஆலயங்கள் எனக் கூறப்படுவதற்குப் பொருத்தமான நடைமுறைகள் அண்மைக்காலங்களில் பின்பற்றப்படாமையை பல ஆலயங்களில் காணலாம். இன்றைய ஆலய முகாமையாளர்களும், அர்ச்சகர்களும், தன்முனைப்போரும் வியாபார நோக்கிலும் செயற்படுகின்றனர். இதுவே பல ஆலயங்களின் கீழ் குனிவுக்குக் காரணமாக அமைகின்றன இத்தகைய தன்மை பகுத்தறிவு வாதத்தின் தோற்றத்திற்கும் நாஸ்திக வாதத்தின் எழுச்சிக்கும் வழிவகுத்தது. உண்மையில் பாரதி கண்ட சமூகமும் கோயிலும் வேறுபட்டவை கவிதையில் உலகை அமைத்தது மாத்திரமின்றி கோயில்கள் கல்விக் கூடங்களாகவும், கல்விக்கூடங்கள் கோயில்களாகவும் மாற வேண்டும் என்றும் தலமனைத்தும் கோவில்கள் செயவோம் என முழங்கினார். அத்துடன் நிறுத்தி விடவில்லை.

" அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாராயிரம் நாட்டல்
பினருள்ள கருமங்கள யாவும்
பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

என்ற அவரது பகுத்தறிவு வாதம் புதிய சிந்தனை ஓட்டத்திற்கு வழிவகுத்து நிற்கின்றது. "காயமே கோயிலாக கடிமனம் அடிமையாக வாய்மையே தூய்மையாக மன மணிலிங்கமாக" என்ற உணர்வோடு ஆலயங்களை நோக்குவோம் மக்களை மையமாகக் கொண்டு இயங்கும் நிறுவனங்களாக ஆலயங்களையும், அதன் செயற்பாடுகளையும் மாற்றியமைப்போம். வேத பாடசாலைகள், சமய வகுப்புக்கள், திருமுறை பாராயனம், நடனம், சங்கீதம், சம்மந்தமான உபதேசங்கள் அநாதை நிலையங்கள் அற நிலையங்கள் ஒழுக்க போதனைகள் வைத்திய வசதிகள் அளித்தல் ஏழை விதவைகளுக்கு உதவுதல் ஆகிய வசதிகளை சமூகத்திற்கு வழங்குகின்ற நிறுவணங்களாக மாற்றும் போதுதான் திருமூலர் கூறிய பாடமாகும். கோயில் - நடமாடும் கோயில் என்ற வாக்கு உண்மை பெறும்.

**உசாத்துணை நூல்கள்**


1. தேரோட்டம் ( மலர் – 1 1998) கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வர ஆலயம்

2. அருணாச்சலம்.க. (1992) சுவாமி விபுலானந்தரின் சமய சிந்தனைகள், தமிழ் மன்றம் 1983 இலக்கியச் சிந்தனைகள், குமரன் பதிப்பகம், சென்னை.




*இலட்சியத்திற்காக*
*உன் உயிரையும்*
*அர்ப்பணிக்கக்*
*கூடியவனாக*
*இருந்தால்தான்*
*நீ ஒரு தலைவனாக*
*முடியும்.*

- அன்னை சாரதாதேவி -





திரு.ப.அமிர்தராஜா BA

**மூவகை ஆலயம் :**

வித்தியாலயம் - கல்வி கற்குமிடம்

மடாலயம் - ஞானிகள் வாழுமிடம்

தேவாலயம் - ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு சிவன் எழுந்தருளியுள்ள இடம்

# தெரிந்துகொள்ளுங்கள்

**ஆலயம் :**

ஆலயம் என்பது ஆ+லயம் எனப் பிரிப்பர் 'ஆ' என்பது ஆன்மா என்றும் 'லயம்' என்பது சேருவதறகுரிய இடம் என்றும் பொருள் எனவே ஆலயம் லயித்திருப்பதற்குரிய இடம் என்று பொருள் படும்.

**வினை விலக :**

கொடிய வெய்யிலில் ஒரு துணியை வைத்தால் அத்துணி வெதும்புமேயன்றி வெந்து சாம்பலாகாது. சூரிய காந்தக் கண்ணாடியை வெய்யிலில் வைத்து அதன் கீழ் வரும் வெய்யிலில் துணியை வைத்ததும் அது உடனே சாம்பலாகின்றது. அது போல மற்ற இடங்களில் இறைவனை தியானிப்பதில் வழிபடுவதனால் வினைகள் வெதும்பும் திருக்கோயிலில் வழிபட்டால் வினைகள் எரிந்து கரிந்து நீறாகிவிடும்.

**விக்கிரகம் :**

கிரகம் என்றால் வீடு அல்லது இருப்பிடம் 'வி' என்றால் மேன்மை மேன்மையின் இருப்பிடம் விக்கிரகம். இறைவனது திருவருள் சிறப்பாக விளங்கித் தோன்றுகின்ற உயர்ந்த இடம் விக்கிரமாகும்.

**திருக்கோயில் வழிபாடு :**

திருக்கோயில் மூடியிருக்கும் போதும், திருமஞ்சனம் பூசை செய்யும் போதும், (அபிசேகத்தின் போது) திருவிழாவில் சுவாமி உலா வரும் காலத்தும், திரையிட்டிருக்கும் போதும், திருக்ரோயிலினுள் தரிசம் செய்யக்கூடாது.

**வீழ்ந்து வணங்குதல் :**

பலிபீடம், கொடிமரம், ஆகியவற்றிற்கு அருகே மட்டும் விழுந்து கும்பிட வேண்டும் மற்ற இடங்களில் விழுந்து கும்பிடக்கூடாது கிழக்கு நோக்கிய கோயிலில் வடக்கு முகமாக விழுந்து வணங்க வேண்டும் மேற்கு நோக்கிய கோயிலுக்கும் இது பொருந்தும். வடக்குத் தெற்கு நோக்கிய கோயில்களில் கிழக்கு முகமாக விழுந்து வணங்க வேண்டும் பலிபீடத்திற்கும், மூலஸ்தானத்திற்கும் இடையே விழுந்து வணங்கக் கூடாது.

**வலம் வரும் முறை :**

திருக்கோயிலை வலம் வரும் போது எடுத்து வைக்கும் காலை பூமியில் வைக்கப்பட்டிருக்கும் காலுக்கு உள்ளாக வைத்து மெல்ல நடக்க வேண்டும் நிறைமாச கர்ப்பினித் தலையில் குடத்துடன் நடந்தால் எப்படி நடப்பாளோ அப்படி நடக்க வேண்டும்.

வலம் வரும் போது கைகளை ஆட்டாமல் மனதில் இறைவனை தியானித்துக் கொண்டு வலம் வர வேண்டும். இறைவனுக்கும் வழிபடுவோருக்கும் குறுக்கே வலம்வரக் கூடாது உவாசனையும் சேர்த்தே வலம்வர வேண்டும் பலிபீடத்திற்கு நடுவே சென்று வலம் வரக் கூடாது.

### பூசை நாட்களுக்குரிய நைவேத்தியங்கள் :

ஞாயிற்றுக் கிழமை - சக்கரைப் பொங்கல்
திங்கட் கிழமை - பால், தயிர், அன்னம்
செவ்வாய்க் கிழமை - வெண்பொங்கல்
புதன் கிழமை - சாகான்னம், கதம்பசாதம்
வியாழக் கிழமை - சித்திரான்னம்
வெள்ளி கிழமை - பால் பாயாசம்
சனிக்கிழமை - புளியோதரை

### ஏழுவகை அன்னங்கள்

சுத்தான்னம் - தனிச்சாதம்
முத்வான்னம் - தேன் கலந்த சாதம்
தத்யன்னம் - தயிர் கலந்த சாதம்
பாயாசன்னம் - அரிசி, சிறுபயிர், பால் சேர்த்த சாதம்
குருசாரன்னம் - அரிசி, எள், நெய் சேர்த்த சாதம்
குளான்னம் - அரிசி, பால், வெல்லம், நெய் சேர்த்த சாதம்

### நால்வகை அன்னங்கள்

முக்கான்னம் - தேங்காய் சாதம்
சரிஷபான்னம் - கடுகு சாதம்
ஆமிலான்னம் - புளியோதரை
திலான்னம் - எள்சாதம்

### தீப நேரம்

தினந்தோறும் வீடுகளில் தீபமேற்றி வழிபாடு செய்வதற்கும் நேரம், நெறி முறை அவசியம், அதிகாலை 4.30 மணி முதல் ஆறு மணிக்குள் ஏற்றுவதாலும் மாலை 5.30 மணிமுதல் ஆறு மணிக்கும் ஏற்றுவதாலும் நிறைவான வல்மும் பலன்களும் நிச்சயம் உண்டாகும்.

### தீப அலங்கார தத்துவம் :

ஊர்வன, பறப்பன, விலங்குகள் எனும் முறையில் விரிந்து பஞ்சபூதங்கள் ஒன்றில் ஒன்று ஒடுங்கி இறுதியில் கற்பூரம் போல் எரிந்து எவ்வித அச்சமும் இன்றி இறைவனோடு ஒன்றிவிடுதலே தீப அலங்கார தத்துவமாகும்.

### கற்பூரம் :

கற்பூரம் எரிந்து கரியோ சாம்பலோ இல்லாமல் மறைந்து விடுகிறது அது போல் ஆன்மா இறைவனுடைய அருள் ஜோதியில் கலந்து ஒன்றுபட வேண்டும் என்றே கற்பூர ஆராத்தி செய்யப் படுகிறது.

### ஆராத்தி :

விழாக்காலங்களில் சுவாமிக்கு ஆராத்தி எடுக்கும் போது மஞ்சள், குங்குமம் போட்டு கரைத்து தட்டில் இரண்டு சின்ன நெய் ஜோதி ஏற்றி வைத்து ஆராத்தி நீரை துளசிச் செடியில் ஊற்ற வேண்டும் மனிதர்களுக்கு எடுக்கும் ஆராத்தியில் தான் சுண்ணாம்பு மஞ்சள் போட்டு வீதியில் கொட்ட வேண்டும்.

### மாவிளக்கு :

இறைவனுக்கு மாவிளக்கு இட விரும்புவோர் சனி நாளில்

வரும் பிரதோஷத்திலாவது சிவராத்திரியிலாவது பகலில் உண்ணாது இருந்து இரவில் வெண்டாமரை தண்டின் நூலால் திரி திரித்து செந்நெய் அரிசி மாவில் அகல் பண்ணி அதில் காரம்பசுவின் நெய்யை வார்த்து விளக்கேற்ற வேண்டும்.

**சந்தனக்காப்பு :**

சிவனுக்கு சந்தனக் காப்பு சாத்தி குளிர்வித்தால் உலக உயிர்களுக்கு குளிர் விப்பது போலாகும். கஸ்தூரி போரோசனம் குங்குமப் பூ, பச்சைக் கற்புரம், முதலிய நறுமணப் பொருட்களை கூட்டி சிவனுக்கு ஒரு முறை சந்தனக் காப்பு செய்தவர் தேவ வருடத்தில் கோடி வருடம் சிவலோகத்தில் இன்புற்றிருப்பர் என்று சிவ புண்ணியத்தெளிவு கூறுகிறது.



## உலகத் தோற்றம்

சூரியனின் விசையிலே
சுழன்று வந்த பொருளது
காலப் போக்கில் குளிர்ந்ததாம்
நீரைப்பெற்று சுழன்றதாம்

நீரால் சூழ்ந்த நிலத் தொடர்
நீண்ட கால ஓட்டத்தில்
வேறு வேறாய்ப் பிரிந்ததாம்
ஏழு கண்டம் ஆனதாம்

அவுஸ்திரேலியா, ஆசியா
ஆபிரிக்கா, ஐரோப்பா,
வடக்குத் தெற்கு அமெரிக்கா
அந்தாட்டிக்கா கண்டங்கள்
உலகில் உண்டு இவைகளில்
உயிரினங்கள் பலவகை

நாடு தேசம் பல பல
நம் போல் மக்கள் பலர் பலர்
நமது பூமி ஜனத்தொகை
அறுநூற்று ஐம்பது கோடியாம்

**ப.மோகனருபன்**
(தரம் – 6)



## மருத்துவக் கண்டுபிடிப்புக்கள்

| | |
|---|---|
| மருத்துவத்தின் தந்தை | – **கிப்போகிரட்டிஸ்** |
| ஹோமியோபதி வைத்திய முறையை தொடக்கியவர் | – **டாக்டர் கீனமன்** |
| மனித உடலில் உள்ள மென்மையான உறுப்பு | – **மூளை** |
| குளோனிங் முறையில் பிறந்த முதல் குழந்தை | – **லூயீஸ் பிரவுன் (1978)** |
| குளோனிங் குழந்தையை உருவாக்கிய விஞ்ஞானி | – **பிரிகிட்டி பெய்சலியர்** |
| உலகின் முதலாவது குளோனிங் நாய் | – **ஸ்னப்பி** |
| அதை உருவாக்கிய விஞ்ஞானி | – **குவாக் (2005)** |
| உலகின் முதலாவது ஆட்டுக்குட்டி | – **லோலி** |
| அறுவைச் சிகிச்சை முறையை அறிமுகம் செய்தவர் | – **டாக்டர் மெஸ்மர்** |
| காச நோய்க்கு உகந்த பால் | – **கழுதைப் பால்** |
| இதயத்துடிப்பைக் குறைக்கும் இரசாயனப் பொருள் | – **அசட்டையில் கொலின்** |

**பு.கிருசாந்** - (தரம் 10)

# உங்கள் வாழ்க்கை உங்கள் கைகளில்



செல்வி.த.தமிழ்ச்செல்வி
BA (Hons), PGDE

"உன் அறிவை நீ அறியின், உன் ஆற்றலை நீ புரிந்து கொள்வாய்" சோக்கிரட்டீஸ். தன்னில் நம்பிக்கை கொள்வதே தன்னம்பிக்கை ஆகும். ஒருவர் உயர்ச்சி அடைவதும், வீழ்ச்சி அடைவதும் அவரின் தன்னம்பிக்கையிலேயே உள்ளது. ஒவ்வொருவரும் தனித்துவமானவர்கள் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு வகையான திறமை இருக்கிறது. உங்களிடத்தில் உள்ள திறமை என்ன என்பதை அறிந்து கொள்ளுங்கள், அந்தத் திறமையைக் கண்டு பிடித்து, அதனை வளர்த்துக் கொண்டு, வெற்றி கொள்வதிலேயே தான் உங்கள் வாழ்க்கையின் வெற்றி தங்கியுள்ளது. விடாமுயற்சியும், தன்னம்பிக்கையும் வெற்றிக்கு வழி காட்டும். உங்கள் வாழ்க்கை உங்கள் கையில் தான் உள்ளது. உங்களை நீங்கள் அறிந்து கொண்டால் வாழ்க்கை வசந்தம் தான். வானமும் உங்கள் கைகளில் வசப்பட்டுவிடும்.



தினமும் உங்களைப் பற்றி சிந்தித்துப் பார்க்க சிறிது நேரத்தை ஒதுக்கிக்கொள்ளுங்கள். சிந்தித்துப் பார்ப்பதால் உங்களை நீங்களே அறிந்து கொள்ள முடியும். உங்களைப் பற்றிய சுய விழிப்புணர்வும், சுய மதிப்பீடும், கட்டாயம் தேவை. நீங்கள் யார்? உங்கள் நோக்கம் என்ன? உங்களால் என்ன செய்ய முடியும்? உங்களது பலம் என்ன? உங்களிடம் காணப்படும் பலவீனம் என்ன? போன்ற கேள்விகளுக்குரிய விடைகளை இதன் மூலம் கண்டு பிடித்து விடுவீர்கள். ஒரு விடயத்தில் நீங்கள் தெளிவான உறுதியான சரியான முடிவை எடுக்கவும், உங்கள் ஆளுமையை வளர்த்துக் கொள்ளவும், உங்களைப் பற்றிய சுய விழிப்புணர்வும், சுய மதிப்பீடும், உங்களுக்கு துணை புரியும்.

கோபம், பொறாமை, எரிச்சல், நம்பிக்கையின்மை, தாழ்வுமனப்பான்மை, போன்ற பலவீனங்கள் உங்களை அணுகாமல் விரட்டித் துரத்துங்கள். சுறுசுறுப்பு, ஆர்வம், முயற்சி, அக்கறை, ஈடுபாடு போன்றவற்றை உங்களுடன் சேர்த்துக் கொள்ளுங்கள். உங்களில் நீங்கள் நம்பிக்கை வையுங்கள். ஒரு செயலில் ஈடுபடும் போது நம்பிக்கையுடனும், முழுமனதுடனும், ஆர்வத்துடனும் ஈடுபடுங்கள். வெற்றி உங்களுக்குத் தான்.

எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்க நீங்கள் விரும்புகிறீர்கள் அல்லவா? அப்படியாயின் உங்கள் நலனிலும் சற்று அக்கறை

காட்டுங்கள். மனதை புத்துணர்ச்சியுடன் மகிழ்வாக வைத்திருங்கள். வாழ்வை ரசிக்கக் கற்றுக் கொள்ளுங்கள், வாழ்கையை ரசிக்கத் தெரிந்தவனே, வாழத் தெரிந்தவன். ஓய்வு நேரங்களில் இசை கேட்டல் - ரசித்தல், இசைக்கருவிகள் மீட்டுதல், பாடுதல், ஓவியம் வரைதல், கவிதைகள் எழுதுதல், பின்னர் கைவேலைகளில் ஈடுபடுதல், பூந்தோட்டம், வீட்டுத்தோட்டம் அமைத்தல் போன்றவற்றிலும், தியானப் பயிற்சிகளிலும் ஈடுபடுங்கள் உங்களுக்கு பிடித்தமானவற்றில் ஈடுபட்டு, சின்னச் சின்ன சந்தோசங்களையும் வாழ்வில் அனுபவியுங்கள். மனம் விட்டுச் சிரியுங்கள், வாழ்கையை இமையாக்கி வாழ்வது உங்கள் கைகளில் தான் உள்ளது என்பது இப்போது உங்களுக்குப் புரிகின்றது அல்லவா.?

# பெண் மொழிகள்



- அரசனைவிட பெண் அதி தந்திரம் உள்ளவள் (ஆபிரிக்கா)
- பெண்ணின் ஆயுதம் கண்ணீர் - (கிறிஸ்)
- பெண்ணின் மிகச்சிறந்த சீதனம் அவள் அழகு - (ஜேர்மனி)
- ஒரே சமயத்தில் பெண்ணுக்கு 77 எண்ணங்கள் உண்டாகின்றது. (ரஷ்யா)
- பெண்ணால் காப்பாற்ற முடிகின்ற ஒரே ரகசியம் அவள் வயது - (பிரான்ஸ்)
- கோபம் கொண்ட பெண் கரையில்லாத கடல் - (இத்தாலி)
- நல்லவளாக இருப்பதைவிட அழகியாக இருப்பதையே ஒவ்வொரு பெண்ணும் விரும்புகிறாள் - (ஜேர்மனி)
- ஒரு விசயத்தை நீ விளம்பரம் செய்ய வேண்டுமா? அதை
- ரகசியமாக ஒரு பெண்ணிடம் சொல் - (அயர்லாந்து)
- உண்மையான குடும்பப்பெண் ஒரே சமயத்தில் அடிமையாகவும் எஜமானியாகவும் இருப்பால் - (யூகோசிலாவியா)
- ஏதாவது ஒரு முறையில் பெண் ஒருத்தி இல்லாமல் ஒரு தீய காரியம் நடப்பதில்லை (வேல்ஸ்)
- பெண் புத்தி பின் புத்தி (இந்தியா)
- சிரிக்கிற பெண்ணையும் அழுகிற ஆணையும் நம்பாதே (ரஷ்யா)

**மாணவி பா.ராஜினி** (தரம் - 11)

# மாறாத அடையாளம்

சிற்றலைகளின் சிங்காரமும்
சிலுசிலு வென கரைக்காற்றில்
சுவாசங்களை சுகமாக வருடி மனதைத் தொட்டு
வசந்த காலத்தை வரவேற்கும் நீலக் கடலே!

ஒன்றும் அறியா பிஞ்சுகளையும் சீறி எழுந்து
வாரி எடுத்து நீ கொண்டது கருமம்
கூட்டு சேர்ந்து குடும்பமாய் கடல்
அன்னையே உன்னைக் கும்பிட்டோம்
எம்மைச்சுற்றி காவல் கொண்ட பெரிய
சாமி நீ. என்று வாழ்விற்கு சாட்சி வைத்தோம்

அன்றைய வாழ்வில் அரைவயிற்றுக் கஞ்சியை
கூட அருந்துவதற்கு
மீனவ ஜாதிக்கு நீ செய்தது தர்மம்
நன்றி மறக்கவில்லை உன் ஜாதி நீ மறந்திட
நினைத்தது ஏனோ?

எங்கள் குடி அழிந்திட சுனாமியாய்
உருமாறினாய் அனாதைகளாய் ஆதரவின்றி
ஆறுதலின்றி தெருவிலே அகதி
என அடையாளம் பொறிக்கப் பெற்றோம்

**ஆ.ரிஷானந்தன்** (தரம்–10)

சிறுகதை

# கொழுகொம்பு



திருமதி.மே.அ.றமேஸ்வரன்
BA

**வி**ர்....விர் என்ற சத்தத்துடன் பஸ் நின்றவுடன் குமாரின் எண்ண ஓட்டமும் நின்றது. கண்களைத் திறந்தான். கண்களில் இருந்து கண்ணீர்த் துளிகள் சிந்தின. யன்னல் வழியாக எட்டிப்பார்த்து பஸ் வறக்காப்பொலையில் நிற்பதை அறிந்து கொண்டான். தன்னுடன் பயணித்தவர்கள் இரவு உணவுக்காக கடைகளை நோக்கிச் சென்றனர். தனது பைக்குள் நண்பர்கள் வாங்கிக்கொடுத்த உணவுப் பொதி அப்படியேயிருந்தது. அதைத் தொட்டுப்பார்த்து உண்ண மனமின்றி அப்படியே வைத்துவிட்டு சீற்டிலே சாய்ந்தபடி பொங்கி வந்த அழுகையைக் கட்டுப்படுத்தி கண்களை மூடினான். மீண்டும் அவனுள் அதே எண்ணங்கள்.



குமார் கந்தசாமியின் இரண்டாவது மகன். மூத்தவள் சுதா. திருமண வயதைத் தொட்டுக் கொண்டு நிற்கிறாள். குமாருக்கு பின் இரண்டு தங்கைகளும், ஒரு தம்பியும் இத்தனை பேரையும் கந்தசாமி கூலி வேலை செய்தே பராமரித்தார். எத்தனை கஸ்டத்தின் மத்தியிலும் குமாரையும் ஏனைய பிள்ளைகளையும் மற்றப் பிள்ளைகளைப் போன்றே படிப்பித்தார். இதில் குமார் மூலம் வெற்றியும் கண்டார். ஆம் குமார் இப்போது பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் துறையில் இறுதி வருட மாணவன். குமாரின் வாழ்வை எத்தனையோ! பேரலைகள் வந்து மோதிய போதும் குமார் தன் படிப்பில் சிறிதும் சோர்ந்துவிடாது படித்தான்.

குமாரது குடும்பத்தை தாக்கிய முதல் பேரலை யுத்தம். 1990களில் இவர்கள் யுத்தத்தின் கோரப்பிடிக்குள் அகப்பட்டு தங்களிடம் இருந்த சொத்துக்கள் அனைத்தையும் இழந்து, இருக்க இடமின்றி, அகதிகளாக்கப்பட்டு, மட்டக்களப்பு நாவலடிக் கிராமத்தில் தஞ்சம் புகுந்தனர். கந்தசாமியின் இரவு, பகல் பாராது கடும் உழைப்பினால் மீண்டும் ஓரளவு தலைநிமிர்ந்தது குமாரின் குடும்பம். அவ்வேளையில் தான் குமாருக்கு

பல்கலைக்கழக அனுமதி கிடைத்தது. தந்தையின் கடும் உழைப்பினாலும் தாயின் அரவணைப்பினாலும் அக்கிராமத்தவர்கள் புகழும் குடும்பமாக அமைதியாக வாழ்ந்தனர் குமாரின் குடும்பத்தினர்.

இதற்கிடையில் மீண்டும் எழும்ப முடியாத பேரிடியாக 2004ம் ஆண்டு சுனாமி என்னும் பேரலை வந்து குமாரின் சொத்துக்களோடு தாயையும் கொண்டு சென்றது என்ற செய்தி குமாரை பெரிய அதிர்ச்சிக்குள்ளாக்கியது. வேதனைகளையும், சோதனைகளையும் தனக்குள்ளே சுமந்தவனாக தந்தைக்கும், சகோதரிகளுக்கும் ஆறுதல் கூறி, அவர்களோடு சில மாதங்கள் தங்கிவிட்டு மீண்டும் பல்கலைக் கழகம் சென்றான். சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வீடுகளில் ஒன்று கந்தசாமியின் வீட்டிற்கு கிடைத்தது. கந்தசாமியினால் இப்போது உழைக்க முடியவில்லை. அவர் உடலை பல நோய்கள் தாக்கின. இருந்தாலும் கல்யாண வயதினைத் தாண்டியிருக்கும் தன் மகளையும், படிப்பைத் தொடரும் தன் மகனையும் ஏனைய பிள்ளைகளையும் மனதில் கொண்டு தன்னால் இயன்ற சிறு சிறு வேலைகளை செய்து தன் மகன் மீதுள்ள நம்பிக்கையுடன் காலத்தை ஓட்டினார்.

அன்று திங்கட்கிழமை குமார் விரிவுரைகளுக்கு செல்வதற்காக ஆயத்தம் செய்து கொண்டிருந்த போது செல்போனில் வந்த செய்தி அவனுள் பேரிடியாய் விழுந்தது. ஆம் அவனது தந்தை இறந்துவிட்டார். தன் தோளில் ஏதோ கனப்பதை உணர்ந்து குமார் நீர் நிறைந்த கண்களைத் திறந்தான். அருகில் தனது நெருங்கிய பல்கலைக் கழக நண்பன் முகேஷ் நின்றுகொண்டிருந்தான். குமார் முகேஷினுடைய தோளில் தலைவைத்து சிறு குழந்தையாக ஏங்கி ஏங்கி அழுதான். அவன் மனக்கண் முன் தந்தையை இழந்து பரிதவிக்கும் தன் அக்காவினதும், இளைய சகோதரர்களினதும், முகங்கள் தோன்றின. ஏதோ எண்ணியவனாக திடீரென நண்பனின் தோளில் இருந்து எழுந்து கண்களைத் துடைத்து வீடு செல்ல ஆயத்தமானான். பஸ் மட்டக்களப்பை அணமித்தது. ஆம் இனி குமார் தான் அக்குடும்பத்தின் கொழுகொம்பு. ■

# விப பெண் உரிமை



ஆண்பிள்ளை என்றால் உயர்வாமோ
பெண்பிள்ளை என்றால் தாழ்வோ
ஆணும் பெண்ணும் ஒரே தாயின்
அன்பில் வளர்ந்த செல்வங்களே

சமைப்பது மட்டும் பெண்மகளோ
சட்டம் பயில்வது ஆண்மகனோ
தமையன் செல்வது வேலைக்கோ
தங்கை மட்டும் மூலைக்கோ

ஆகா காலம் மாறியது
அண்ணனும் தங்கையும் சமமாச்சு
அண்ணனைப் போன்று தங்கையும் தான்
அலுவல் செய்கிறாள் பயமில்லை

ஆணைப் போன்றே பெண்மகளும்
அனைத்தும் செய்யும் காலமிது
ஆக்கல் காத்தல் பெண் கடமை
அனைத்திலும் உண்டு சமபங்கே!

ம.தவஜியா
(தரம் - 8A)

# பொது அறிவு

* இரவில் ஒட்சிசனை வெளிவிடும் மரங்கள் எவை?
துளசி, அரசை (இதனால் இவை புனித மரமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.)
* இருண்ட கண்டம் எது? - ஆபிரிக்கா கண்டம்
* மிகக்குறைந்த வரிகளில் தேசிய கீதத்தைக் கொண்ட நாடு எது? - ஜப்பான் (நான்கு வரிகள்)
* கூடிய வரிகளில் தேசிய கீதத்தைக் கொண்ட நாடு எது? - கிரேக்கம் (உரோம்)
* சார்க் நாடுகளில் புதிதாக இணைந்த நாடு எது?
ஆப்கானிஸ்தான்
* சார்க் நாடுகள் எவை?
இலங்கை, இந்தியா, பாக்கிஸ்தான் நேபாளம், பூட்டான் மாலைதீவு, வங்காளதேசம், ஆப்கானிஸ்தான்.
* அதிக ஞாபக சக்தி உள்ள விலங்கு எது? - யானை
* அதிக அறிவு கொண்ட பறவை எது? - ப்லூட்டி
* மாறு குரலுடைய ஒரே பறவை எது? - குயில்
* அணு உற்பத்திக்கு தேவையான முக்கியமான மூலகம் எது? - யுரேனியம்
* தேசிய இலட்சனையை வடிவமைத்தவர் யார்?
மாபலகம விபுலசாரஹிமி
* நீந்தத் தெரியாத விலங்கு எது? - ஒட்டகம்
* மழை நீரை மட்டும் அருந்தும் பறவை எது?
சக்கரவாகம்
* கிழக்கு மாகாணத்தின் பொருளாதார மையம் எது?
அம்பாறை
* ஒலிம்பிக் போட்டி எத்தனை வருடத்திற்கு ஒருமுறை நடைபெறுகிறது?
நான்கு வருடம். நடைபெற இருப்பது – சீனாவின் பீஜிங் நகரில்

தரம் 5 மாணவர்கள்

# தந்தையர்களை அறிவோம்




01. கணினியின் தந்தை
சாள்ஸ் பபேஜ்
02. தட்டச்சின் தந்தை
கிறிஸ்டோபர் லதாம் ஷோள்ஸ்
03. கணக்கியலின் தந்தை
லூக்கா பெரியோலி
04. மின்சாரத்தின் தந்தை
மைக்கள் பரடே
05. சாரணியத்தின் தந்தை
பேடன் பவல் பிரபு
06. கணிதத்தின் தந்தை
ஆர்க்கிமிடிஸ்
07. பக்றீரியாவின் தந்தை
லூயிபாஸ்டர்
08. குடித்தொகை கல்வியின் தந்தை
ஜோன் கிரான்ட்
09. அரசியலின் தந்தை
அரிஸ்டோட்டில்
10. நவீன மருத்துவத்தின் தந்தை
கிப்போகிரட்டீஸ்
11. தமிழ் தட்டச்சின் தந்தை
இ.முத்தையா
12. இலங்கை இந்துக் கல்வியின் தந்தை
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

சு.ஜினோராஜ் - தரம் - 7

திருமதி.கீ.லோகநாதன்
*Trd.H.Econ*








# ஆரோக்கிய வாழ்விற்காக....

- உடலின் சூட்டைக் குறைக்க சிவப்புச் செவ்வரத்தம்பூ, இலைகளைப் பிசைந்து தலையில் தேய்த்து ஐந்து நிமிடம் சென்றதும் முழுகவும்.
- எண்ணெய்யும், சீனியும், ஆகக்குறைவாக உட்கொள்ள வேண்டும்.
- பாலும், பாற்பொருட்களும், மீனும், இறைச்சியும் நடுத்தரமாக உட்கொள்ள வேண்டும்
- காய்கறிகள், பழவகைகள், தானியங்களை அதிகமாக உட்கொள்ள வேண்டும்
- கிழங்கு வகைகளை மேற்தோலுடன் வேக வைத்து பின்பு தோலை அகற்றுவதால் உணவின் போசனை மட்டம், சத்து, நிறம், சுவை குன்றாது இருக்கும்.
- அமிலம் கூடிய அமிலப் பொருட்களைத் தயாரிக்க பித்தளை, செம்பு, அலுமினியத்திலான பாத்திரங்களை பயன்படுத்தக் கூடாது.
- பாணை கையால் நசுக்கி விட்டால் இருந்தவாறே இருக்குமாயின் அது ஒரு புதிய பாண் என அறியலாம்.
- பொரித்த எண்ணெயை மீண்டும் மீண்டும் பயன்படுத்தக்கூடாது
- உணவை உட்கொண்ட பின்னரே சற்றுணவைப் பரிமாற வேண்டும்



அகங்காரம் இருக்கும்
வரையில் ஞானமும்
முக்தியும் கைகூடாது

- ஸ்ரீ இராமகிருஷ்ணர் -



# பொது அறிவு

1) உலகில் இருமுறை நோபல் பரிசு பெற்ற பெண்மனி யார்?
**மேரிகியூரி**

2) கோள்களின் இயக்க விதிகளைக் கண்டறிந்தவர் யார்?
**கேப்ளர்**

3) முதலில் விண்வெளியில் பறந்த பெண்மனி யார்?
**வலன்டினா**

4) முதலில் விண்வெளி பயண விதிகளை வரைய இருந்தவர் யார்?
**சேர் ஐசக் நியூட்டன்**

5) விண்வெளிக்கு அனுப்பப்பட்ட முதல் செயற்கைக்கோள் எது?
**ஸ்புட்னிக் - 1**

6) நீல நிறமுடைய கோள் எது?
**நெப்டியூன்**

7) செந்நிறமுடைய கோள் எது?
**செவ்வாய்**

8) முதல்முதலில் சந்திரனில் விஞ்ஞானிகள் இறங்கிய நாள் எது?
**1963.07.20**

9) முதன் முதலில் விண்வெளியில் கண்டுபிடிக்கப்பட்ட மூலக்கூறு எது?
**ஐதரொக்சைட்**

10) சூரியனிலிருந்து அதிக தொலைவிலுள்ள கோள் எது?
**புளுட்டோ**

**க.வினோதன்**
(தரம் - 8B)

# சமைத்துப் பார்க்கலாம் வாரீங்களா?





## ருசித்துச் சாப்பிட லவ் கேக்

**தேவையான பொருட்கள்**

| | |
|---|---|
| சீனி | - 750 கிறாம் |
| முட்டை | - 12 |
| றவை | - 450 கிறாம் |
| பட்டர் | - 450 கிறாம் |
| பூசனி அல்வா | - 450 கிறாம் |
| முந்திரியம் பருப்பு | - 750 கிறாம் |
| ஏலக்காய் தூள் | - 4 தேக்கரண்டி |
| கறுவாத் தூள் | - ¼ தேக்கரண்டி |
| சாதிக்காய்த் தூள் | - ¼ தேக்கரண்டி |
| பேக்கிங் பவுடர் | - 4 தேக்கரண்டி |
| வனிலா எசென்ஸ் | - 2 தேக்கரண்டி |
| ஆமென்ட் எசென்ஸ் | - 1 தேக்கரண்டி |
| றோஸ் எசென்ஸ் | - 3 தேக்கரண்டி |

**செய்முறை:**

- முட்டை வெண்கரு, மஞ்சட்கருவை, வெவ் வேறாக எடுத்துக்கொள்ளவும்.
- எட்டு முட்டைகளின் வெண்கருவை நுரை வரக்கூடியதாக நன்கு அடித்துக்கொள்ளவும்.
- முந்திரிப்பருப்பை சிறு சிறு துண்டுகளாக வெட்டிக்கொள்ளவும்
- பூசனி அல்வாயையும் சிறுசிறு துண்டுகளாக வெட்டிக்கொள்ளவும்.
- றவையை துப்பரவுசெய்து இலேசாக வறுத்துக் கொள்ளவும்.
- முட்டை மஞ்சட்கருவுடன் சீனியைச் சேர்த்து நன்றாக அடிக்கவும்.
- நன்கு அடிக்கப்பட்ட வெண்கரு, மஞ்சட்கருக் கலவையை றவை, பட்டர் கலவையுடன் சேர்க்கவும்.
- அக்கலவையுடன் ஏலம், கறுவா, சாதிக் காய் தூள்களையும் வனிலா, ஆமென்ட் எசென்ஸ், றோஸ் எசென்ஸ், பேக்கிங் பவுடர், சேர்த்துக் கொள்ளவும்.
- கலந்த கலவையை பேக்கிங் செய்து கொள்ளவும்.

**ந.கோகிலேஸ்வரி** (தரம் - 11)

## வாழைப்பூ பொறியல்


**தேவையான பொருட்கள்**

| | |
|---|---|
| வாழைப்பூ | - 1 சிறிது |
| முட்டை | - 2 அல்லது 3 |
| பச்சை மிளகாய் | - 6 |
| சின்ன வெங்காயம் | - 6 |
| எண்ணெய் | - சிறிதளவு |
| சீரகம் | - 1 தேக்கரண்டி |
| மஞ்சல் | - தூள் சிறிதளவு |
| உப்பு | - தேவையான அளவு |
| மாசித்தூள் | - 2 தேக்கரண்டி |
| தேங்காய்ப் பால் | - 3 மேசக்கரண்டி |

**செய்முறை:**

- வாழைப்பூவை அரிந்து, கசறு நீக்கி சுத்தம் செய்தெடுக்கவும்.
- அதனுள் முட்டையை விட்டு நன்றாக அடிக்கவும்.
- பின்பு பச்சை மிளகாயம், வெண்காயம், சீரகத்தூள், மஞ்சல் தூள், உப்பு, மாசித் தூள், தேங்காய்ப் பால் விட்டு மீண்டும் அடிக்கவும்.
- தாச்சியில் எண்ணெய் விட்டுக் கொதித் ததும், வாழைப்பூக் கலவையை கரண்டி யால் எடுத்து முட்டை பொரிப்பது போன்று பொரிக்கவும்.

**வி.விேனாஜினி** (தரம் - 11)



# தெரிந்து கொள்ளுங்கள்

குருதியில் நான்கு இனங்கள் உள்ளன என கண்டறிந்த விஞ்ஞானி யார்? - கார்ளான் ஸ்டைனர் -

மின்னற் கடத்தியை கண்டுபிடித்தவர் யார்?
- பெஞ்சமின் பிராங்ளின் -

நீராவி இஞ்சினைக் கண்டு பிடித்தவர் யார்?
- ஜேம்ஸ்வாட் -

கூர்ப்புக் கொள்கையை வெளியிட்டவர் யார்?
- லவோசியர் -

துருப்பிடிக்காத உருக்கை கண்டு பிடித்தவர் யார்?
- பிரையர்லின் -

கலத்தை முதன்முதலில் கண்டு பிடித்தவர் யார்?
- றொபேர்ட் ஹிக் -

ஆராட்சிக்காக முதன்முதலில் சூரிய சக்தியைப் பயன்படுத்தியவர் யார்? - ஆக்கிமிடிஸ் -

மின்காந்த அலைகளைப் பற்றி முதலில் அறிந்தவர் யார்?
- கிளார்ச் மக்ஸ்வெல் -

ஒலி அலைகளை வானொலி அலைகளாக மாற்றும் முறையினை அறிந்தவர் யார்? - ஹென்றிச் -

க.ரோபிதன் - (தரம் - 6)

# அழகு என்பது



வாழ்கையின் அழகு
வாழ்வதில்....
கல்வியின் அழகு
கற்றபடி நடப்பதில்....
நிலவின் அழகு
நிழலில்....
துன்பத்தின் அழகு
இன்பத்தில்....
வயலின் அழகு
பரப்பில்....
ஆணின் அழகு
வீரத்தில்....
பெண்ணின் அழகு
பண்பாட்டில்....
குயிலின் அழகு
குரலில்....
காலங்களில் அழகு
இளவேனில்....
காவேரியின் அழகு
நீரில்....
தாயின் அழகு
பாசத்தில்....
தந்தையின் அழகு
பொறுப்பில்....
மழலையின் அழகு
சிரிப்பில்....
மார்கழிதான் அழகு
மாதத்தில்....
முதுமையின் அழகு
அறிவுரையின் நரை....

ப.மோகன்ராஜ் - (தரம் 11)

# பெண்ணின் வெற்றிப் பயணம்



பெண்ணே நீ விழித்தெழுந்து விடு
உன் கனவைக் கலைக்காதே,
உன் கண்ணைக் கசக்கிவிடு,
உன்மனதைக் கசக்கி விடாதே,
உன் இலட்சியம் அழிந்துவிடும்.

எத்தனை துன்பம் வந்தாலும்
உன் உயர்வுக்காய்
நீ படும் கஸ்டங்களை விடாதே
நாம் ஒடுங்கி நடுங்கி நின்ற
காலம் போய்விட்டது
இனி தலைநிமிர்ந்து நிற்போம்
பெண்ணின் வெற்றிப் பயணத்திற்காக

நீ நடக்கும் பாதையில் இடைவெளி
இல்லாமல் தொடர்கின்ற பாதையாக
அமையட்டும் முள்ளில் நடந்தாலும்
முட்களுக்கு பாதிப்பு வராமல்
நடக்க வேண்டும்
உனது சமூகத்தில் நீ சரித்திரம்
படைத்தவளாக இருக்க வேண்டும்

பாரதி விரும்பும் பெண்களுக்குள்
நீயும் ஒருவளாக வாழ வழிவகு
பெண்ணே உன் வெற்றிப்பயணம்
தொடரட்டும்.

**ம.கிசோக்கா றொக்சாலினி** -(தரம் 10)

# உபகரணப்பாடல்

கற்றலுக்காக வகுப்பறையில்
காணும் பொருட்கள் பற்பலவே
வகுப்பறைக்குள் தினம் சென்றிடுவோம்
வளங்கள் பற்றி அறிந்திடுவோம்.



வகுப்பறையின் முன் சுவரினிலே
தொங்கும் பலகை கரும்பலகை
பால்நிற வெண் கட்டியினால் - அதில்
எண்ணும் எழுத்தும் எழுதிடுவோம்.

சொகுசாய் நாமும் அமர்ந்து எழுதிட
உதவும் பொருட்கள் கதிரை மேசை
பெறுமதி மிக்க வளங்களை - இங்கு
காத்திட உதவும் அலுமாரி.

சொற்களை தெளிவாய் அறிந்திடவே
தொங்கும் அட்டை சொல்லட்டை
அகர முதல எழுதிடுவோம்
அறிவை நாமும் பெற்றிடுவோம்!

**சி.தட்சலா**
(தரம் - 8)





திரு.பி.பிரமிதன்
NDTE (MERIT)



# ஒலிம்பிக் விளையாட்டுக்கள்

### ஆரம்பம் :

**ஏ**தென்ஸ் நாட்டில் ஒலிம்பியா என்னும் பிரதான வரலாற்று பிரதேசத்தினாலும் சியுஸ் என்னும் தெய்வத்திற்கு எடுக்கப்பட்ட விளையாட்டுக்களே பிற்காலத்தில் ஒலிம்பிக் விளையாட்டுக்களாக வளர்ச்சி அடைந்தது.

## நவீன ஒலிம்பிக்

### ஆரம்பம் :


- 1894ம் ஆண்டு பியரிடிகூர்போர்டின் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. இது நான்கு வருடத்திற்கு ஒரு முறை இடம் பெறுகிறது.
- 1896 தொடக்கம் 2004ம் ஆண்டு வரை 28 போட்டிகள் இடம்பெற்றுள்ளது. 2008ம் ஆண்டு சீனாவில் ஒலிம்பிக் போட்டி இடம்பெறவுள்ளது.
- உலகின் ஒலிம்பிக் இடம்பெறாத ஆண்டுகள் 1940, 1944 ஆகிய வருடங்களில் இரண்டாம் உலக மகா யுத்தத்தின் காரணத்தினாலாகும்.

**1896 – 2004 வரை போட்டி இடம் பெற்ற நாடும் நகரங்களும்**

| ஆண்டு | நாடு | நகரம் |
|---|---|---|
| 1896 | கிரேக்கம் | ஏதென்ஸ் |
| 1900 | பிரான்ஸ் | பாரீஸ் |
| 1904 | அமெரிக்கா | சென்லூாயிஸ் |
| 1908 | பிரித்தானியா | லண்டன் |
| 1912 | சுவீடன் | ஸ்ரொக்கொம் |
| 1916 | ஜேர்மனி | பேர்லின் |
| 1920 | பெல்ஜியம் | அண்ட்வேப் |
| 1924 | பிரான்ஸ் | பாரீஸ் |
| 1928 | நெதர்லாந்து | அம்ஸ்ரக்காம் |
| 1932 | ஐ.அமெரிக்கா | லொஸ்ஏஞ்சல் |
| 1936 | ஜேர்மனி | பேர்வின் |
| 1940 | நடைபெறவில்லை | நடைபெறவில்லை |
| 1944 | நடைபெறவில்லை | நடைபெறவில்லை |
| 1948 | பிரித்தானியா | லண்டன் |
| 1952 | நோர்வே | கெல்சிங்கி |
| 1956 | அவுஸ்ரேலியா | மெல்பேன் |
| 1960 | இத்தாலி | ரோம் |
| 1964 | யப்பான் | டோக்கியோ |
| 1968 | மெக்சிகோ | மெக்சிகோ |
| 1972 | ஜேர்மனி | மியூனிக் |
| 1976 | கனடா | மொன்றியல் |
| 1980 | ரஷ்யா | மொஸ்கோ |
| 1984 | ஐ.அமெரிக்கா | லொஸ்ஏஞ்சல் |
| 1988 | தென்கொரியா | சியோல் |
| 1992 | ஸ்பெயின் | பார்சிலோனா |
| 1996 | ஐ.அமெரிக்கா | அட்லாண்டா |
| 2000 | அவுஸ்ரேலியா | சிட்னி |
| 2004 | கிரேக்கம் | எதேன்ஸ் |
| 2008 | சீனா | பீகிங் |

*இலட்சியத்திற்காக உன் உயிரையும்
அர்ப்பணிக்கக் கூடியவனாக இருந்தால்தான்
நீ ஒரு தலைவனாக இருக்க முடியும்*

**- அன்னை சாரதாதேவி -**



"மட்டக்களப்பு மாவட்டம் முழுதும் கடல் புகுந்து கனபேர் செத்துப் போய்விட்டார்களாம்" "கல்குடா இருந்த இடமே இல்லையாம்" இப்படியெல்லாம் பல புலம்பல்கள். பதுளையில் இருந்து மட்டக்களப் பிற்கு வரும் பஸ்சுக்குள் இருந்த பிரயாணிகளுடன் ஒன்றுமே விளங்காத புரியாத நிலையில் ரவியும் பஸ்சுக்குள் ஒருவனாக செங்கலடி சந்தி எப்பவரும் என்ற ஆதங்கத்தோடு பயணித் துக் கொண்டிருக்கிறான்.

ரவியின் சொந்த இடம் கல்குடா. குடும்பத்தில் பண்புள்ளவன். நடுத்தர மான குடும்பத்தைச் சேர்ந்தவன்.

பயணிகள் பலரும் இறங்குவதும் ஏறுவதுமான சத்தங்கள். செங்கலடிச் சந்தியில் ரவியும் இறங்கு கிறான். ஊரே மயானம் போல் காட்சியளிக்கிறது. வீதியில் சனநடமாட்டமே பின்னப்படுத்தி விட்டுத் தான் போய்விட்டிருக் கிறது. வீதியிலே அடிக்கடி ஓடித்திரியும் அம்புலன்ஸ் மற்றும் வாகனங்கள் யாவுமே இறந்து போன மக்களின் பிரேதங்களைத் தான் சுமந்து செல்கின்றன.

ரவியின் வீடும் கடற்கரை ஓரம்தான். "ஐயோ! என் தாயும் தந்தையும் எங்கே? வீடு இருந்த இடத்தையே காணவில் லையே!" என்று கதறி அழுதபடி ஓடுகின்றான். கடலால் அனாதையாகி விட்ட ஆயிரக்கணக்கான வர்களோடு ரவியும் ஓடுகிறான்.



# மனதில் உறுதி வேண்டும்

அவனது தாயும் தகப்ப னும் தான். தாயின் அண்ணன் ரவியின் மாமா பதுளையில் கடை வைத் திருக்கிறார். லீவு காலம் தானே என ரவியைக் கடந்த வாரம் தான் வந்து கூட்டிச் சென்றிருந் தார். இன்று மீண்டும் மட்டக்களப்பு பஸ்சில் ஏற்றி அனுப்பி வைத்துள் ளார். ரவிக்கு 14 வயது தான். ஓரளவு படிக்கக் கூடியவன். நல்ல

இல்லை. இறங்கிய சில பிரயாணிகளுடன் எங்கிருந் தோ திக்குத்திசை தெரியாது வந்த பஸ்சில் ஏறி கல்குடா வந்து இறங்குகிறான்.

வீதிகளில் மக்கள் அங்கும் இங்குமாக கதறியபடி ஓடி, உறவுகளைத் தேடுகின் றனர். உண்மையாக கடல் பேரலை பலரைக் காவு கொண்டுவிட்டது. வீடு வாசல்களை சின்னா

அகதி முகாம்களில் ஆதரிக்க யாருமின்றி, பித்துப் பிடித்தவனாய் எதிர்காலமே சூனியமாய் ஒரு வாரத்திற்கு முன்பு எத்தனை செழிப்போடு காணப்பட்ட இடம். தாயும் தந்தையும் எவ்வளவு சந்தோஷமாக மாமாவுடன் அனுப்பி வைத்தார்கள். இன்று எல்லாமே தலைகீழாக ஆகிற்று. ஐயோ ஒரு கிழமையின் பின் மாமா

அகதி முகாம்களில் தேடி அலைந்து இறுதியாக வந்து சேர்ந்தார். தங்கையையும் மைத்துனனையும் இழந்த நிலையில் மருமகனை மட்டும் இறைவன் விட்டுச் சென்றுள்ளானே என்றொரு ஆறுதலில் ரவியை அழைத்துக் கொண்டு பதுளை போக முனைந்தார். ரவியோ தாயும் தந்தையும் உலாவிய மண்ணை விட்டுப் பிரிய மனமில்லாதவனாக இங்கேயே தங்கிவிட்டான்.

தாயை இழந்த துயரம், தந்தையை இழந்த சோகம், தன் உடன் படித்த மாணவர்கள் பலரை இழந்த துயரம் என வாட்டின. சிதைந்த கட்டிடங்கள், முறிந்து விழுந்த மரங்கள், கோயிலை இழந்துவிட்ட ஊர், விரக்தியடைந்த மக்கள், இவற்றையெல்லாம் கண்டு அவன் விரக்தியின் விளிம்புக்கே சென்று விட்டான்.

அப்போது அவனது பாடசாலை ஆசிரியர் தந்த ஆறுதலே அவனைப் புது மனிதனாக்கியது. தாய், தந்தையர் அவனைப் பற்றி கொண்டிருந்த கனவு 'ரவி நன்கு படிக்க வேண்டும், பெரிய உத்தியோகம் பார்க்க வேண்டும், இவ்வாறான ரவியின் ஏற்றம் முயற்சி லட்சியம் என்பன அவனை கல்வியில் முன்னேற்றியது. காலச்சக்கரம் உருண்டது. 15 வருடங்களின் பின் ரவி தற்போது அப்பிரதேசத்தின் பிரதேச செயலாளராக மதிப்பிற்குரிய பதவியில் விளங்கினான்.

அவனது அலுவலகத்தில் அவனுக்கு வந்த பல கடிதங்களுடன் சுனாமி நினைவான நிகழ்வொன்றுக்குப் பிரதிநிதியாக அழைப்பு கடிதமும் வந்திருந்தது. தன் வாழ்வில் முக்கிய திருப்பமாக மறக்க முடியாத நாளாக அமைந்த அந்த சுனாமியின் நினைவான நிகழ்விற்கு கலந்து கொள்ளச் செல்கின்றான்

மதிப்பு, வரவேற்பு, மாலை மரியாதைகளோடு மேடையில் மற்றும் சில அதிதிகளுடன் அமர்ந்திருக்கின்றான். கலை நிகழ்ச்சிகள் பரிசளிப்புகள் நடக்கின்றன. பலரும் பேசுகின்றனர். சுனாமி பற்றித் தெரியாதவர்கள், அனுபவமற்றவர்கள், கேள்விப்பட்டவர்கள், பலரும் சுனாமியின் கோரத் தாண்டவம் பற்றியும், அதிலிருந்து இன்றும் விடுபடாத மக்கள் இனியாவது விடுபட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றனர்.

ரவியும் பேச அழைக்கப்படுகின்றான். ரவி சுனாமியால் உருவாக்கப்பட்டவன் தான். எப்படி பாதிக்கப்பட்டான். அதிலிருந்து எப்படி விடுபட்டு இன்று இந்நிலையிலிருப்பதையும் கதையில் கூறியதோடு அதிதிகள் மற்றும் அங்கு வந்தவர்களும் வியந்தனர். மனதில் உறுதி கொண்டு மகத்தான மனிதனாக மாறிய ஒரு வீர புருசனை எதிரில் தரிசித்த பெருமையுடன் மக்கள் கரகோசம் செய்கின்றனர். நிகழ்வு இனிதே நிறைவேறுகிறது. ரவியும் அனுப்பி வைக்கப்படுகின்றான்.

இந்நிகழ்வின் நாயகனாக மட்டுமல்லாது நினைவின் காட்சியாகவும் ஒரு இலட்சியத்தின் இலக்கணமாகவும் ரவி பெருமிதத்துடன் திரும்புகிறான். எதிர்காலம் இனி இத்தகைய பல ரவிகளை உருவாக்கத்தான் போகின்றது.

**ஜெ.ஜெயக்காந்தன்**
*தரம் -11*

# குழந்தைகள் ஏன் தோல்வியடைகிறது?



திருமதி.நா.ரகுநாதன்
Pri.Tri.

ஒவ்வொரு குழந்தைக்கும் இயற்கையாகவே பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய திறமை இருக்கிறது. இந்தத் திறமையை சரிவரப் பயன்படுத்தாமையே குழந்தையின் தோல்விக்குக் காரணமாகின்றது.

ஒரு குறிப்பிட்ட விடயத்தைச் சரிவரப் புரிந்துகொள்ளாமையினாலேயே தோல்வி ஏற்படுகின்றது. மேலும் ஒரு குழந்தை குழப்பமடையும் போது சலிப்படையும் போது, பீதியடையும் போது, தோல்வி ஏற்படுகின்றது. புரிந்து கொள்வதற்கும், கற்றுக்கொள்வதற்கும், படைப்பதற்கும் தேவையான திறமையைக் கொண்டுள்ள ஒரு குழந்தை வெற்றி பெறாமைக்கு மேற்கூறியவைகளே காரணங்களாகின்றன.

ஒரு துப்பறியும் நிபுணர், ஒரு நீதிபதி, ஒரு மருத்துவர் ஆகியோர் ஒரு குறிப்பிட்ட பிரச்சினையைத் தீர்ப்பதற்காக சில கடினமான வேலைகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. அது போலவே ஒரு குழந்தையும் அதனுடைய அளவில் ஒரு பிரச்சினையை தீர்ப்பதற்காக கடினமான வேலைகளை செய்ய வேண்டியிருக்கிறது. ஒரு குழந்தை சில வேலைகளை செய்ய முடியாமலும் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாமலும் தோல்வியடையுமானால் அத் தோல்விக்கு ஒரே ஒரு காரணமே அதாவது அக்குழந்தையை சுற்றியுள்ள பெரியோர்கள் குழந்தைக்குப் பிரச்சினைகளை தீர்க்கும் வகையில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க தவறிவிட்டார்கள் பெற்றோரும் ஆசிரியர்களும் சில பிரச்சினைகளை குழந்தையிடம் விளக்கி அக்குழந்தைகளை சரியான முறையில் வழிநடாத்துவார்களானால்



குழந்தையால் அப்பிரச்சினைகளை வெற்றிகரமாக தீர்க்க முடியும்.

ஒரு குழந்தை புத்திசாலியாக இல்லாவிட்டால் குழந்தை தோற்கிறது. பிறந்த குழந்தை ஒன்றென்ன செய்ய முடியும் ஒரு குழந்தை தொடுகிறது. ருசி பார்க்கிறது வாசனையைக் கண்டு பிடிக்கிறது. ஒரு பொருளைத் தூக்கி எறிந்தால் என்ன ஆகும் என்று தெரிந்து கொள்வதற்கா பொருளைத் தூக்கி எறிகிறது.

எந்தக் குழந்தையும் முட்டாளாகப் பிறப்பதில்லை. எந்தக் கோணத்தில் இருந்து பார்த்தாலும் குழந்தை ஒரு விஞ்ஞானியாக நீதிபதியாக நிபுணராக செயல்படுகிறது என்பதுதான் உண்மை. குழந்தை விடயங்களை நினைவில் வைத்துக் கொள்ளத் தவறுவது ஏன்?

1. பெரியோர்கள் குழந்தையிடம் உனக்கு ஞாபகசக்தி மிகக் குறைவு என்றோ ஞாபக சக்தி கிடையாதோ என்றோ அடிக்கடி கூறும்போது குழந்தை எதையும் மனதில் வைத்துக்கொள்ளத் தவறுகிறது.

2. பெற்றோர் ஒரு விடயத்தில் விருப்பத்தை உண்டுபண்ணாததால் அவ்விடயத்தைக் குழந்தை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளத் தவறி விடுகிறது.

3. ஆசிரியர்களோ? பெற்றோர்களோ? ஒரு விடயத்தை தெளிவாகவும் முழுமையாகவும் கூறவில்லை என்றால் குழந்தை நினைவில் வைத்துக்கொள்ள தவறுகின்றது.

4. குழந்தையிடம் கூறப்படும் விடயம் அவர்கள் மனதில் பதித்துக் கொள்ளும் படியும் அவர்கள் தங்கள் கண்களால் பார்க்கக் கூடியதாகவும் இருந்தால் நினைவில் வைத்துக் கொள்ள முடியும் அவர்கள் காதுக்கு எட்டும் படி மட்டும் கூறப்படும் போது நினைவில் வைத்துக் கொள்ள தவறி விடுகின்றது.

**கண்களும் மனதும் ஒருங்கிணைந்து செயற்படும் போது விடயங்கள் மறக்கப்படமாட்டாது என்று மனதத்துவ நிபுணர்கள் கூறுகின்றார்கள் குழந்தைக்கு மறதி ஏற்படுவதற்கான காரணங்கள் எவை?**

1. குழந்தை கற்கும் போது அதன் மனது அலை பாய்ந்து கவனம் சிதறிக்கொண்டிருந்தால் மறதி ஏற்படும்.

2. கற்கும் போது குழந்தை சிந்திக்கும் நிலை இல்லாவிட்டால் மறதி ஏற்படும்.

3. கற்கும் போது குழந்தை கேள்விகள் கேட்குமாறு ஊக்கப்படுத்த வேண்டும் கேள்விகள் கேட்காவிட்டால் குழந்தை மறந்து விடுகிறது

4. கற்கும் போது குழந்தை களைப்பாக இருந்தால் மறதி ஏற்படும்.

தங்கள் குழந்தைக்கு என்னென்ன திறமை இருக்கிறது என்று பெற்றோர் புரிந்துகொள்ள வேண்டியது மிக அவசியம். குழந்தைகள் தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ளும் படியாக ஆரோக்கியமான சூழ்நிலையை பெற்றோர் உருவாக்க வேண்டும். விடயங்களைப் புரிந்து கொள்வதால் மட்டும் குழந்தைகள் அறிவுடையவர்களாக வளர மாட்டார்கள் செயல்முறையின் மூலமே குழந்தைகளின் அறிவு வளர்கிறது என்பதையும் பெற்றோர் புரிந்து கொள்ள வேண்டும். அத்தோடு குழந்தையின் பேராற்றல்களையும் பெற்றோர் புரிந்துகொள்ள வேண்டும்.

**குழந்தையின் பேராற்றல்கள்**

1. அன்பை நாடுவது, எதையும் உன்னிப்பாகக் கவனிக்கும் சக்தி.
2. வளக்கத்திற்கு மாறானவைகளையும் தெரியாதவைகளையும் கண்டுபிடிக்கக் கூடிய திறமை.
3. எதையும் வரவேற்கக்கூடிய மனப்பாங்கு, தனக்கு எது முக்கியமானது என்பதை கண்டுபிடிக்கும் ஆற்றல், முடிவெடுக்கும் ஆற்றல்.
4. ஞாபகசக்தியை வளர்த்துக் கொள்ளும் ஆற்றல் (குழந்தை உண்மையைத் தேடுகிறது. தோற்றுவிடும் எதையும் நிராகரிக்கிறது. இயற்கையாகவே குழந்தைகளுக்கு எச்சரிக்கை உணர்வு இருக்கிறது).
5. குழந்தையின் மனது சக்திவாய்ந்தது குழந்தைக்கென்றே சில விருப்பங்கள் இருக்கின்றது. குழந்தை கோபத்தை, மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறது.

குழந்தைகள் தங்கள் பிறப்பிலேயே இருக்கும் ஆற்றலை வெற்றிகரமாகப் பயன் படுத்த வாய்ப்பளிக்கப்பட்டால் எல்லாக் குழந் தைகளும் புத்திசாலியானவையே ஆக்கபூர்வ மானவையே; குழந்தை பாடசாலைக்குச் செல்வதற்கு முன்னரே, அதாவது 5 அல்லது 6 வயதிற்கு முன்னரே, புத்திசாலித்தனம் ஆக்கபூர்வமான ஆற்றல் போன்றவை உருவாக்கப்பட்டுவிடுகின்றது.

பாடசாலைக்குச் செல்வதற்கு முன் னுள்ள ஆண்டுகளில் தோல்வி என்பது குழந்தையின் மிகப்பெரிய விரோதியாகும். குழந்தைக்கு 5 வயது ஆகும் வரைக்கும் ஏற்படும் தோல்விகள் குழந் தையின் மனதில் பதிந்து பாடசாலை செல்லும் நாட்களிலும் ஏன் அதற்கு பிறகும் கூட தோல்வி கள் ஏற்படக் காரணமாகலாம். எனவே பெற்றோர்கள் குழந் தைக்கு 5 வயதாகும் வரையில் குழந்தை தோல்விகளை எதிர்நோக் காமல் இருக்கும்படி முயற்சி செய்ய வேண்டியது அவசியமாகும்.



பெற்றோர் கவலை கொள்ளக் கூடாது. பெற்றோர் கவலை கொள்ளும் போது அது குழந்தைக்குத் தெரிந்துவிடலாம். குழந் தைக்குத் தெரியவரும் போது குழந்தை அநாவசியமான சிந்தனைகளையும் கவலை யும் கொள்கிறது. அதனால் அதன் திறமை பாதிக்கப்படுகிறது. குழந்தையை சுதந்திர மாகச் செயற்பட விடுங்கள் குழந்தையிடம் நம்பிக்கை வையுங்கள். குழந்தை உங்க ளுடன் தினமும் தனியாக சிறிது நேரம் கதைக்கும் வகையில் சிறிது நேரம் ஒதுக் குங்கள். குழந்தை தானகவே முடிவெடுக்கும் படியாக சில வாய்ப்புக்களை உண்டாக்கிக் கொடுங்கள். குழந்தையுடன் பெற்றோர் கலந்து ரையாடுங்கள். குழந்தை தன்னைப் பற்றி ஒரு உயர்வான அபிப்பிராயம் கொள்ள உத வுங்கள். அதற்காக தற்பெருமை போன்ற குணங்களை வளர்த்து விடாதீர்கள். தாழ்வு மனப்பான்மை ஏறபடச் செய்யாதீர்கள்

குழந்தைக்கு தண்டனை கொடுக்க வேண் டும் என்பதற்காக அன்பு செய்வதை நிறுத்தி விடாதீர்கள், குழந்தைகளின் முன் இன்னொரு குழந்தையை ஒப்பிடாதீர்கள், குழந்தையை அச்சுறுத்தாதீர்கள் குழந் தையை புறக் கணிக்கா தீர்கள், குழந்தை தோல்வியடைந்தால் அதனை நினைக் காத வண்ணம் இருக்கச் செய் யுங்கள், குழந்தை உங்களி டம் கேட்கும் கேள்விக ளுக்குப் பொறுமையாகவும், உண்மையாகவும், பதிலளியுங் கள் குழந்தை விளையாட வீட்டில் இடம் ஒதுக்குங்கள், குழந்தையின் வயதிற்கேற்ற பொறுப்புக்களையும் பணிகளையும் கொடுங் கள், சுவாரசியமான இடங்களுக்கு குழந்தை களை அழைத்துச் செல்லுங்கள், குழந் தைக்கு அருகிலிருந்து புத்தகத்தை படியுங்கள், எப்புத்தகத்தை எப்படிப்படிப்பது என்பதைக் கற்றுக்கொடுங்கள், குழந்தைகளுக்கு பொழுது போக்குப் பொருட்களான வர்ணங்களையும், பென்சில்களையும், புத்தகங்களையும், கொடுங் கள் குழந்தை தன்னைச் சுற்றியுள்ளவற்றைப் பற்றி சிந்திக்கச் செய்யுங்கள், இவ்வாறான செயற்பாடுகளில் பெற்றோர் ஈடுபடும்போதே குழந்தைகள் வெற்றியடையும் என்பது உறுதி.

திரு.சி.இளங்கோவன்
BA (Hon) GEO, PGDE.



# கோறளைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களின் திண்மக் கழிவுகளும் அதனால் ஏற்படும் சுற்றாடல் பிரச்சினைகளும் தீர்வுகளும்

**அறிமுகம் :**

**திண்மக் கழிவு என்றால் என்ன?**

"நாளாந்த வாழ்க்கை முறை செயற்பாடு களிலிருந்து உருவாகும் பொருளாதார பெறு மதியற்ற திண்மப் பொருட்கள்" கழிவு என லாம்.

வெவ்வேறு நாடுகளில் கழிவுகளாகக் கருதப்படும் பொருட்கள் வளங்களாக மாற்றப் படுவது குறிப்பிடத்தக்கதாகும். உதாரண மாக எமது நாட்டில் கடதாசி, தேங்காய் சிரட்டை, பிளாஸ்டிக் பொருட்கள் என்பன சில பிரதேசங்களில் கழிவாக வீசப்படுகின்றன. ஆனால் இக்கழிவுகளினை சரியான முகா மைத்துவத்தினூடாக இவற்றைப் பொருளா தார பெறுமதிமிக்க வளமாக மாற்ற முடியும்.

நன்கு திட்டமிடப்பட்ட நாடுகளின் நகரங் களில் பூங்காக்கள், தெருக்கள் வீதிகள் போன்றவற்றை அழகுபடுத்துவதற் காக தாவரங்கள் நாட்டப்படும் போது நகரக் கழிவுகளான தாவரப்பகுதிகள் மண்ணின் அமைப்பைப் பேணுவதற்கு பயன்படுத்து கின்றனர்.

**<u>கோறளைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களில் அடையாளம் காணப்பட்ட திண்மக் கழிவுகள்</u>**

1. வீட்டுத் திண்மக்கழிவுகள்
2. சந்தைத் திண்மக்கழிவுகள்
3. நிறுவனத் திண்மக்கழிவுகள்
4. ஆறு, கடற்கரையோரத் திண்மக் கழிவுகள்
5. சிறு கைத்தொழில் திண்மக்கழிவுகள்
6. விவசாயத்தினால் உருவாகும் திண்மக் கழிவுகள்

**1. வீட்டுத் திண்மக்கழிவுகள்**

கோறளைப்பற்றுப் பிரதேசத்திற்குட்பட்ட பிரதேசங்களில் குடியிருப்புப் பகுதிகளில் சேகரிக்கப்படும் கழிவுகள் இதனுள் அடங்குகின்றன. குறிப்பாக குடியிருப்புக் களில் சேகரிக்கப்படும் கழிவுகளாக சமயலறைக் கழிவுகள், வீட்டின் சுற்றுச் சூழலில் காணப்படும் தாவரங்கள், விலங் குகளின் கழிவுகள், அன்றாடம் பயன்ப டுத்தும் பொலித்தீன் பைகள் என்பன குறிப்பிடத்தக்கதாகும். கோறளைப்பற்றுப் பிரதேச சபையினால் இக்கழிவுகள் வாரத் திற்கு இருமுறை சேகரிக்கப்படுகின்றன. இருந்தபோதும் சில நாட்கள் வருகை தராத பட்சத்தில் கழிவுகள் தெருவோ ரங்களில் அல்லது வடிகால் மதகுகளுக் குள் கொட்டப்படுகின்றன.

**2. சந்தைத் திண்மக் கழிவுகள் :**

இக்கழிவுகள் பெரும்பாலும் சந்தைகளில் சேகரிக்கும் கழிவுகளாகக் காணப்படுகின் றன. குறிப்பாக கோறளைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களில் வாழைச் சேனை, சித்தாண்டி, கிரான், சந்திவெளி போன்ற பிரதேசங்களில் சந்தைகள்

காணப்படுகின்றன அதிலும் குறிப்பாக வாழைச்சேனை மட்டுமே நாளாந்தச் சந்தை நடவடிக்கை பாரியளவில் நடைபெறுகின்றது. எனவே வாழைச்சேனையில் நாளாந்தம் திண்மக் கழிவுகள் சந்தையில் சேகரிப்பதுடன் வாராந்த சந்தை நடைபெறும் ஏனைய பிரதேசங்களில் வாராந்தம் கழிவுகள் சேகரிக்கப்படும். பெரும்பாலும் சந்தைகளில் அடையாளம் காணப்பட்ட கழிவுகளாக மரக்கறிக் கழிவுகள், மீன் கழிவுகள், பொலித்தீன் பைகள் உறைகள் என்பன அதிக ளவில் காணப்படுகின்றன.

**3. நிறுவனத் திண்மக் கழிவுகள் :**

கோறளைப்பற்றுப் பிரதேசங்களில் பாரிய நிறுவனங்கள் இல்லாவிடினும் இங்கு காணப்படும் வாழைச்சேனை ஐஸ் உற்பத்தி நிலையம், ஏனைய பகுதிகளில் காணப்படும் அரைக்கும் ஆலைகளின் கழிவுகள் போன்றன இங்கு காணப்படும் நிறுவனத் திண்மக்கழிவுகளாகும்.



**4. ஆறு, கடற்கரையோரத் திண்மக் கழிவுகள் :**

கோறளைப்பற்றுப் பிரதேசத்தில் பெரும்பாலான பகுதிகளில் வாழைச்சேனை ஆறு காணப்படுகிறது. இவ்வாற்றங்கரைகளில் பெரும்பாலான வீட்டுக்கழிவுகள் கொட்டப்படுகின்றன. இவற்றைவிட அண்மைக் காலமாக குறிப்பிட்டளவு உள்ளூர் உல்லாசப்பயணிகள் பாசிக்குடாப் பகுதிக்கு வருவதும் அவர்கள் கடற்கரையோரங்களில் போடும் கழிவுகள், பாசிக்குடா மற்றும் கல்குடாப் பிரதேசங்களில் வளர்க்கப்படும் பசுக்கள் எருமைகள் என்பனவற்றின் கழிவுகள் குறிப்பாக (சாணம்) கடற்கரையோரங்களில் பரந்து காணப்படுகின்றன.

**5. சிறு கைத்தொழில் திண்மக் கழிவுகள் :**

கைத்தொழில் திண்மக்கழிவுகளைப் பொறுத்தவரையில் பெரும்பாலும் பாரிய கைத்தொழில் முயற்சிகள் இல்லாவிடினும் சிறுகைத்தொழில் முயற்சிகள் காணப்படுகின்றன. குறிப்பாக தும்புத் தொழில், பாய்பின்னுதல், சட்டிபானை செய்தல் போன்றவற்றின் கழிவுகள் இங்கு காணப்படுகின்றன.

**6. விவசாயத்தினால் உருவாகும் கழிவுகள் :**

விவசாயத்தினால் உருவாகும் கழிவுகள் என்னும் போது பாரியளவில் விவசாயக் கழிவுகள் சேகரிக்கப்படுகின்றன. குறிப்பாக கோறளைப்பற்றுப் பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களில் பெரும் பகுதியில் விவசாய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது அத்துடன் சிறியளவில் வீட்டுத்தோட்ட முயற்சிகளும், மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றின் கழிவுகள் பெரும்பாலும் சேகரிக்கப்படுகின்றன.

**திண்மக் கழிவுகளால் உருவாக்கப்பட்டுள்ள சூழல் பிரச்சினைகள் :**

1. வளி மாசடைதல்.
2. நீர் மாசடைதல்.
3. மண் மாசடைதல்.
4. சுகாதாரப் பிரச்சினை.
5. கரையோரப்பாதிப்புக்கள்.
6. சமூகப் பிரச்சினை.

**1. வளி மாசடைதல் :**

திண்மக்கழிவுகளால் உருவாக்கப்படும் பிரச்சினைகளில் வளிமாசடைதல் முக்கிய மானதாகும். பல்வேறுபட்ட நுண்ணுயிர் களால் திண்மக்கழிவுகள் பிரிந்தழிதலுக் குட்படுகின்றது. இச்செயற்பாடுகளின் போது காற்றின்றிய நுண்ணங்கிகளின் செயற்பாட்டால் பல்வேறு வாயுக்களின் தோற்றத்தினால் பல பாதிப்புக்கள் ஏற் படுகின்றது. அத்துடன் இவ்வாறு உருவா கும் வாயுக்கள் காற்றுடன் கலந்து துர்நாற்றத்தை ஏற்படுத்துகின்றன. இதில் முக்கியமாக மெதேன் வாயுவின் உற்பத்தி வளிமண்டல ஓசோன் படையைத் தாக்கும் ஒரு முக்கிய வாயுவாகும். இதனால் புவியின் வெப்ப அதிகரிப்பிற்கு காரண மாகவும் அமைகின்றது.

இதைவிட பிரதேசத்திற்குப் பிரதேசம் திண்மக்கழிவுகள் அகற்றப்பட்டுகொண்டு வரும் போது அவை திறந்த கொள்கலன் களினால் வளிமண்டலத்திற்கு தூசிகள், துகள்கள் என்பனவற்றை வெளிவிடு கின்றது. இவ்வாறு தூசுகள் துகள்கள் சேரும் வாயுவைச் சுவாசிப்பதன் மூலம் பல சுவாச நோய்கள் ஏற்பட வாய்ப்புக்கள் காணப்படுகிறது.

**2. நீர் மாசடைதல் :**

திண்மக்கழிவுகளால் உருவாக்கப்படும் மற்றுமொரு முக்கிய பிரச்சினையாக நீர் மாசடைதல் காணப்படுகிறது. கோறளைப் பற்றுப் பிரதேச சபையைப் பொறுத்தவரை யில் இதன் பாதிப்பானது குறிப்பாக வாழைச்சேனையை அண்டிய பகுதிகளில் அதாவது பிரதேசத்தின் பிரதான வீதிக் கருகாமையில் அமைந்துள்ள வாகனம் சுத்திகரிப்பு நிலையங்களில் இருந்து வெளிவரும் கழிவுகள் (எண்ணெய்) இப் பிரதேசங்களை அண்டிய பகுதிகளில் காணப்படும் கிணற்று நீரில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதேபோன்று கோறளைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட ஆற்றங்கரையோரங்களில் குப்பைகள் போடுவதனால் அதாவது பொலித்தீன் மற்றும் உக்கலடையாத பொருட்கள் என்பன நீரில் சேர்வதன் மூலம் அந்நீர் வாழ் உயிரினங்கள் பாதிப் பிற்குள்ளாகின்றது. அத்துடன் குறிப்பாக வாழைச்சேனை சந்தையில் வெட்டப்படும் மீன்களின் கழிவுகள் ஆற்றிலே போடப் படுவதனால் ஆற்று நீர் மாசடைகின்றது. பொதுவாகப்பார்க்கும் போது பொலித்தீன் பைகள், சிரட்டைகள் இளநீர் கோம் பைகள், தேங்காய் மட்டைகள் என்பன வடிகால் அமைப்பில் சென்று வடிகால் அமைப்புத் தொகுதியைப் பாதிக்கின்றது.

**3. மண் மாசடைதல் :**

திண்மக்கழிவுகளால் உருவாக்கப்படும் மற்றுமொரு பிரச்சினையாக மண் மாச டைதலைக் குறிப்பிடலாம். பொதுவாக திண்மக் கழிவுகள் வெளியேறுவதால் மண்ணினது பௌதீகக் கட்டமைப்பு பாதிப்படைகிறது. அதாவது மண்ணின் மேல்படையில் திண்மக்கழிகள் சேர்வத னால் மண்ணின் காற்றிடைவெளி அடைக்கப்படுவதுடன் மண்ணின் கீழ் வாழும் உயிரினங்கள் பாதிப்பிற்குள்ளா கின்றன.

அடுத்து திண்மக்கழிவுகளில் ஒன்றான எண்ணெய்க் கழிவுகள் மண்ணின் மேல் படிவதன் மூலம் விவசாய நடவடிக்கைக்கு

பொருத்தமற்றதாகக் காணப்படும். அத்துடன் மண்வாழ் உயிரினங்கள் பாதிப்படையும். அத்துடன் மண்ணின் கட்டமைப்பில் மாற்றம் ஏற்பட வாய்ப்பும் காணப்படுகிறது.

**4. சுகாதாரப் பிரச்சினைகள்**

திண்மக்கழிவுகளினால் பல சுகாதாரப் பிரச்சினைகள் தோற்றம் பெறுகின்றது. திண்மக்கழிவுகளுடன் தமது வாழ்க்கை வட்டத்தைக் கொண்டுள்ள ஈக்கள், நுளம்புகள், கரப்பான் பூச்சிகள் போன்றன வேறுபட்ட நோய்களைத் தோற்றுவிக் கின்றன. எமது பிரதேசத்தைப் பொறுத்தவரையில் டெங்கு காய்ச்சல், சிக்கன் குனியா, மலேரியா போன்ற நோய்கள் பரவும் தன்மை அதிகமாகக் காணப்படுகின்றன.

அத்துடன் மற்றுமொரு பிரச்சினையாக சுகாதார ரீதியில் நீர் மாசடைதல் தொடர்பு படுகின்றது. அதாவது மாசடைந்த நீரினைப் பருகும் போது பல சுகாதார ரீதியான தொற்றுநோய்கள் மற்றும் வயிற்றோட்டம் போன்ற நோய்கள் ஏற்பட வாய்ப்புண்டாகும்.

**5. கரையோரப் பாதிப்புக்கள் :**

திண்மக்கழிவுகளை கரையோரங்களில் கொட்டுவதன் மூலம் கரையோரத் தாவரங்கள் அழிவடைவதுடன் கரையோரங்களில் வாழும் உயிரினங்களும் பாதிப்புக் குள்ளாகின்றன. அதாவது வாழைச்சேனையின் ஆற்றங்கரையோரங்களில் குப்பைகள் கொட்டப்படுவதனால் அங்குள்ள கரையோரத் தாவரங்கள் பாதிப்படைகின்றது அத்துடன் கரையோரங்களில் வாழ்க்கை நடாத்தும் சிறிய உயிரினங்களும் அழிவடைகின்றன.

**6. சமூகப் பிரச்சினைகள் :**

வாழும் சூழல் துப்பரவற்றதாகவும் நிம்மதியற்ற வாழ்க்கையையும் தோற்றுவிப்பதாகவும் இது காணப்படுகின்றது. வாழும் பிரதேசங்களில் போடப்படும் குப்பைகள் அப்பிரதேசங்களின் அயலவர்களுக்கிடையில் பல மனக்கசப்புக்களை ஏற்படுத்த வாய்ப்பு காணப்படுகிறது. இதில் முக்கியமாக வீட்டில் சேரும் குப்பைகளை வடிகால் பகுதிக்குள் கொட்டுவதன் மூலம் அந்நீர் ஓட்டம் தடைப்பட்டு குடியிருப்புப் பகுதிக்குள் கழிவு நீர் செல்லும் வாய்ப்பு காணப்படுகின்றது. இதனால் அயலில் வாழும் மக்களுக்கிடையே முரண்பாடு தோன்றுவதற்கு ஏதுவாக அமைந்துவிடும்.

**__திண்மக் கழிவுகளால் உருவாக்கப்பட்டுள்ள சூழல் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் :__**

திண்மக் கழிவுகளினால் ஏற்படும் சுற்றாடல் பிரச்சினைகளிலிருந்து விடுபடவேண்டுமாயின் வெவ்வேறுபட்ட நடவடிக்கைகளின் மூலம் அதனைக் கட்டுப்படுத்தலாம். அவை யாவன.

1. மீள்சுழற்சி
2. கழிவுகளைத் தவிர்த்தல்/குறைத்தல்
3. நீரின் மீள் பயன்பாடு
4. கழிவுகளைப் பிரித்தெடுத்தல்
5. கழிவுகள் சேகரிக்கப்படும் உபகரணங்கள் கொள்கலன்களைப் பயன்படுத்தல்
6. சேதன வளமாக்கிகளின் உற்பத்தி
7. நிறுனங்கள், வீட்டு மட்டத்தில் பொதுமக்களின் ஒத்துழைப்பு
8. உள்ளூர் நிறுவனங்களின் பங்களிப்பு

**1) மீள் சுழற்சி :**

திண்மக்கழிவுகளின் அளவினைக் குறைப்பதற்கு மேற்கொள்ளப்படும்

சிறந்த முறையாக கழிவுகளினை மீள் சுழற்சிக்குட்படுத்த வேண்டும். இவற்றில் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

**1. கடதாசி மீள் சுழற்சி**

கோறளைப்பற்றுப் பிரதேசத்தினுள் சேகரிக்கப்படும் கடதாசிகளை மீண்டும் பயன்படுத்துவதற்கு அதனை அருகில் உள்ள கடதாசி ஆலைக்குக் கொடுக்கலாம். அத்துடன் அதனை இல்லங்களில் கைவினைப்பொருட்கள் செய்வதற்குப் பயன்படுத்துதல்

**2. கண்ணாடி மீள்சுழற்சி**

கண்ணாடி மீள்சுழற்சி எனும் போது கண்ணாடியிலான போத்தல்களைச் சேகரித்து வைத்து, அதனைப் பூந்தோட்டங்கள் அமைக்கும் போது அவற்றினை பயன்படுத்தல். இதைவிட போத்தல்களை சேகரித்து வைத்து அதனை கடைகளில் விற்பனை செய்வதன் மூலம் எமக்கு வருமானமாகவும் சுற்றுச் சூழல் பாதுகாப்பாகவும் காணப்படும்.

**2) கழிவுகளைத் தவிர்த்தல் / வெளியேற்றல்**

கழிவுகளை குறைத்தல் என்னும் போது திட்டமிடப்பட்டு வேலைதிட்டங்களை மேற்கொள்ளும் போது கழிவுகள் வருவதைக் குறைக்கலாம். அத்துடன் கழிவுகளை குறைக்கவும் முடியும். அதாவது நாம் பயணங்கள் மற்றும் சுற்றுலாவிற்குச் செல்லும் போது பொலித்தீன் பைகள், பேப்பர்களில் உணவினைச் சுற்றி எடுத்துச் செல்வதைவிட மீண்டும் பயன்படுத்தக்கூடிய கொள்கலன்களைப் பயன்படுத்துவதன் மூலம் இக்கழிவுகளின் அளவினைக் குறைக்கலாம்.

**3) நீரின் மீள்பயன்பாடு :**

திண்மக்கழிவுகளில் நீரின் மீள் பயன்பாடு இன்று தேவைப்படும் ஒன்றாகக் காணப்படுகின்றது. அதாவது குளித்தல், கழுவுதல் போன்ற நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தும் நீரினை தாவரங்களுக்கு சேரும் வகையில் பயன்படுத்துவதன் மூலம் நீரின் மீள் பயன்பாடு ஏற்படும்

உதாரணமாக நன்கு விருத்தியடைந்த அமெரிக்காவில் மலசலகூடத்திற்குப் பயன்படுத்தப்பட்ட நீர் மீண்டும் சுத்திகரிக்கப்பட்டு தாவரங்களுக்கும் ஏனைய சில நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப் படுவது குறிப்பிடத்தக்கதாகும்

**4) கழிவுகளைப் பிரித்தெடுத்தல் :**

கழிவுகளைப் பிரித்தெடுத்தல் என்பது பிரதேசத்தினுள் சேர்க்கப்படும் கழிவுகளைப் பிரித்தெடுப்பதன் மூலம் சில கழிவுகளை மீள்சுழற்சிக்கு பயன்படுத்தலாம்.

**5) கழிவுகள் சேகரிக்கப்படும் உபகரணங்கள் கொள்கலன்களைப் பயன்படுத்தல்.**

கழிவுகள் சேகரிக்கப்படும் உபகரணங்கள் என்னும் போது அடையாளம் காணப்பட்ட பிரதேசங்களில் கழிவுகளை சேகரிப்பதற்கான கொள்கலன்களின் பயன்பாட்டை அதிகரித்தல். வீடுகளில் சேகரிக்கப்படும் கழிவுகளை ஒரு கொள் கலன்களின் சேமித்து வைத்து அதனை கழிவகற்றலின் போது எடுத்துச் செல்லுதல். திண்மக்கழிவுகளை எடுத்துச்செல்லும் போது வெளியில் சிதறாது மற்றும் மூடிய கொள்கலன்களைப் பயன்படுத்தல். திண்மக்கழிவுகளை சேகரிக்கும் உபகரணங்களைப் பயன்படுத்தல்.

**6) சேதன வளமாக்கிகளின் உற்பத்தி**

சேதன வளமாக்கிகளின் உற்பத்தி எனும் போது திண்மக்கழிவுகளாகச் சேர்க்கப் படும் தாவரக்கழிவுகள் மற்றும் வீட்டில்

சேரும் கழிவுகள் என்பன கழிவுகளாகக் கொட்டப்படுவதற்கு முன்னர் வீட்டிலேயே சேதனப்பசளையாக மாற்றுவதற்கு வசதிகள் உண்டு. இவ்வாறு செய்வதன் மூலம் திண்மக்கழிவுகளைக் குறைக்கலாம்.

**7) வீட்டு மட்டத்தில் பொதுமக்களின் ஒத்துழைப்பு**

தேவையற்ற பொருட்களை வீட்டிற்குக் கொண்டுவருவதைத் தடுத்தல். மற்றும் மீளப்பயன்படுத்தப்படும் பொருட்களை கவனத்தில் எடுத்துப் பயன்படுத்துதல், நீண்டகாலங்களுக்குப் பயன்படுத்தும் பொருட்களை கொள்வனவு செய்தல், பயனற்ற பொருட்களை விற்பனை செய்தல் அல்லது அன்பளிப்பு செய்தல், வீட்டு மட்டத்தில் சேரும் கழிவுகளை சேதனப் பசளையாக்குதல், உம்மைப் போன்று ஏனையோருக்கும் இதனுடைய அறிவினை வழங்குதல் போன்ற நடவடிக்கைகளை மேற் கொள்வதன் மூலம் வீட்டுமட்டத்தில் திண்மக்கழிவுகளைக் குறைக்கலாம்.

**8) உள்ளூர் நிறுவனங்களின் பங்களிப்பு :**

வீட்டுமட்டத்தில் கழிவுகளைக் குறைப்பதற்கும் கழிவுகளைச் சேகரிப்பதற்குமான கொள்கலன்களை, உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்தல், தொடர்ந்தேர்ச்சியான கழிவகற்றல் வாகன வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல். செயலமர்வுகள் கல்வியறிவூட்டல், துண்டுப்பிரசுரங்கள் மூலம் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலமும் இத் திண்மக் கழிவுகளைக் குறைக்கலாம்.

**முடிவுரை :**

திண்மக்கழிவு அதிகரிப்பதனால் சுற்றுச்சூழலில் பல்வேறு பிரச்சினைகள் தோற்றம் பெற்றுள்ளதையும் அதனை கட்டுப்படுத்த கோறளைப்பற்று பிரதேச சபையினால் மேற் கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும் அதற்கான தீர்வுகளையும் நோக்கிய நாம் இதற்கான முடிவுரையாக உண்மையில் ஆரம்பத்தில் கூறியது போல் திட்டமிட்ட அடிப்படையில் வளங்களை வீண்விரையம் செய்யாமல் வேலைத்திட்டத்திற்கு ஏற்ற வகையில் பயன்படுத்துவதன் மூலம் திண்மக்கழிவுகளைக் குறைக்கலாம்.

இதேபோன்று விருத்தியடைந்த நாடுகளில் பயன்படுத்தப்படும் முறைகளை எமது நாட்டிற்கு அறிமுகப்படுத்தி அதனை மாகாண, மாவட்ட, பிரதேச சபைகளுக்கும் அறிமுகப் படுத்தி நடைமுறைப்படுத்தும் போது இத் திண்மக்கழிவுகளால் ஏற்படும் பிரச்சினைகளைக் குறைக்கலாம்.

இவற்றைவிட பிரதேசசபை ஊழியர்களுக்கான விசேட கொடுப்பனவுகள், அவர்களுக்கான விசேட செயலமர்வுகள் என்பனவற்றில் பங்குகொள்ள வைத்து அவர்களுக்கு திண்மக்கழிவு தொடர்பான சரியான விளக்கத்தைக் கொடுத்தல், மற்றும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தல் மூலமும் திண்மக்கழிவு தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகளிலிலிருந்து விடுபட முடியும். ■

## TEACHER என்பதன் விளக்கம்

| | | | |
|---|---|---|---|
| T | TECHNOLOGY | - | தொழினுட்பம் |
| E | EDUCATION | - | கல்வி |
| A | ABILITY | - | திறமை |
| C | CHARACTER | - | நன்நடத்தை |
| H | HONESTY | - | நேர்மை |
| E | ENTHUSIASTIC | - | ஆர்வம் |
| R | REALITY | - | உண்மை |

# பெண்ணே நின்று விடு!



காலம் மாறிவிட்டது என்று
எண்ணிவிடு நீ எண்ணிவிடு
வீடு தோறும் உன்னை
தூற்றிச் சென்ற காலம்
இன்று போற்றுகின்றது

நீ மட்டும் ஏன் சுதந்திரத்தை
அனுபவிக்கக்கூடாதா?
கடவுள் உனக்கும் தான்
இயற்கையைப் படைத்தான்
இது ஏன் புரியவில்லை

காலவோட்டத்தில் நீ
இன்று ஒரு புதுமைப் பெண்ணாய்
அலை புரண்டோடுகிறாய்
பாரதி இன்று இருந்திருப்பின்
அகமகிழ்ந்து ஆர்ப்பரிப்பான்

உலகை வென்ற உன்னதப்
பெண்கள் மத்தியில்
நீயும் ஒரு மயில் கல்லாய்
நின்றுவிடு பெண்ணே
நீ நின்றுவிடு.....

ஏ..டிசேந்திரன் - (தரம் - 11)

திருமதி.ஜெ.யூலியன் ஏனஸ்ட்
Tri.pri.



# "நா" பற்றிய சில குறிப்புக்கள்



நாவைக் காப்பவர் தம் உயிரையே காத்துக் கொள்கிறார்;
நாவைக் காவாதவன் கெட்டழிவான்.

தம் நாவைக் காத்துக் கொள்பவரே அறிவாளி;
தம் உணர்ச்சிகளை அடக்கிக் கொள்பவரே மெய்யறிவாளர்.

நா ஒரு சிறிய உறுப்பு. ஆனால் அது பெரிய காரியங்களைச் செய்வதாக பெருமையடிக்கிறது.

நாவானது முழுச்சரித்திரத்தையும் கறைபடுத்தி நம் ஆயுள் சக்கரத்தை எரித்து விடுகிறது.

உன்னை உன்னுடைய வாயல்ல, மற்றவர்களுடைய வாய் புகழட்டும்.
உன்நாவல்ல, வேறொருவர் நா போற்றட்டும்.

பொய்யுரைக்கும் நாவை கடவுள் அருவருக்கின்றார்.
உண்மையாய் நடக்கின்றவர்களை அவர் அரவணைக்கின்றார்.

ஒருவர் நாவினால் எதை விதைக்கின்றாரோ அதையே உண்பார்.
தம் பேச்சின் விளைவையே அவர் துய்த்தாக வேண்டும்.

பொய் பேசும் நா உண்மையை வெறுக்கும்
இச்சகம் பேசும் வாய் அறிவை உண்டாக்கும்.



# உலகத் தோற்றம்




சூரியனின் விசையிலே
சுழன்று வந்த பொருளது
காலப் போக்கில் குளிர்ந்ததாம்
நீரைப்பெற்று சுழன்றதாம்

நீரால் சூழ்ந்த நிலத் தொடர்
நீண்ட கால ஓட்டத்தில்
வேறு வேறாய்ப் பிரிந்ததாம்
ஏழு கண்டம் ஆனதாம்

அவுஸ்திரேலியா, ஆசியா
ஆபிரிக்கா, ஐரோப்பா,
வடக்குத் தெற்கு அமெரிக்கா
அந்தாட்டிக்கா கண்டங்கள்
உலகில் உண்டு இவைகளில்
உயிரினங்கள் பலவகை

நாடு தேசம் பல பல
நம் போல் மக்கள் பலர் பலர்
நமது பூமி சனத்தொகை
அறுநூற்று ஐம்பது கோடியாம்



ப.மோகனருபன்
(தரம் - 6)



# பொது அறிவு

உலகில் உள்ள நாடுகள் எத்தனை?
**253 நாடுகள்**

மனித மூளையின் நிறம் யாது? - **சாம்பல்**

கடுமையான குளிருள்ள கோள் எது? - **புளூட்டோ**

சார்க் நாடுகளில் சிசுமரணம் குறைந்த நாடு எது?
**இலங்கை**

இலங்கையின் எத்தனையாம் ஆண்டு புகையிரத சேவை ஆரம்பித்தது? - **1876 ஆம் ஆண்டு**

மஞ்சட் காமாலை நோயால் பாதிக்கும் உடலுறுப்புக்கள் எது?
**கால் விரல்கள்**

சார்க் சாசனம் எத்தனையாம் ஆண்டு வெளியிடப்பட்டது?
**1990**

இலங்கையின் சினிமாத்துறை எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது? - **1947**

உலகில் மிகவும் பழமையான விளையாட்டு எது?
**போலோ விளையாட்டு**

வெப்பநிலையை அளக்கும் நிய அலகு எது? - **கெல்வின்**

தாவரச்சாற்றை உறிஞ்சிக்குடிக்கும் நுளம்பு எது? - **ஆண் நுளம்பு**

மனிதனின் குருதியை உறிஞ்சிக்குடிக்கும் நுளம்பு எது?
**பெண் நுளம்பு**

வானில் நகராத நட்சத்திரம் எது? - **போலோரிஸ் நட்சத்திரம்**

**ப.சர்மினி** (தரம் - 7)




★ வானத்தில் கொத்து மலர்கள் சிதறிக் கிடப்பது போலவும், வைரக்கற்கள் மின்னி ஒளிர்வது போலவும், விண்மீன்கள் பிரகாசிப்பதைக் காணலாம் தனித்தனியாகவும், கூட்டங் கூட்டமாகவும், மிகமிகத் தூரத்தில் காணப்படுகின்றது. உண்மையில் அவையெல்லாம் பெரிய பெரிய சூரியர்களே நமக்கு பெரிதாகத் தோன்றும் சூரியனும் ஒரு விண்மீன்தான்.

★ விண்மீனை நட்சத்திரம் உடு தாரகை என அழைப்பர்

★ வானில் 88 உடுத்தொகுதிகள் கண்டு பிடிக்கப்பட்டு பெயரிடப்பட்டுள்ளது

★ விண்மீன்கள் மிகுந்த வெப்பமுடையவையாக எரிந்து கொண்டிருக்கும்.

★ ஒரே நேரத்தில் 3000 விண்மீன்களை நமது கண்ணால் பார்க்கலாம்

★ தொலை நோக்கியின் உதவியாலே 10 கோடி விண்மீன்களை பார்க்கலாம்

★ விண்மீன்கள் இயற்கை ஒளியுடையவை.

★ உடுக்கள் எல்லாம் ஒளியிற் குறைந்த அளவைத்தரும் விண்மீன்கள் ஞாயிற்றின் ஒளியில் ஐம்பதாயிரத்தில் ஒரு பாகமாகும்

★ விண்மீன்களின் தூரத்தை மட்டிடுதல் இயலுவதன்று. உடுவானது நொடியொன்றுக்கு 186,000 மைல் வீதம் செல்கிறது. இவ்வேகத்துடன் 365¼ நாள் கொண்ட ஓராண்டிற்கு செல்லும் ஒளியின் தூரத்தை கணக்கிட்டு ஒளியாண்டு என வரையறை செய்து விண்மீன்களின் தூரத்தை இத்தனை ஒளியாண்டுகளென அளவிட்டு கூறுவதுண்டு.

★ நமக்கு மிக அண்மையிலுள்ள நட்சத்திரத்தின் ஒளி ஏறக்குறைய நான்காண்டுகள் வரையிற் செல்லும்.

★ மிகத்தூரத்திலுள்ள துருவ நட்சத்திரத்திலிருந்து ஏறக்குறைய ஐம்பதாண்டுகளில் ஒளி பூமியை வந்து சேருகிறது.

★ விண்மீன்கள் பரிதியைப் போல் இரண்டரைக்கோடி மடங்கு பருமனுடையதாகவும் காணப்படும்.

★ ஒளி குறைந்த விண்மீனுக்குப் பதிலாக மாற்றி வைப்பின் பூமியிலுள்ள கடல்களும் ஆறுகளும் ஏனைய நீர்நிலைகளும் உறைந்து போகும், பூமியைச் சூழ்ந்துள்ள காற்றும் நீராக மாறி கட்டியாகி விடும் உயிரினங்கள் விறைத்து குளிர் தாங்க மாட்டாமல் இறந்தொழிந்து போய்விடும்.

★ மிகக்கூடிய ஒளியுடைய சிறியஸ் என்னும் விண்மீனை பகலவனுக்கு ஒப்பாக அதனிடத்தில் நிறுத்தினால் இந்தப் பூமி முழுதும் கனப்பொழுதில் உருகி கரைந்து புகையாகிப் போய்விடும்

★ நேர் வடக்கு அடிவானத்தின் நகராமல் இருக்கும் நட்சத்திரம் துருவன் என்றும் வடபுறத்தை நிமிர்ந்து சாய்ந்து செல்வதாகத் தோன்றும் ஏழு நட்சத்திரங்கள் கலப்பை போல் தோற்றமுடையதை சப்தரிஷி மண்டலம் என்றும் தெற்கு வானில் தென்சிலுவை நட்சத்திரம் எனவும் அழைப்பர்.

**க.லவனிதா** (தரம் 11)

சிறுகதை

# தாயன்பு



"டாண் டாண்" மணி ஒலித்தது. எந்நேரமும் சத்தமாக இருக்கும் இடம். அன்று அமைதியாக இருந்தது. வெளிக் கதவிலிருந்து தள்ளி, கொஞ்சத்தூரத்தில் அழு குரல்களும் ஒப்பாரிகளும் கேட்டுக்கொண்டிருந்தது. எல்லோரும் அந்த இடத்தில் குழுமியிருந்தனர். ஆம் மாணிக்கம் பாட்டி இறந்து விட்டாள். அந்த முதியோர் இல்லத்தில் மிகவும் வயது முதிர்ந்தவள் அவள் தான். எல்லோரிடமும் மிகவும் அன்பாகப் பழகுவதோடு அவள் இரக்க சுபாபவமும் கொண்டவள். அவளது 98வது பிறந்த தினத்தை மகிழ்சியாக கொண்டாடிக் கொண்டிருந்த சமயம் அது நடந்தது. அன்று மாணிக்கம் பாட்டி அதிக சந்தோஷமாயிருந்தாள். அச்சந்தோசத்துடனே அவள் மூச்சு அடங்கி விட்டது. "மகனுக்கு தந்தி அடிச்சாச்சா?" என ஒருவர் உரத்துக் கேட்டார். "என்னத்த அடிச்சு என்னத்திற்கு, வரவா போகுதுகள்" எனச் சொல்லி விம்மினாள் செல்லம்மா.

முதியோர் இல்லத்தில் வந்து சேர்ந்து இரண்டு மாதங்களுக்குள் அவள் மாணிக்கம் பாட்டியைப் பற்றி நன்கு புரிந்து கொண்டிருந்தாள். அங்கிருக்கும் எல்லோரையும் விட அவளுக்கே அதிக கவலையாக இருந்தது. "மகனுக்கு காலையில் தந்தி அடித்து, இன்னும்



காணல்ல" ஒருவர் முணுமுணுத்தார். "ஐந்து மணி வரைக்கும் பார்ப்பம்" என ஒரு முதியவர் சொன்னார். காத்திருந்து மணி 5.30 ஆகிவிட்டிருந்தது. "இனியும் பார்க்க ஏலாது, சவத்தை எடுப்பம்" என ஒருவர் சொல்ல, மாணிக்கம் பாட்டியின் இறுதி ஊர்வலம் சுடலையை நோக்கிச் சென்றது. மாணிக்கம் பாட்டியின் அடக்கம் பண்ணிவிட்டு வந்து அனைவரும் முழுகி முடிந்து அவரவர் காரியங்களைப் பார்க்கத் தொடங்கிவிட்டார்கள். ஆனால் செல்லம்மாவிற்கோ எந்தக் காரியத்திலும் மனம் ஓடவில்லை. ஒரு அறையின் மூலையில் இருந்து அழுது கொண்டிருந்தாள். அவளது மனமோ தனக்கும் ஒரு நாள் இதே கதிதானே? என்பதையே நினைத்துக் கொண்டிருந்தது. அவள் அழுகையுடனே கடந்தகால எண்ணங்கள் அவள் மனதில் ஓட ஆரம்பித்தன. அப்பொழுது அவள் திருமணம் முடித்த புதிது. தனிக்குடித்தனம்.

வந்திருந்தார்கள். கணவன் கதிர்வேலு ஒரு மில்லில் வேலை பார்த்து வந்தான். கதிர்வேலு மிகவும் நல்லவன். எந்தவித கெட்ட பண்பும் இல்லாதவன். கதிர்வேலுவின் கூலி அவர்களது குடும்ப வண்டி நகரப் போதுமானதாகவே இருந்தது.

எந்தவிதக் குறையும் இல்லாமல் இருவரும் சந்தோஷமாக வாழ்ந்து வரும் வேளை, மேலும் ஒரு சந்தோசமான செய்தியாக தன் மனைவி கர்ப்பமுற்றிருப்பதை அறிந்தான். கதிர்வேலு மிக மகிழ்ச்சியுடன் மனைவிக்கு வேண்டிய பொருட்கள் எல்லாம் வாங்கிக் கொண்டு தனது துவிச்சக்கரவண்டியில் வேகமாக வந்து கொண்டிருந்தபோதுதான் அது நடந்தது. பெரிய ஒரு வாகனம் சந்தியில் திரும்பும் போது கதிர்வேலுவை துவிச் சக்கர வண்டியுடன் கீழே தள்ளியது. அந்த நொடியிலே வாகன வடிவில் வந்த எமன் கதிர்வேலுவைக் கொண்டுபோய்விட்டான். மகிழ்சியுடன் இருந்த செல்லம்மாவிற்கோ இந்த செய்தி பேரிடியாக வந்து விழுந்தது. இதைக் கேள்வியுற்ற பாதி நோயாளிகளான செல்லம்மாவின் அம்மா அப்பா மகளின் வாழ்வை நினைத்து ஏக்கத்திலே இறந்துவிட்டனர். கர்ப்பிணியான செல்லம்மா தன் குழந்தைக்காக இந்த சோகமயமான அதிர்ச்சி களைத் தாங்கி உயிர் வாழ்ந்தால் தன்னையும் தன் வயிற்றிலிருக்கும் சிசுவையும் காப்பாற்ற தன் கணவன் வேலை செய்த மில்லிலே அவளும் மிகவும் கஷ்டப்பட்டு வேலை செய்தாள்.

ஒரு நாள் செல்லம்மா விற்கு ஆண்குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு தன் கணவன் பெயரையே இட்டு அதனைக் கஷ்டம் தெரியாமல் வளர்த்து வந்தாள். அவனைப் படிக்க வைப்பதற்கு தான் பட்டினியாய் இருந்து அயல் வீடுகள் மில் போன்ற பல இடங்களில் இரவு பகலாக வேலை செய்து அவன் படித்து பட்டம் பெறுமளவிற்கு அவள் அவனை உருவாக் கினாள். பட்டம் பெற்ற கதிர்வேலு உயர்கல்வியை தொடர வெளிநாடு பயணமானான். இவ்வளவு நாள் தான் கஷ்டப்பட்டு தன்னை வருத்தம் தெரியா மல் வளர்த்த தாயை விட்டுச் சென்றுவிட்டான். அவன். சென்றவன் வரவே இல்லை. சென்று ஒரு 5 வருடங்களின் பின் வந்தான். அவன் மட்டுமல்ல அவன் மனைவி இரண்டு பிள்ளைகள் அவன் தாயிடம் சொல்லாமல் அங்கே மணமுடித்து விட்டான். வந்தவுடன் கதைக்க கூடாதென்று இருந்த செல்லம்மா தன் மகனைக் கண்டவுடன் தாயன்பு அதற்கு இடம் கொடுக்கவில்லை. தன் மகனை உரிமைபொங்க அள்ளி முத்தமிட்டாள். அவளது தாய் அன்பு மருமகளுக்குப் புரிய வில்லை போல. வெறுப்புடன் வாயைக் கோணினாள். அவள் பேரக் குழந்தைகளை கொஞ்ச வந்தவளை மருமகள் ஆணவத்துடன் தள்ளிவிட்டுட்டாள். குழந்தைகளை தரதர வென இழுத்து உள்ளே சென்றுவிட்டாள்.

இச்சம்பவங்களை அவள் மகன் சோமு பார்த்துக் கொண்டிருந்தான். பின் அவனும் எதுவும் பேசா மல் உள்ளே சென்று விட்டான். செல்லம்மா தனிமையிலிந்து அழுதாள். அது மகன் வந்துவிட்டதால் வந்த ஆனந்தக்கண்ணீரா? அல்லது தனது மருமகள் செய்கையால் வந்த துன்பக் கண்ணீரா? என்பது புரியவில்லை அவள் அழுதாள் பின் கதிர்வேலு ஒரு மாதம் தான் அங்கிருந்தான்.

அந்த ஒரு மாதமும் தன் தாயை கவனிக்கவில்லை. தன் மனைவியின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு அவள் பின்னாலே திரிந்தான். தான் செல்வதற்கு முதல் நாள் தன் தாயிடம் வந்து அவள் வாழ்ந்து கொண்டிருந்த இந்த வீட்டை தன் மனைவியின் விருப்பப்படி விற்றுவிட்டதாகவும் தாங்கள் மறுபடியும் வெளிநாடு போகப்போவதாகவும் செல்லம்மாவை முதியோர் இல்லத்தில் சேர்க்கப் போவதாகவும் சொல்லி செல்லம்மாவின் சம்மத்ததைக் கேட்டான். சிறு வயதிலிருந்தே அவன் ஆசைக்கு முட்டுக்கட்டையாக இருக்காதவள் உன் விருப்பப்படியே செய் எனக் கூறினாள் கணவன் வாழ்ந்த அந்த வீட்டை விட்டு கனத்த நெஞ்சத்துடன் வெளியேறினாள். தன் மனைவி சொல்லை மந்திரமாக நினைத்த அவள் மகன் மீது இன்றும் கோபம் கொள்ள அவள் தாயன்பு இடம் தரவில்லை செல்லம்மாக்கா &.. செல்லம்மாக்கா &.. என்ற அழைத்த குரலுக்கு திடுக்கிட்டு தனது பழைய நினைவிலிருந்து விடுபட்டாள் செல்லம்மா.

"என்ன செல்லம்மாக்கா இன்னும் சாப்பிடவில்லையா? வாங்க சாப்பிடுவம்" என்று கூப்பிட்ட அம்முதியோர் இல்லத்திற்குப் புதிதாய் வந்திருக்கும் கமலத்தை புது உறவாக நினைத்து அவள் பின்னே சென்றாள் செல்லம்மா. ■

க.சுஜா
(தரம் - 10)

## வருட நிறைவு விழாக்கள்

| | |
|---|---|
| முதல் வருட நிறைவு விழா | : காகித விழா |
| இரண்டு வருட நிறைவு விழா | : பருத்தி விழா |
| மூன்று வருட நிறைவு விழா | : தோல் விழா |
| நான்கு வருட நிறைவு விழா | : மலர் மற்றும் பழ விழா |
| ஐந்து வருட நிறைவு விழா | : மரவிழா |
| ஆறு வருட நிறைவு விழா | : சர்க்கரை இரும்பு விழா |
| ஏழு வருட நிறைவு விழா | : கம்பளி செம்பு விழா |
| எட்டு வருட நிறைவு விழா | : வெண்கல விழா |
| ஒன்பது வருட நிறைவு விழா | : மண்கலச விழா |
| பத்து வருட நிறைவு விழா | : தகரம்/அலுமினிய விழா |
| பதினொரு வருட நிறைவு விழா | : உருக்கு விழா |
| பண்ணிரண்டு வருட நிறைவு விழா | : லினன் விழா |
| பதின்மூன்று வருட நிறைவு விழா | : பின்னல் விழா |
| பதின்நான்கு வருட நிறைவு விழா | : தந்த விழா |
| பதினைந்து வருட நிறைவு விழா | : பளிங்கு விழா |
| இருபது வருட நிறைவு விழா | : பீங்கான் விழா |
| இருபத்தைந்து வருட நிறைவு விழா | : வெள்ளி விழா |
| முப்பது வருட நிறைவு விழா | : முத்து விழா |
| நாற்பது வருட நிறைவு விழா | : மாணிக்க விழா |
| ஐம்பது வருட நிறைவு விழா | : பொன் விழா |
| அறுபது வருட நிறைவு விழா | : வைர விழா/மணிவழா |
| எழுபத்தைந்து வருட நிறைவு விழா | : பவள விழா |
| எண்பது வருட நிறைவு விழா | : அமுத விழா |
| நூறு வருட நிறைவு விழா | : நூற்றாண்டு விழா |
| ஆயிரம் வருடம் நிறைவு விழா | : மிலேனியம் விழா |





ந.ஜெயதர்சினி
(தரம் - 10)

# கல்வியைப் பற்றி



# நீதி நூல்களிலிருந்து......




- **"ஓதுவது ஒழியேல்"**
  எப்போதும் நல்ல புத்தகங்களை படித்துக் கொண்டேயிருக்க வேண்டுமாம்.
  **ஆத்தி சூடி**

- **"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"**
  மனிதனின் கண்கள் மனிதனுக்கு எவ்வளவு தேவையோ
  அதே போல் கல்வியும் தேவை
  **கொன்றை வேந்தன்**

- **"ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்"**
  படிக்காமல் ஒருநாளும் இருக்கக்கூடாது.
  **உலக நீதி**

- **"அறிஞர்க்கழகு கற்றுணர்ந்தடங்கல்"**
  கல்வியை கற்று அடக்கமாக இருத்தலே
  அறிவுடையவனின் பண்பு
  **வெற்றி வேற்கை**

- **"கவையாகிக் கொம்பாகி காட்டகத்தே நிற்கும்
  அவையல்ல நல்ல மரங்கள் - சபை நடுவே
  நீண்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
  மாட்டாதவன் நன்மரம்"**



  கல்வியறிவற்றவனும் பிறரது குறிப்பை உணர முடியாதவனும்
  மரத்திற்கு சமன்
  **வாக்குண்டாம்**

- **"பொய்ப்புலன்கள் ஐந்து நோய் புலியா பாலனறியே"**
  மெய்ப்புலவர் தம்பால் விளையாவாம் துப்பின்
  சுழற்றும் கொள் காற்று சூறாவளி பாய்ச்
  சுழன்றும் சிறு புண் துரும்பு



  மயக்கத்தை உண்டாக்கும் ஐம்புலன்களும்
  அறிவற்றோரை வருத்துமே ஒழிய கற்றோரை வருத்தாது
  **நன்னெறி**

- **"கற்க கசடற கற்றவை கற்ற பின்
  நிற்க அதற்குத் தக"**
  கற்பதற்கேற்ற நூல்களை குற்றமில்லாமல் கற்க வேண்டும்
  கற்ற நூல்களின் அறிந்து கொண்டவற்றிற்கு தக்கவாறு
  வாழ்கையில் அவற்றை பின்பற்றி நடக்க வேண்டும்.
  **திருக்குறள்**

- **"ஒருமைக் கண்தான் கற்ற கல்வி ஒருவர்க்கு
  எழுமையும் ஏமாப்புடைத்து"**
  ஒருவன் ஒரு பிறவியில் கற்ற கல்வியால் வரும் பெருமையானது அப்பிறப்பிற்கு
  மட்டுமல்லாமல் ஏழு பிறப்பிற்கும் தொடர்ந்து வரும்
  **திருக்குறள்**

கு.சத்தியலட்சுமி - (தரம் - 11)

## விளையாட்டுத் துறைசார்ந்த விடயம்

| விளையாட்டு | மைதான அளவு | விளையாட்டு வீரர் எண்ணி. |
|---|---|---|
| கால்பந்து நீளம் | 100 – 130 யார் | 11 பேர் |
| கிரிக்கட் | 22 யார் பிட்ச் | 11x2 |
| கரப்பந்தாட்டம் | 50x20 அடி | 6 பேர் |
| டெனிஸ் ஒற்றையர் | 75 x 27 | 2 பேர் |
| டெனிஸ் இரட்டையர் | 20 x 44 | 4 பேர் |
| கூடைப் பந்து | 80 x 44 யார் | 5 x 2 |
| கொக்கி | 100 x 65 யார் | 11 பேர் |
| பட்மின்டன் | கம்பத்தின் உயரம் 5"1' | |
| எல்லே | | 16 பேர் |

**கிராமிய விளையாட்டுக்கள்**

கிளித்தட்டு, கிட்டிப்புள், சடுகுடு, வட்டக்காவடி, கண்ணாம் பொத்தி, சில்லுப் பந்து, வார் விளையாட்டு குறிப்பு இவை அனைத்தும் குழு விளையாட்டுக்கள் இதற்கு நிர்ணயிக்கப்பட்ட விதிமுறையில்லை கிராமத்தைப் பொறுத்து வேறுபடும்.

**தொகுப்பு : தரம் 5 மாணவர்கள்**

## அறிஞர்களின் கல்விப் பொன்மொழிகள்



- ஆயிரம் நாட்கள் கவனமாகப் படிப்பதை விட, நல்ல சிந்தனையுள்ள ஆசிரியருடன் ஒருநாள் கழிப்பது பெரிதானது.
- கல்வி என்பது வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்வதல்ல, கல்வியே வாழ்க்கையாகும்.
- ஆசிரியர்கள் எப்போதும் கல்வியியலின் பிரதானமான தூண்கள் ஆவர்.
- ஆசிரியர்கள் தேசியத்தைக் கட்டி எழுப்புபவர்கள்
- ஆசிரியர்கள் மற்றைய எல்லோரையும் விட நாகரிகத்தின் காவலர்கள்
- நான் கற்பித்தால் எதிர் காலத்தை உணர்த்துவேன்.

**ஜெ.நிசாந்தினி**
(தரம் - 7)

## தந்தையர்களை அறிவோம்

1. கணினியின் தந்தை
   **சாள்ஸ் பபேஜ்**
2. தட்டச்சின் தந்தை
   **கிறிஸ்டோபர் லதாம் ஷோள்ஸ்**
3. கணக்கியலின் தந்தை
   **லூக்கா பெரியோலி**
4. மின்சாரத்தின் தந்தை
   **மைக்கள் பரடே**
5. சாரணியத்தின் தந்தை
   **பேடன் பவல் பிரபு**
6. கணிதத்தின் தந்தை
   **ஆர்க்கிமிடீஸ்**
7. பக்றீரியாவின் தந்தை
   **லூயிபாஸ்டர்**
8. குடித்தொகை கல்வியின் தந்தை
   **ஜோன் கிரான்ட்**
9. அரசியலின் தந்தை
   **அரிஸ்டோட்டில்**
10. நவீன மருத்துவத்தின் தந்தை
    **கிப்போகிரட்டீஸ்**
11. தமிழ் தட்டச்சின் தந்தை
    **இ.முத்தையா**
12. இலங்கை இந்துக் கல்வியின் தந்தை
    **ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்**

**சு.ஜினோராஜ் தர**



# முதுகில் ஒரு மூட்டை



திருமதி.ப.சின்னத்தம்பி
TRI.PRI

மேதைகள்
இப்போது
சீதைகள் மாதிரி
சிறை இருக்கிறார்கள்
அசோக வனத்திலல்ல
சோகவனத்தில்!
இலட்சியம் செய்யாததால்
கல்வி இங்கே
இதயத்தில் சுமக்கும்
இனிமையாய் இல்லாமல்
முதுகில் சுமக்கும்
மூட்டையாகிவிட்டது
கொடுமை என்னவென்றால்
குழந்தைகள் எல்லாம்
கூனிகளாகினர்!

காகிதத்தில் செய்த
பட்டமாவது
பறக்கிறது
அப்புறம்
எங்கள்
மாணவ மணிகள்
படித்து வாங்கிய
பட்டமோ
மாணவர்களை
இறக்குகிறது




வேலைதேடி
ஒவ்வொருபடியாய்
ஏறி ஏறி
இறக்குகிறது

லட்சுமி தன்னை
இலட்சியம் செய்ததால்
இங்கே
சரஷ்வதி மிகவும்
சங்கடப் படுகிறாள்

கலைமகளின் வீணையை
ஏலம் போடுகிறார்கள்
அன்பான
அரசியல் வாதிகள்

ஒரு காலத்தில்
ஆசிரியர்களின் கையில்
செங்கோல் இருந்தது!

அது – வெறும்
பிரம்பானது
அந்தப்பிரம்பும்
இப்போது பயன்படுவது

அடிக்க அல்ல
ஆசிரியர்கள்
தம்மைத் தாமே
அடித்துக்கொள்ளத்தான்

இதனால்
கல்வி இங்கே
நமத்துப் போன
தீக்குச்சியைப் போல்
சும்மா
உரசிப் பார்த்துவிட்டு
உதிர்ந்து போகின்றது

கல்வியை
கண்ணென்கிறார்கள்
உண்மைதான்
அதற்கிங்கே
அறுவைச் சிகிச்சை
அவசியமாயுள்ளது

# என் விந்தை



திரு..வே.கார்த்திகேசு
Maths.Trd.

1 X 9 + 2 = 11

12 X 9 + 3 = 111

123 X 9 + 4 = 1111

1234 X 9 + 5 = 11111

12345 X 9 + 6 = 111111

123456 X 9 + 7 = 1111111

1234567 X 9 + 8 = 11111111

12345678 X 9 + 9 = 111111111

---

12345679 X 09 = 1 1 1 1 1 1 1 1 1

12345679 X 18 = 2 2 2 2 2 2 2 2 2

12345679 X 27 = 3 3 3 3 3 3 3 3 3

12345679 X 36 = 4 4 4 4 4 4 4 4 4

12345679 X 45 = 5 5 5 5 5 5 5 5 5

12345679 X 54 = 6 6 6 6 6 6 6 6 6

12345679 X 63 = 7 7 7 7 7 7 7 7 7

12345679 X 72 = 8 8 8 8 8 8 8 8 8

12345679 X 81 = 9 9 9 9 9 9 9 9 9

---

37 X 03 = 1 1 1

37 X 06 = 2 2 2

37 X 09 = 3 3 3

37 X 12 = 4 4 4

37 X 15 = 5 5 5

37 X 18 = 6 6 6

37 X 21 = 7 7 7

37 X 24 = 8 8 8

37 X 27 = 9 9 9

---

1 X 8 + 1 = 9

12 X 8 + 2 = 98

123 X 8 + 3 = 987

1234 X 8 + 4 = 9876

12345 X 8 + 5 = 98765

123456 X 8 + 6 = 987654

1234567 X 8 + 7 = 9876543

12345678 X 8 + 8 = 98765432

123456789 X 8 + 9 = 987654321

திருமதி.ப.பிரதீஸ்வரன்
BA (Hons), PGDE



# கலை

கலை பற்றி நோக்கில் நுண்கலைகளுள் கட்டடம், சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம் என்பன அடங்கும். நுண்கலை சாராத கலைகளாக மந்திரம், மருந்து, விளையாட்டு என்பனவும் ஏனைய கைவினை கலைகளும் அடங்கும். இப் பிரிவுகள் மேலும் பாரம்பரிய கலைகள், காஸ்திரிய கலைகள், தொழில்நுட்ப கலைகள் என 3 வகை உண்டு. இவ் வகையில் இந் நுண்கலையானது வாழ்க்கையுடன் ஒன்றித்து மனிதன் காட்டுமிராண்டியில் இருந்து நாகரிகம் அடைந்தது வரையும் அதன் பின்னும் அவனுடைய ஒவ்வொரு படைப்பும் கலைப் பொருளாகவே அமைகின்றது.



கலை என்பதற்கு அவ்வக் காலங்களில் மக்களின் வாழ்வியல் பண்பாட்டிற்கு ஏற்பவும் நாகரிக வளர்ச்சிக்கு ஏற்பவும் அவரவர் எந்தெந்த கோணத்தில் நோக்குகின்றனரோ அந்தக் கோணத்தைப் பொறுத்தே விளக்கங்கள் தரப்படுகின்றன. காண்கின்ற காட்சியிலும் கேட்கின்ற இன்னிசை ஓசையிலும் மனம் கவர்ந்து நாட்டத்துடன் திரட்டப்படும் அழகுணர்வை ஒருவன் எவ்வாறேனும் புறக்கருவி வாயிலாக புலப்படுத்த ஆர்வம் கொள்கின்றான்.

அப்போது அவன் கல்லை கருவியாகக் கொண்டு சிற்பத்தையும் வண்ணத்தை கருவியாகக் கொண்டு ஓவியத்தையும், ஓசையை கருவியாகக் கொண்டு இசையையும், நடிப்பைக் கருவியாக கொண்டு நாடகத்தையும், கூத்தையும் படைக்கலானான். இவ்வாறாகவே சிறப்பாக ஒவ்வொன்றினையும் கருவியாகக் கொண்டு ஒவ்வொரு கலையும் வினைப்பாங்குடன் உருவாக்கலானான். ஒவ்வொரு கலைப்படைப்பும் ஒவ்வொரு திறனைக் கொண்டது. இந்த திறன் முக்கியமாக அமையினும் கற்பனையே உயிராக இருக்கும். கற்பனை தான் திறனை கையாளும் ரசவாதத்தையும் செய்கின்றது. அந்த கற்பனையை அடிப்படையாகக் கொண்டு அறிவு, ஊக்கம், செயல் திறன் ஆகியவை ஒருவகை தவத்தின் வெளிப்பாடே கலையாகின்றது.

கலை கருத்தின் உறைவிடம், அழகின் பிறப்பிடம், இன்பம் அதன் பயன். வெளித்தோற்றத்தை மட்டும் காட்டுவது கலையின் நோக்கமாகாது. அகத் தோற்றத்தையும் அது காட்டுதல் வேண்டும் அது தான் முழுமையான கலை மரபு. " கலையானது தன்னலமும் பழி பாவங்களும் நிறைந்த உலகை விட்டு நம்மை அப்பால் அழைத்துச் செல்வது" என ரவீந்திரநாத் தாகூர் குறிப்பிடுகின்றார். ஒரு கலை உண்மையாக உயர்ந்ததாக இருந்தால் அது உணர்ச்சிகளுக்கும் புலன்களுக்கும் இன்பம் அளிப்பதோடு அறிவுக்கும் விருந்தாக இருக்க வேண்டும் என அரிஸ்டோட்டில் குறிப்பிடுகிறார்.

கலை என்பது ஒரு மனிதன் உள்ளு ணர்விலேயே காணப்படுவது புறத்தேயுள்ள பொருளில் அல்ல" என்பார்கள் பௌத்தர்கள். இந்துக்களோ உள்ளுணர்வு புறத்தேயுள்ள பொருள் என்ற இரண்டையுமே கலையின் இரு கூறுகளாக காண்பர்". எனவே கலை என்பது ஒரு மனநிலையினையோ அன்றேல் விழுமியத்தையோ வெளிப்படுத்துவதற்கு வேண்டிய திறனுடை பயிற்சியே என்றும் கூறலாம்.

இக் கலையானது சமயத்தோடு மட்டும் அல்லாது சமூகத்தோடும் பின்னிப் பிணைந்துள்ள தன்மை உடையனவாக காணப்படுகின்றது. இவ்வாறாக ஒவ்வொரு கலைஞர்களும் ஒவ்வொரு விளக்கம் கொடுப்பதிலிருந்தும் "கலை" என்றால் இன்னது தான் என்று திட்டவட்டமாகக் கூற முடியாது இருப்பதுவே கலையின் சிறப்பியல்பு என்று கூறலாம்.

---

# தேசிய விளையாட்டுக்கள்

| | |
|---|---|
| இலங்கை | – கரப்பந்து |
| இந்தியா | – கொக்கி, கபடி |
| அவுஸ்ரேலியா | – கிரிக்கட் |
| ஐக்கிய அமெரிக்கா | – பேஸ்போல் |
| ஸ்பெயின் | – ஜல்லிக்கட்டு |
| யப்பான் | – கராத்தே, யூடோ |
| துருக்கி | – மல்யுத்தம் |
| கனடா | – பனி கொக்கி |
| ஸ்கொட்லாந்து | – கால்பந்து |
| பாக்கிஸ்தான் | – கொக்கி |

# English in the 21st Century in Sri Lanka.

English is the universal language European Countries has the mother language English. In Sri Lanka we speak English as a second language. Many countries in the world speak English as first language . Most of our educated people speak English very well. In our country, we have lot of English writers and poets.

Jasmine Guneratne is a famous English poet in Sri Lanka. English must be taught for all school students in their primary stage. Now in Sri Lanka English is taught for every student, from grade 01. It is necessary for our young generation for their bright future. They can speak English very well, from their childhood. They are able to write in English also.

English language is helps to communicate with other people who live in Native American, and western countries. Most of the developing countries English is spoken as official language. Now we use the English language as our second language.

*M.Christita Delima*
*Grade - 8*



செல்வி.க.கேமலா
Con. English

# Thoughts - சிந்தனைகள்

1. *Think twice before you speak.*
பேசுவதற்கு முன்னர் இரு முறை யோசி

2. *Be happy don't worry.*
மகிழ்ச்சியாய் இரு கவலைப்படாதே

3. *Think and grow rich.*
சிந்தி சிறப்புப் பெறுவாய்

4. *Be steady*
உறுதியாய் இரு

5. *Fight for Justice, Die for Justice*
நீதிக்காகப் போராடு நீதிக்காக மடி

6. *Love is winning together*
ஒன்றாக இருந்தால் அன்பு வளரும்

7. *I don't know where I am going but, I am on my way.*
எங்கே போகின்றேன் என்பது எனக்கு தெரியாது, ஆனால் நான் எனது வழியில் செல்கின்றேன்.

8. *Don't forget, what is good, don't forsake, what is excellent.*
நல்லதை மறக்காதே நல்லதை கைவிடாதே

9. *Memories are the sweetest*
நினைவுகள் இனிமையானது

10. *Nearer to nature is dearer to God.*
இயற்கையை நேசித்தால் இறைவனைக் காண்பாய்

11. *Obedience is better than sacrifice*
தியாகத்தை விட கீழ்படிவு மேன்மையானது

12. *Violence never wins.*
வன்முறை ஒருபோதும் வெல்வதில்லை

13. *Education prepares us for tomorrow*
கல்வி எதிர்காலத்திற்கு எம்மை தயார்படுத்து கின்றது.

14. *Reading makes a full man. Writing makes an exact man. Speaking makes a ready man.*
வாசிப்பது மனிதனை பூரணமாக்குகின்றது. எழுதுவது மனிதனை சரியாக்குகின்றது. பேசுவது மனிதனை தயார்படுத்துகின்றது.

15. *Time is gold*
நேரம் பொன்னானது

16. *Honesty is the best policy*
நேர்மை தான் சிறந்த கொள்கை

17. *Learn,when you are young*
இளமையில் கல்

18. *There is no substitute for hard work.*
கடின உழைப்புக்கு நிகர் எதுவும் இல்லை.

19. *Theory is beautiful but practical is very difficult.*
கதைப்பது இலகுவானது நடைமுறை என்பது மிகக் கடினமானது.

திருமதி.சு.சாம்டினேஷ்
BBA



# What is Life?

A - Avoid negative source, people, thanks and habit.
b - Believe in yourself.
C - Consider things from every angle.
d - Don't give up and give in.
E - Enjoy life today, yesterday is gone and tomorrow may never come.
f - Family and friends are hidden treasures seek them enjoy their riches.
G - Give more than you planned to give.
h - Hang on your dream.
I - Ignore those who try to discourage you.
j - Just do it
K - Keep on trying, no matter how hard it seems. It will get better.
l - Love yourself first and foremost.
M - Make it happen.
n - Never lie, cheat or steal. Always strike a fair deal.
O - Open your eyes and see thing as they really are.
p - Practice makes perfect.
Q - Quitters never win and winners never quit
r - Read, study and learn about everything important in your life.
S - Stop procrastinating
t - Trust on god and ask him to help you, you achieve your dreams.
U - Understand yourself in order to better understand others.
v - Visualize it.
W - Want it more than anything.
x - Accelerate your efforts.
Y - You are unique of all of god's creations nothing can replace you.
z - Zero in your target and go for it!

# இலங்கையில் இடைநிலைப் பாடசாலை அதிபர்கள் பாடசாலை முகாமைத்துவத்தில் "வினைதிறன்", "செயற்படு திறன்" தொடர்பாக எதிர்நோக்கும் பிரச்சினைகளும் அதற்கான பொருத்தமான தீர்வுகளும்



**திரு.வீ.அரசரெத்தினம்**
அதிபர் 2II, Trd.Soc

இலங்கை இடைநிலைப் பாடசாலைகளைப் பொறுத்தவரையில் பாடசாலை முகாமைத்துவத்தினை நிர்வகிப்பவராக அதிபர் ஒருவரே காணப்படுகின்றார். பாடசாலை முகாமைத்துவத்தை சிறப்பாக நடாத்துவதற்கு அதிபர் பல வழிகளிலும் செயற்பட்டு வருகின்றார். முகாமைத்துவத்தினைச் செயற்படுத்துவதில் அதிபர் பலவகையான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலைமை இலங்கையின் இடைநிலைப் பாடசாலைகளில் அதிகமாகவே காணப்படுகின்றது. இந்த வகையில் இடைநிலைப் பாடசாலை அதிபர்கள் வினைத்திறன், செயற்படுதிறன் சம்பந்தமாக எதிர்நோக்கும் பிரச்சினைகளை நோக்குவோம்

முதலில் வினைத்திறன் செயற்படு திறன் என்பனவற்றினை விளங்கிக் கொண்டதன் பின்னர் இது தொடர்பான பிரச்சினைகளை எடுத்தாராய்வது சிறந்ததாகும். இதில் வினைத்திறன் என்பது "ஒரு பாடசாலையில் உள்ள வளங்களை உச்சப்பயன் தரும் வகையில் சிக்கனமாகப் பயன்படுத்துவதைக் குறிக்கும். இது உள்ளீட்டுடன் சம்பந்தப்பட்ட தொன்றாகவும் இழிவான வளங்களைக் கொண்டு உச்சப் பயனைப் பெற முடியுமாயின் அதுவே வினைத்திறனின் உயர் மட்டமாக அமையும். இதில் பாடசாலை அதிபர் வளங்களை சிறந்த முறையில் திட்டமிட்டு பயன்படுத்துவதனைக் குறிக்கின்றது.

அடுத்து செயற்படு திறனை நோக்குவோமாயின் "பொருளாதாரத்தில் கல்விக்காக செலவிடப்படும் மூலதனம் வரையறுக்கப்பட்டதாகும். அதனால் வரையறுக்கப்பட்ட வளங்களால் உச்சப் பயனைப் பெறக்கூடியதாக பாடசாலையின் செயற்திறன் அமைய வேண்டும் இதுவே பாடசாலையின் செயற்திறன் என குறிப்பிடலாம். அதாவது ஒரு பாடசாலை தான் இனங்கண்டுள்ள நோக்கங்களை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்வதனை செயற்படு திறன் எனக் கூறிக் கொள்ளலாம்.

இனி இவ்விரண்டும் எந்தளவில் இடைநிலைப் பாடசாலைகளில் பிரச்சினையைத் தோற்றுவிக்கின்றது என்றும் அதற்கான தீர்வினையும் நோக்குவோம். முதலில் செயற்படு திறனை நோக்கும் போது பாடசாலையின் நோக்கங்களோடு சம்பந்தப்பட்ட இவ்வெண்ணக்கரு இடைநிலைப் பாடசாலைகளில் அதிபர் பாடசாலையின் நோக்கங்களை இனங்கண்டு அதனை வெற்றிகரமாக செயற்படுத்துவதில் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். இதில் பெரும்பாலும் வளப்பற்றாக்குறைப் பிரச்சினையினை குறிப்பிடலாம். இது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதில் பல சிக்கல்களை ஏற்படுத்துகின்றது. இவ் வளப்பற்றாக்குறைப் பிரச்சினை தேசிய கல்வி நோக்கங்களையும், பாடசாலையின் விசேட நோக்கங்கயையும் சரியான முறையில் நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் இடைநிலைப் பாடசாலை அதிபர்கள் பல பிரச்சினையை எதிர்நோக்குகின்றனர். அத்துடன் வளப்பகிர்வு தொடர்பாகவும் இவர்கள் பிரச்சினையை எதிர்நோக்குகின்றனர்.

வளப்பிரச்சினை என்னும் போது மனித வளம், பௌதீக வளம் எனப்பிரித்துக் கொள்ளலாம். வினைத்திறன், செயற்படுதிறன் என்பன இவ்வளப் பிரச்சினைகளை முகங் கொடுக்கும் போது பல பிரச்சினைகளை அதிபருக்கு ஏற்படுத்துகின்றது. இந்த வகையில் அநேகமான இடைநிலைப் பாடசாலைகள் கிராமப் புறத்தினில் அமைந்துள்ளமையினால் வளங்களைப் பெற்றுக் கொள்வதிலும், அதனைப் பயன்படுத்துவதிலும், வளப்பகிர்விலும் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக் வேண்டி இருக்கிறது. இதனால் வினைத்திறன், செயற் படுதிறன் என்பனவற்றை சரியாகவும் சிறப்பா கவும் செயற்படுத்த முடியாது போகின்றது.

செயற்படு திறனானது வினைத்திறனில் தங்கியுள்ளது. பாடசாலைகளில் அதிபர் சிறந்த முகாமைத்துவத்தினை எடுத்துச் செல்ல வேண்டுமாயின் திட்டமிட்ட செயற் பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கான ஆளணியினர் அதாவது இணைப்பாளர்கள், தர இணைப்பாளர்கள் வகுப்பு இணைப்பா ளர்கள், பாட இணைப்பாளர்கள் காணப்படுவ தில்லை. எனவே இலங்கை இடைநிலைப் பாடசாலைகளின் அதிபர் பாடசாலை முகாமைத் துவத்தில் வினைதிறன் செயற்படுதிறன் என்பனவற்றை பெற முடியாதுள்ளது.

வினைத்திறனைப் பொறுத்தவரை வளங்களை ஒரு பாடசாலையின் முகாமைத் துவத்தின் வெற்றிக்கு பயன்படுத்த வேண்டும் இவ்வாறு வளங்களைப் பயன்படுத்துவதன் மூலமே செயற்படுதிறனாகிய பாடசாலை நோக்கங்களை வெற்றி கொள்ள முடியும். ஆனால் பாடசாலை நோக்கங்களை நிறைவு செய்து கொள்வதற்குத் தேவையான வளங் களும் பற்றாக்குறையாக இருப்பதனால் இடைநிலைப் பாடசாலைகளில் அதிபர் பாடசாலை முகாமைத்துவத்தில் மேற்கூறப்பட்ட இரண்டு விடயங்களையும் நிறைவேற்றுவதில் சிக்கல்களுக்கு முகம் கொடுக்கின்றார்.

வளங்களைப் பகிர்ந்து கொடுத்து பாடசாலைகளில் முகாமைத்துவத்தினை செயற்படுத்துவதற்குத் தடையாக ஆளணியினர் பற்றாக்குறையாகக் காணப்படுகின்றனர். இதனால் சில பாடசாலைகளில் வளங்களை திட்டமிட்ட அடிப்படையில் பகிர்ந்து கொடுக்க முடியாத நிலையும் காணப்படுகிறது. இது அப்பாடசாலையின் நோக்கத்தை நிறைவு செய்ய முடியாத நிலையும் காணப்படும்.

இடைநிலைப் பாடசாலைகளில் பெரும்பாலான அதிபர்கள் முகாமைத்துவ திறன்களைப் பற்றி அறியாதவர்களாக இருக் கின்றார்கள். இதனால் இவர்கள் முகாமைத் துவத்தில் அறிவு குறைவினால் வளங்களை முற்றாக திட்டமிட்ட அடிப்படையில் பகிர்ந்து அபிவிருத்தியினை அதாவது வினைத்திறனூ டான பாடசாலையின் நோக்கங்களை எய்த முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது. இது இலங்கையின் இடைநிலைப் பாடசாலைக ளின் பெரும்பாலும் கிராமப்புறம் மற்றும் பின்தங்கிய பாடசாலைகளில் பெரும்பாலும் காணக்கூடியதாகவுள்ளது.

மற்றும் பாடசாலையின் நோக்கங்கள் எவ்வளவு தூரம் நிறைவேறியுள்ளன என்பதை அளவிடுவதற்குப் பொருத்தமான நுட்பமுறை களைப் பயன்படுத்துவதில் இடைநிலைப் பாடசாலை அதிபர்கள் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். அதாவது தரப்படுத்தல், பரீட்சைகள், பாடசாலைக்கு புகழைத் தேடித் தரும் செயற்பாடுகள், பாடசாலை பற்றிய விமர்சனம், மதிப்பீடு, அபிவிருத்திச் செயற் பாடுகள், பெற்றோர் தொடர்பு, சிறந்த மனப் பாங்கு திறன் என்பன வற்றை அளவிடுவதில் பல நுட்பங்களை பயன்படுத்தலாம். ஆனால் இடைநிலை பாடசாலைகள் அதிபர் செயற் திறனை அளவிடுவதால் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றார். உதாரணமாக அபிவிருத் திச் செயற்பாடுகள் பற்றிக் கூறும் போது பாடசாலை அபிவிருத்தி செய்ய பல திட்டங் களை முன்வைத்தாலும் அவை பல கார ணங்களால் செயலற்றுப் போகின்றது. இதனால்

அபிவிருத்தி செயற்பாட்டுத் திறனை அளவிடு வதில் பிரச்சினையை எதிர்கொள்ளவேண்டிய சூழ்நிலை அதிபருக்கு ஏற்படுகின்றது.

மற்றும் பாடசாலையின் தலைமைத் துவம் தீர்மானம் இயற்றும் முறைகள் பாடசா லையில் வெளியாரின் ஒத்துழைப்பு வளங்களைப் பகிர்ந்து செயற்படுத்தும் பாடசாலைகளின் சூழலும் சுகாதாரம் தொடர்புறும் முறைகள் என்பனவும் ஓர் இடைநிலைப் பாடசாலைகளின் முகாமைத்துவ செயற்பாடுகளில் முழுமை யாக செயற்படுத்தும் போதுதான் வினைத் திறன், செயற்திறனைச் சிறப்பாக்க முடியும். ஆனால் இடைநிலை பாடசாலையில் இவ்வா றான செயற்பாடுகள் முகாமைத்துவத்தில் பங்குபற்றுவதில் முழுமையாக ஈடுபடுவதில்லை உதாரணமாக பாடவிதானத்தைச் செயற்படுத் துவது தொடர்பாக பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றது. பாடவிதான செயற்பாடு களைச் செயற்படுத்துவதற்கு வளங்களின் பற்றாக்குறையானது இதற்கு அடிப்படையாக இருக்கின்றது.

அடுத்து இடைநிலைப் பாடசாலை களின் பாடசாலை முகாமைத்துவத்தில் வினைத்திறன் செயல்படுதிறன் தொடர்பாக எதிர்பார்க்கும் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை நோக்கும் போது செயல்படுதிறனை செயற் படுத்துவதில் வளப் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்ய வேண்டும். வளங்களை இப்பாடசாலை அதிபர்கள் பெற்றுக் கொள் வதில் தன்னால் இயன்ற முயற்சிகளை எடுத்தல் வேண்டும். வளங்களுள் ஆசிரியர் ஆளனி, பௌதீக வளம், என வகைப்படுத்தி நோக்க முடியும். இவற்றுள் ஆசிரியர் ஆளனிப் பிரச்சினையை பாடசாலையின் பழைய மாண வர்களைக் கொண்டு நிறைவுசெய்ய முடியும். மற்றும் பௌதீக வளப் பிரச்சினைக்கு நிதி சேகரிப் புக்களை மேற்கொண்டு அதனைப் பெற்றுக் கொள்ளலாம். இதனால் இடை நிலைப் பாடசாலையில் வினைத்திறன், செயல்படுதிறன் என்பவற்றை சிறப்பான முறையில் செயற்படுத்த முடியும்.

மற்றும் வளங்களைப் பகிர்ந்து கொள்வதில் திட்டமிட்ட முறையில் பகிர்ந்து கொள்வதனால் வளப்பகிர்வினால் ஏற்படும் பிரச்சினையை தீர்த்துக் கொள்ளலாம். கிடைக் கின்ற வளங்களைச் சரியான முறையில் திட்டமிட்டு பாடத்திற்கேற்பவும், வகுப்பிற் கேற்பவும் சரியாகப் பங்கீட்டுக் கொடுக்க அதிபர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதனால் இடைநிலைப் பாடசா லைகளில் பாடசாலை முகாமத்துவத்தில் வினைத்திறன், செயற்படுதிறன் தொடர்பாக எதிர்நோக்கும் வளப்பகிர்வு பிரச்சினைக்கு சரியான தீர்வாக அமையும்.

மற்றும் பாடசாலை முகாமைத்துவத் தினைச் சிறப்பாக செயற்படுத்த இடைநிலைப் பாடசாலைகளின் அதிபர்கள் ஆளனியினர் பிரச்சினையிலிருந்து விடுபடுவதற்கு தொண்டர் ஆசிரியர்களை சரியான முறையில் நியமித்து முகாமைத்துவத்தினைச் சரியாகச் செய்யலாம். அதாவது இணைப்பாளர், தர இணைப்பாளர், வகுப்பு இணைப்பாளர், பாட இணைப்பாளர் என ஆளனியினரை திட்டமிட்டு பிரித்து முகாமைத்துவத்தினை சிறப்பாக நடாத்திச் செல்ல உதவுகிறது.

மற்றும் வினைத்திறன், செயல்படு திறன் என்பவற்றை அளவிடுவதில் கூட இடைநிலைப் பாடசாலை அதிபர்கள் பிரச்சி னைகளை எதிர்நோக்குவதினால் தரப்படுத்தல் பரீட்சைகள் புகழ்ச்சிதரும் செயற்பர்டுகள், அபிவிருத்திச் செயற்பாடுகள், பெற்றோர் தொடர்பு என்பவற்றைக் கொண்டு அளவிடப் படுகின்றது. இவற்றை திட்டமிட்ட முறையில் நுட்ப முறைகளில் அளவுகளைச் செயற்படுத்த முடியும்.

இவ்வாறாக இடைநிலைப் பாடசாலை களின் அதிபர்கள் பாடசாலை முகாமைத் துவத்தில் வினைத்திறன், செயற்படுதிறன் தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகளுக்கு பொருத்தமான தீர்வுகளை முன்வைக்க முடியும். இதனால் சிறந்த முறையில் பாடசா லையினை நடாத்திச் செல்ல முடியும்.



# அமில மழை



செல்வி. தி. விமலேந்தினி
(BA)

புவிக் கோளத்தை வியப்புறுத்தும் செயற்பாடுகளில் அமில மழையும் ஒன்றாகும். 1980 ஆம் ஆண்டின் பின்னர் சூழலை மாசடைய வைத்து மக்களை அச்சுறுத்தும் நிகழ்வுகளிள் ஒன்றாக அமில மழைப் பொழிவும் அமைந்து விட்டது. இது இன்றைய பிரச்சினையும் ஆகிவிட்டது. ஒரு நாட்டின் வளி மாசடையும் போது இன்னும் ஒரு நாடும் பாதிப்படைகின்றது. ஐக்கிய அமெரிக்காவில் மாசடைந்த வளி கனடாவில் அமில மழையாக பொழிந்து மக்களைப் பாதிப்படையச் செய்கின்றது.

கந்தகமும் நைதரசனும் வளிமண்டலத்தில் கூடுதலாக எவ்வாறு சென்றடைகின்றது என்பதை நோக்கினால் உயிர்ச் சுவட்டெரி பொருட்கள் (நிலக்கரி, பெற்றோலியம்) எரிதல், மோட்டார் வாகனப் புகை, புகை வெளியிடுகின்ற தொழிற்சாலைகள் என்பன எளிதாக வளிமண்டலத்தில் அமிலத்தன்மையை சேர்த்து விடுகின்றன. 400 இறாத்தல் நிலக்கரி எரியூட்டும் போது 112 இறாத்தல் $CO_2$ உம் $NO_2$ உம் வளிமண்டலத்தைச் சேர்கின்றன என விஞ்ஞானிகள் கணித்துள்ளனர். இதனை விட வாகனங்கள் நாளாந்தம் வெளிவிடு கின்ற பெற்றோலிய எரிபொருட் புகை வளிமண்டலத்தில் 40 சதவீதமான $NO_2$ யும் சேர்கின்றது.

வளிமண்டலத்தில் கூடுதலாக சேர்கின்ற நைதரசனும் கந்தகமும் அமில மழைக்கு காரணமாகின்றன. கந்தகவீரொட்சைட்டும் $(SO_2)$ நைதரசனும் வளிமண்டத்தில்' சேர்ந்து நீராவியுடனும் ஒட்சைட்டுடனும் கலந்து அமில மழையை உருவாக்கு கின்றன. அத்துடன் புவியின் மேற்பரப்பை நோக்கி மழை, புகார், உறைபனி, மழைப்பனி, பனி கலந்த மழை, படிவு வீழ்ச்சி படிவங்களாகவும் உள்ளன.

அமில மழை தோன்றுவதற்கு நைதரசன் காரணம் எனலாம். உலகின் கைத்தொழில் பிரதேசங்கள் அமில மழை வீழ்ச்சியில் பாதிப்புறுவதற்கு காரணம் விவசாயத்தில் உபயோகிக்கின்ற நைதரசன் உரம் வருடா வருடம் 0.25% வளிமண்டலத்தில் சேர்ந்து வருகின்றன. இதனால் கைத்தொழில் பிரதேசம் அமில மழை வீழ்ச்சியில் பாதிப்புற்று வருகின்றன. ஐரோப்பாவின் மேற்குப் பிரதேசம் அமெரிக்காவின் கிழக்கு பிரதேசம் அமில மழை பொழிவுக்கு உட்பட்ட பிதேசங்களாக உள்ளன. கந்தகத்தையும் நைதரசனையும் கூடுதலாக சேர்க்கின்ற பிரதேசங்களோடு வடகிழக்கு இந்தியா, சீனா, கலிபோனியா, வெனிசுவெலா, ஆஜன்டீனா, கொலம்பியா, தென்னாபிரிக்கா என்னும் பிரதேசங்களும் அடங்குகின்றன.

சாதாரண மழையிலும் அமிலத் தன்மை உள்ளது. மழை நீரில் இருக்கும் அமிலத் தன்மையை $P^H$ அலகு ஒன்றால் அளவிடுவர். அமெரிக்காவின் பேரேரி பிரதேசம், நியூ இங்கிலாந்து பிரதேசம், டென்மார்க் பிரதேசம் மழை நீரில் $P^H$

அளவு 4.0 இலும் குறைவானது. ஆகவே இப் பிரதேசம் அமில மழையினால் அதிகம் பாதிப்புறுகின்றது. இதைவிட மேற்கு ஐரோப்பா, கிழக்கு அமெரிக்கா என்பவற்றில் பெய்யும் மழை நீரின் $P^H$ அளவு 4.5-5.00 இதுவும் மோசமான அளவு பாதிப்புறுகின்றன.

அமில மழையினால் ஏற்படுகின்ற பாதிப்பு என்று நோக்கும் போது ஏரி, குளம், ஆறு ஆகியவற்றில் வாழுகின்ற மீன்கள் கணிசமான அளவு அழிந்துவிடுவதாகத் தெரியவருகிறது. இதனைவிட தாவர வளர்ச்சி குன்றுகிறது. வரலாற்று புகழ்பெற்ற கட்டிடம், சிற்பம், சிலைகள் என்பனவும் பாதிப்படைகின்றது. காரணம் சுண்ணாம்பு கற்கள், சலவை கற்கள் என்பனவற்றை ஊடகங்களாகக் கொண்டவை உரிவுக்குள்ளாகின்றது. இதற்கு எடுத்துக் காட்டாக இந்தியாவில் புகழ் பெற்ற தாஜ்மகாலை குறிப்பிடலாம்.

தேசிய விஞ்ஞான கழகம், வளிமண்டலத்தில் $SO_2$ உம், $NO_2$ இன் சேர்வை குறைக்கும் வரை இந்த பிரச்சினைக்கு தீர்வே இல்லை. எனவே இலங்கையிலும் அமில மழை தாக்கம் ஏற்பட வாய்ப்புண்டு என்றே கூறலாம். காரணம் தென்மேல் பிரதேசங்களில் தொழிற்சாலைகள் அதிகரித்து விட்டன. அத்துடன் வாகனங்களும் வளிமண்டலத்தில் $SO_2$ உம் $NO_2$ சேர்த்து வருகின்றன. இலங்கையில் அதிகளவு வாகனம் அதிகரிக்கின்றமையும் பழைய புகைவிடும் வாகனங்களின் தொகை ஒருபுறம் அதிகரித்த வண்ணமும் உள்ளதால் இத்தாக்கத்திலிருந்து ஒரளவு விடுபடுவது என்றாலும் மேலுள்ள காரணத்தை கருத்திற்கொள்வது நல்லது.

# கல்வி

கற்றவரிடம் கேட்டேன்
கல்வி இனிமை என்றார்

கல்லாதவரிடம் கேட்டேன் கல்வி
கஸ்டம் என்றார்

என் நண்பனிடம் கேட்டேன்
நல்லறிவு என்றான்

ஆனால் நான் கூறுகின்றேன்
அது அழியாத செல்வமென்று

ஜெ.நிசாந்தினி (தரம் - 7A)

# தெரிந்துகொள்வோம்

## பதினாறு பேறுகளை அறிவோமா?

| | |
|---|---|
| 01. புகழ் | 09. நுகர்ச்சி |
| 02. கல்வி | 10. அறிவு |
| 03. வலி | 11. அழகு |
| 04 வெற்றி | 12. பொறுமை |
| 05. நன்மக்கள் | 13. இளமை |
| 06. பொண் | 14. துணிவு |
| 07. நெல் | 15. நோயின்மை |
| 08. நல்லூழ் | 16. வாழ்நாள் |

## இதனை அறிந்தீர்களா?

1. ஓரறிவு - புல், மரம்
2. ஈரறிவு - சங்கு, சிப்பி
3. மூன்றறிவு - கறையான், எறும்பு
4. நான்கறிவு - தும்பி, வண்டு
5. ஐந்தறிவு - மிருகங்கள்
6. ஆறறிவு - மனிதன்

ந.சுதேந்திரன்
தரம் - 11



2002 இல் நூலகத் திறப்பு விழாவின் போது வருகை தந்த கல்விப் பணிப்பாளர்களும், அதிபர், பிரதி அதிபருடன் ஆசிரியர்களும்.




அதிபர், பிரதி அதிபருடன் சாரண மாணவர்கள்

# வாசிப்புப் பழக்கமும் அதன் உயர்வும்



திரு.சு.ஜெகநாதன் BA



"கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு" என்பார்கள். ஒருவன் ஏதேனும் ஒரு துறையில் கற்க முயற்சிக்கும் போது அவன் கற்றலுக்கு எல்லையே இருக்காது. ஒவ்வொருவருடைய கல்வி வளர்ச்சிக்கும் கைகொடுத்து உதவுவது வாசிப்புப் பழக்கமாகும். வாசிப்பு எனும் போது வெறுமனே பாடசாலை புத்தக வாசிப்பு மட்டுமல்ல. பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு தற்பொழுதுள்ள பாடத்திட்டத்திற்கு அமைய நிறைய தேடல்கள் இருக்கின்றது. இவர்களுக்கு பாடசாலையிலே அனைத்தும் கற்றுக் கொடுக்கப்படவும் மாட்டாது. அதனால் இவர்கள் வெளியிலேயே தேடிக்கற்க வேண்டும். பல பாடசாலைகளில் நூலகத்தில் சிறந்த புத்தகங்கள் காணப்படுகின்றன. பொது அறிவு சார்ந்த புத்தகங்கள், கவிதை நூல்கள், கதைப்புத்தகங்கள், இலக்கியநூல்கள் போன்ற புத்தகங்களுடன் அன்றாட பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் காணப்படுகின்றன. இந்தப் பாடசாலையில் கற்கும் மாணவர்களுக்கு இப் புத்தகங்களை பெற்றுக்கொள்ள அல்லது வாசிப்பதற்கு பாடசாலை நேரசூசியில் ஒரு பாடம் ஒதுக்கப்பட்டிருக்கும் இது இம் மாணவர்களுக்கு கிடைக்கும் ஒரு பாக்கியமாகும். அது மட்டுமல்ல இம் மாணவர்கள் அதிர்ஷ்டசாலிகள் என்றும் கூறவேண்டும். ஏனெனில் பல பின்தங்கிய பாடசாலைகளில் நூலகம் ஒன்று இருப்பது ஆச்சரியமான விடயமே. இம்மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் எந்த விதமான உதவியும் செய்ய முடியாத நிலையில் இந்த பின்தங்கிய பாடசாலைகள் இருக்கின்றது.

வேறு சில பாடசாலைகளில் நூலகம் இருந்தும் அதனை பராமரிப்பார் யாரும் இன்றி புத்தகங்கள் தூசு பிடித்து நூலகமும் மாணவர்களுக்கு பிரயோசனமளிக்க முடியாத நிலையில் மூடப்பட்டிருக்கின்றன. சில பெற்றோர்கள் நினைக்கிறார்கள் மாணவர்கள் நூலகத்தில் இருந்து எடுத்துவரும் அல்லது நண்பரிடம் இருந்து எடுத்துவரும் புத்தகங்கள் கல்விசார் புத்தகங்களாக மாத்திரமே எடுத்துவரவேண்டுமென நினைக்கிறார்கள். அப்படி அல்ல மாணவர்கள் தற்பொழுதுள்ள

பாடத்திட்டத்திற்கமைய கதைப் புத்தகங்களையும், கவிதைப் புத்தகங்களையும் நிறைய வாசிக்க வேண்டும். அப்படி வாசிக்கும் கதைப் புத்தகம் சிறந்ததா? மாணவர்கள் வாசிக்கக்கூடிய புத்தகங்கள் சிறந்ததா? என்பதை ஒரு முறை நோட்டமிட வேண்டும்.

வீட்டில் பெரியவர்கள் பத்திரிகை வாசிப்பார்கள். அப்பொழுது பிள்ளைகளுக்கு வாசிக்க பொருத்தமான பகுதியை அவர்களுக்கு வாசிக்க கொடுக்க வேண்டும். இன்று பல வீடுகளில் பத்திரிகைகளைக் காண்பது அரிது. காரணம் அமர்ந்திருந்து வாசிக்க நேரம் இல்லை என்பதாலும் வானொலி தொலைக்காட்சிகளில் உடனுக்குடன் செய்திகள் கிடைப்பதாலும் பத்திரிகை வாசிப்பதை ஓரம் தள்ளிவிட்டார்கள். இந்த வாசிப்புப் பழக்கமானது மனித அறிவை மேலும் மேலும் பெருக்கிக் கொள்ள உதவுகின்றது என்றே கூறலாம். 'வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்' என்ற கூற்று வாசிப்பின் மகத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது.

மேலும் வாசிப்பதால் எழுத்துப்பிழை இன்றி எழுதவும் சரியான சொற்களைப் பிரயோகிக்கவும் அழகான முறையில் வசனம் அமைக்கவும் பெரிதும் துணை புரிகிறது. மேலும் தமிழ் மொழிகளில் மட்டுமல்ல, பிற மொழிகளிலும் அவர்களுக்கு தேர்ச்சி வேண்டும். ஆகையால் பிற மொழிகளையும் பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுத்து அம் மொழிகளில் புத்தகங்கள், சஞ்சிகைகள் பத்திரிகைகள் வாங்கிக்கொடுத்து வாசிப்புப் பழக்கத்தைத் தூண்ட வேண்டும். பாடசாலைகள் மட்டுமன்றி தனியார் நூலகங்களும் பல தரங்களில் காணப்படுகின்றன. நேரம் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் பிள்ளைகளை கூட்டிச் சென்று புத்தகங்களை வாசிக்க வழிகாட்டலாம்.

பெரியவர்களாக இருந்தால் வாரம் ஒரு நாள் சில மணித்தியாலங்கள் இந்த தனியார் வாசிகசாலைக்கு சென்று வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம். இன்று தொலைக் காட்சியிலும், வானொலியிலும் சினிமாப்பாடல், நாடகம் என நேரத்தைக்கழிக்கும் சமுதாயம் பிரயோசனம் தரக்கூடிய விடயங்களை வாசித்து அதனை ஏனையோருக்கு கூறினால் தன் அறிவை வளர்ப்பதோடு மற்றவர்களுக்கும் ஏதோ ஒரு விதத்தில் உதவுவதாக இருக்கும். அதாவது "அலட்டி அரட்டை அடிப்பதை விட புரட்டிப் புத்தகம் படிப்பதே மேல்" என்னும் வாசகத்திற்கிணங்க பிரயோசனமற்ற வழியில் காலத்தைக் கழிப்பதை விட பிரயோசனம் தரக்கூடிய வழியில் தனது நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் வாழ்வில் உயர்நிலை அடைய முடியும் என்பதும் 'கண்டது கற்க பண்டிதனாவான்' என்பதற்கு இணங்கவும் வாசிப்பு பழக்கத்தின் மூலம் மேன் நிலையை அடைய முடியும் என்பதும் உண்மையாகும்.

ஆயுளின் பெருமை
ஆண்டுகளில் இல்லை;
வாழும் முறையில் தான்
உள்ளது.

- திருமூலர் -

# சிவனின் 64 திருவிளையாடல்கள்



*பரஞ்சோதி முனிவரின் புராணத்தில் கூறியபடி*
*64 திருவிளையாடல்களும் பின்வருமாறு*
*அமைந்து காணப்படும்.*

1 இந்திரன் பழிதீர்த்த திருவிளையாடல்
2 வெள்ளை யானைக்கு சாபந் தீர்த்த திருவிளையாடல்
3 தடாதகையார் அவதரித்த திருவிளையாடல்
4 மணஞ்செய்த திருவிளையாடல்
5 பதஞ்சலிக்கு நடனஞ் செய்த திருவிளையாடல்
6 விடமுண்ட திருவிளையாடல்
7 ஆறழைந்த திருவிளையாடல்
8 கடலழைந்த திருவிளையாடல்
9 மலையத்துவசனை அழைத்த திருவிளையாடல்
10 உக்கிரன் பிறந்த திருவிளையாடல்
11 வளை வேல் சென்டு கொடுத்த திருவிளையாடல்
12 நான்மாடக் கூடலான திருவிளையாடல்
13 சித்தரான திருவிளையாடல்
14 கல்லானை கரும்பு வாங்கிய திருவிளையாடல்
15 சங்கப்பலகை கொடுத்த திருவிளையாடல்
16 கிழியறுத்த திருவிளையாடல்
17 நக்கீரனை கரையேற்றிய திருவிளையாடல்
18 குறுமுனிக்கு தமிழுரைத்த திருவிளையாடல்
19 ஊமை தமிழறிந்த திருவிளையாடல்
20 இடைக்காடன் பின்போன திருவிளையாடல்
21 கடல் சுவற மேலெறிந்த திருவிளையாடல்
22 வலை வீசிய திருவிளையாடல்
23 வளையல் விற்ற திருவிளையாடல்
24 இலட்சினையிட்ட திருவிளையாடல்
25 மாணிக்கம் விற்ற திருவிளையாடல்
26 ஆனை எய்த திருவிளையாடல்
27 ஞானோபதேசம் செய்த திருவிளையாடல்
28 நரி குதிரையான திருவிளையாடல்
29 குதிரை நரியான திருவிளையாடல்
30 மண்சுமந்த திருவிளையாடல்
31 விருத்த குமார பாலரான திருவிளையாடல்
32 மாறியாடின திருவிளையாடல்
33 பழியஞ்சின திருவிளையாடல்
34 மகாபாதகந் தீர்த்த திருவிளையாடல்
35 அங்கம் வெட்டின திருவிளையாடல்
36 மதுரையான திருவிளையாடல்
37 வெப்புத்தீர்த்த திருவிளையாடல்
38 கழுவேறின திருவிளையாடல்
39 மெய்க் காட்டிட்ட திருவிளையாடல்
40 உலவாக்கிழி கொடுத்த திருவிளையாடல்
41 மாமனாக வந்து வழக்குரைத்த திருவிளையாடல்
42 அட்டமா சித்தி பகர்ந்த திருவிளையாடல்
43 தண்ணீர்ப் பந்தர் வைத்த திருவிளையாடல்
44 இந்திரன் முடிமேல் வளை எறிந்த திருவிளையாடல்
45 பொன்னனையாளுக்கு அருள் புரிந்த திருவிளையாடல்
46 சோழனை கொண்டாழியிற்றாழ்த்த திருவிளையாடல்
47 திருவாள வாயான திருவிளையாடல்
48 வரகுணனுக்குச் சிவலோகம் காட்டிய திருவிளையாடல்
49 விடைக்குறி யம்பெய்த திருவிளையாடல்
50 உலவாக்கோட்டை வைத்த திருவிளையாடல்
51 மூர்த்தியாருக்கு அரசளித்த திருவிளையாடல்
52 காரியார் நாரியார் பாப்பகுந்த திருவிளையாடல்
53 புலி முலை புல்வாய்க்கருளிய திருவிளையாடல்
54 சாதாரி பாடின திருவிளையாடல்
55 திருமுகம் கொடுத்த திருவிளையாடல்
56 பலகையிட்ட திருவிளையாடல்
57 இசைவாது வென்ற திருவிளையாடல்
58 பன்றிக்குட்டிகளுக்கு தாயான திருவிளையாடல்
59 பன்றிக்குட்டிகளுக்கு அருள் புரிந்த திருவிளையாடல்
60 கரிக்குருவிக்கு அருள் புரிந்த திருவிளையாடல்
61 மாமேருவிற் கயல் கொண்டு பொறித்த திருவிளையாடல்
62 சான்றழைத்த திருவிளையாடல்
63 நாரைக்கு அருள் புரிந்த திருவிளையாடல்
64 வேதம் உணர்த்திய திருவிளையாடல்

**க.ராகினி** (தரம் - 11)



விளையாட்டு மைதானக் காணி கொள்வனவு செய்தலின் போது....



மாடிக்கட்டிட கல் நாட்டு விழாவின் போது அதிபர் மங்கள விளக்கேற்றுகிறார்.
அருகில் நோர்வேக்கான வதிவிடப் பிரதிநிதி,
மட்/பா.ம.உ.கௌரவ திரு.எஸ்.ஜெயானந்தமூர்த்தி,
பிரதி வலயக் கல்விப் பணிப்பாளர் க.சத்தியநாதன் ஆகியோர் காணப்படுகின்றனர்.

# பங்குபற்றல் முகாமைத்துவம்



திருமதி.த.கமலேஸ்வரன்
BA, PGDE

கல்வி நிருவாகத்துடன் இணைந்த ஒரு விடயமாக பங்குபற்றல் முகாமைத்துவம் காணப்படுகிறது. நிருவாகம் கூட்டுப் பொறுப்புடைய செயற்தொடர்ச்சியாக காணப்படும். ஜனநாயக சிந்தனைக்கு ஏற்ப முகாமைத்துவமும் கூட்டுப் பொறுப்பும் ஒத்துழைப்புடைய செயற்பாடாகக் கருதப்படுகிறது. முகாமைத்துவம் அதிகாரத்தையும், சட்டத்தையும் பயன்படுத்தி வெற்றிகரமாக கையாளக்கூடியதன்று. மனிதப் பண்பு குறித்து அக்கரை கொள்வதினால் முகாமைத்துவத்தையும் பரஸ்பர ஒத்துழைப்புடன் கூடிய செயலாக நடைமுறைப்படுத்தலாம். பணியாளர்களை ஆர்வத்துடனும், செயலூாக்கத்துடனும் பங்குபற்றச் செய்யும் செயல் தொடர்ச்சியாக நிறைவேற்றிக் கொள்ள இயலுமாகும். பணியாளர்களள ஆர்வத்துடனும் செயலூாக்கத்துடனும் பங்குபற்றச் செய்யவும் அவர்களை ஊக்குவிக்கவும் பங்கு கொள்ளும் இயல்புகள் பயன்படும். பலர் ஒன்றுகூடி நிருவாக விடயங்களை நிறைவேற்றும் எண்ணத்துடன் எதிர்பார்கப்படும் பங்குகொள்ளும் இயல்பு பல்வேறு வகையில் கட்டியெழுப்பப்படும் அதாவது,

(i) முறைசார் அல்லது முறைசாரக் கலந்து கொள்ளல்

(ii) நேரடியான அல்லது மறைமுகமாக கலந்து கொள்ளல்

ஏதாவது ஒரு நிருவாக நிறுவனத்தில் அல்லது ஒரு தொகுதியில் முகாமைத்துவத்தில் சகலரும் பங்கு கொள்வது இதன் அடிப்படை நோக்கமாகும். இவ்வாறான பங்கு கொள்ளலுக்கு நிறுவனச் சூழல் இருக்க வேண்டிய இயல்புகள் பண்புகளாக சிலவற்றைக் குறிப்பிடலாம். அவை யாவன,

1. ஜனநாயக சூழ்நிலை
2. ஒழுங்கமைப்பில் காணப்படும் நெகிழ்ச்சி
3. தலைமைத்துவத்தின் செயற்திறனும் பங்கு கொள்ளுதலில் அனுகூலம் காட்டுவதும்
4. நிறுவனத்தின் இலட்சியங்கள் பற்றிய சகலருக்கும் போதிய விளக்கம் இருத்தல்
5. சிறப்பான தொடர்பு
6. நிறுவனத்தில் இலட்சியங்கள் போன்ற தனிப்பட்ட இலட்சியங்களையும் விளங்கிக் கொள்ளல்
7. பங்குகொள்ளுதல் தொடர்பான இந்நிலையை வரவேற்றலும் அதில் நம்பிக்கை கொள்ளலும்
8. ஒத்துழைப்பும் பணிகளில் ஈடுபடுவதற்குத் தேவைப்படும் குறைந்தபட்ச தேர்ந்த அறிவும் உளவியல் கட்டுப்பாடும்.



9. பணிப்பாளர்களின் தேவைகள், அபிப்பிராயங்கள் மீது கருத்தைச் செலுத்த ஆயத்தமாயிருத்தல்.

10. நிறைவேற்று அதிகாரமுடைய நிருவாகிகளின் அதிகாரம் குறைந்து விடாதிருத்தல்

பங்குபற்றல் முகாமைத்துவம் ஒன்றை உருவாக்க வேண்டுமாயின் தாமே எல்லாவற்றையும் ஒழுங்கமைத்துக் கொள்கின்றோம் என்ற உணர்வை முதலில் ஏற்படுத்த வேண்டும். நிறுவனத்தின் நோக்கம், தனியாளின் நோக்கம் என்ற இரண்டிற்கும் இடையே காணப்படும் முரண்பாடுகள் குறையுமளவிற்கு பங்குபற்றும் முகாமைத்துவ முறை சாத்தியமாகும் அதேபோல் பங்குபற்றும் தனியாற்களுக்கிடையேயும் மோதல்கள் ஏற்படக்கூடும். முழு ஒழுங்கமைப்பாலும் ஒவ்வொருவருக்கும் பரஸ்பர நம்பிக்கையுடன் செயல்படுவதுடன் செயற்பாடுகளில் ஈடுபாடு காணப்பட வேண்டும். முடிவுகளை எடுக்கும் போதும் எல்லோரும் பங்கெடுத்தல் வேண்டும். பொறுப்புக்களையும் அதிகாரங்களையும் பகிர்ந்து கொள்ளதல் சிறந்த தொடர்புகளை ஒருவருக்கொருவர் ஏற்படுத்திக்கொள்ளல் என்பனவாகும். இங்கு இவை மிக முக்கிய பண்புகளாக கருதப்படுகின்றன. எனவே பாடசாலைகளில் அதிபருக்கு பங்குபற்றல் முகாமைத்துவத்தின் மூலம் வேலைகளை இலகுபடுத்த முடியும்.

இன்பத்தை இரட்டித்து

துன்பத்தை

பாதியாக்க

முயல்வதே

நட்பு



**-பேக்கன்-**

# Proverbs

## பழமொழிகள்

1. ***The face is the index of the mind.***
   அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
2. ***Make hay while the sun shines.***
   காற்றுள்ள போதே தூற்றிக் கொள்
3. ***Too much of anything is good for nothing.***
   அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு
4. ***Look before you leap.***
   ஆழமறியாமல் காலை விடாதே.
5. ***Distance lends enchantment to the view.***
   இக்கரைக்கு அக்கரை பச்சை
6. ***East or west, home is best.***
   எலி வளையானாலும் தனிவளை வேண்டும்
7. ***Casting pearls before swine.***
   கழுதை அறியுமா கற்பூர வாசனை?
8. ***Health is wealth.***
   நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
9. ***Covet all, lose all***
   பேராசை பெரு நஷ்டம்
10. ***All that glitters is not gold.***
    மின்னுவதெல்லாம் பொன்னல்ல
11. ***No pain, no gain.***
    கஷ்டம் இல்லாமல் வெற்றி இல்லை
12. ***Everyone is pushing a falling fence.***
    விழுந்த வேலியைத் தான் எல்லோரும் தள்ளுவார்கள்
13. ***Practice makes perfect.***
    பயிற்சி வெற்றியை தரும்
14. ***Union is strength.***
    ஒற்றுமையே பலம்
15. ***Prevention is better than cure.***
    வெள்ளம் வருமுன் அணை கட்டு

**க.புகழேந்தினி** - தரம் -10





திரு.டே.விஜயகுமார்
BA

# நாட்டின் இலஞ்ச ஊழலின் தாக்கமும் அபிவிருத்தியும்

அதர்மத்தின் வாயிலில் செங்கோலை வைத்த வண்ணம் நீதியை ஏட்டளவில் வைத்து ஆட்சி நடத்தும் இவ்வுலகில் இலஞ்ச ஊழலுக்கு வாயில் கதவுகள் திறந்த வண்ணமே உள்ளது. இன்று நாட்டில் இலஞ்ச ஊழல் அழிக்க முடியாத வைரஸ் கிருமி போல் பரவி வியாபித்துள்ளது. இது அடிமட்டத்திலிருந்து உயர்மட்டம் வரைக் கும் அதாவது சமூகத் துறைகள், கல்வித்துறை, சுகா தாரம், பொருளாதாரம், அரசியல் துறைகள் போன்ற பல்வேறு துறைகளில் தடம்பதித்துள்ளது. இந்நிலையினால் இன்றைய சமுதாயம் தூய அறிவிழந்து, சிறந்த ஆய்வாராட்சியின்றி, பரிணாம வளர்ச்சியின்றி, முதுகெலும்பில்லாத பகடைக் காய்ச் சமுதாயமாக மாறிக்கொண்டுள்ளது. இந் நிலைகளுக்குக் காரணம் நாட்டின் தலைமைத் துவம் என்பது வெள்ளிடைமலை.

கல்வித்துறையை நோக்கும் போது ஆரம்பம் முதல் உயர்நிலை வரை பணத்திற்காகக் கல்வியை விலைபோகும் நிலையை உணரக் கூடியதாகவுள்ளது. இதனால் பணமில்லாத நடுத் தரக் குடும்பத்திலுள்ள திறமைசாலிகளின் ஆளு மைகள் மழுங்கடிக்கப்படுகின்றன. அதுமட்டு மன்றி உளவியல் ரீதியான தாக்கத்திற்குமுள் ளாகி தனது எதிர்காலத்தைக் கேள்விக்குறி யாக்குகின்றார்கள். இதனால் திறமைசாலிகளின் சமுதாயம் குறைந்துகொண்டு எதிர்காலத் தில் வெளிநாட்டின் அறிவிலே தங்கியிருக்க வேண் டிய கட்டாயத் தேவைகள் ஏற்படும். இந்நிலை மாறுமாயின், ஒரு சிறந்த சமுதாயத்தை உரு வாக்கி, நாட்டின் நல்லாட்சிக்கு வழிவகுத்து கல்வியின் உச்சப் பயனைப் பெற்று நாட்டின் அபிவிருத்திக்கு வழிசமைக்கும் என்பதில் ஐய மில்லை.

அரசியல் நிலையில் கண்ணுறும் போது ஊழல் தலை விரித்தாடும் கோலத்தை அவதா னிக்கக் கூடியதாகவுள்ளது. சமுதாயத்தின் வளர்ச்சிக்காக ஒதுக்கப்படும் நிதி, பல்வேறு வழிகளில் பங்கிடப்படுகின்றது. அதற்கு நியாய மான நீதிக்குப் புறம்பான காரணங்கள் காட்டப் படுகின்றன. இந்த நிலைமை மாறுமாயின் ஒரு சுபீட்சமான சமுதாயத்தைக் கட்டியெழுப்பலாம். சுய தேவை வளங்கள் பூர்த்தியாக்கப்பட்டு, சமூ கத்தின் பல்வேறுமட்ட வளங்கள் வளர்ச்சி கண்டு, எதிர்கால நம்பிக்கை உரமூட்டப்படும். இதனால் சமூகங்களிடையே பரஸ்பர உறவு, போட்டி- பொறாமையற்ற சமூகம் தோற்றம் பெறும். தன் வளத்தைக் கொண்டு தன்நிறைவு காணும் சுயமுயற்சி, சுயதேவைப் பூர்த்தி போன்றவற்றை உள்வாங்கி தன்னிறைவு அபிவிருத்திப் பயண மாகவே வளர்ச்சி கண்டு நாட்டின் அபிவிருத்தியை மேல் நிலைக்குக் கொண்டு வரலாம்.

இன்றைய காலகட்டத்தில் ஒரு தனி மனி தன் தனது சுய தேவையைக்கூட தன்நிறைவு கண்டுகொள்ள முடியாமைக்கான இலஞ்ச ஊழலே முதற் காரணமெனக் கூறலாம். குறிப் பிட்ட வர்க்கத்தினரின் சுயநலத்தினால் அளவுக் கதிகமாக சேமித்து வைக்கும் கறுப்புப் பணமும்

நாட்டின் நல்லாட்சிக்குப் பங்கத்தை ஏற்படுத்து கின்றது. எனவே இந்நிலைமை மாறுவதோடு ஒவ்வொரு மனிதனும் தனது ஊதியத்திற்கேற்ப உழைப்பினைப் பெறுவானாயின், சிறந்ததொரு ஆட்சியினை அமைக்க முடியும். இதனால் அடிநிலை மட்டத்திலுள்ள சமூகமும் தன் நிறைவுகண்டு வாழ்வதோடு களவு, கொலை, கொள்ளை போன்றவையற்ற சமுதாயமாக மாற்ற மடையும்.

குறிப்பிட்ட உயர் அரச வர்க்கத்தினர் தனது சுய தேவைக்காக அளவுக்கதிகமான வளங் களைப் பயன்படுத்துவது நாட்டின் அபிவிருத் தியில் தூரநோக்க சிந்தனை அற்றுக் காணப்படு வதோடு, சுயநலனுக்காக அபிவிருத்திப் பணி யில் ஈடுபடும் போது நிச்சயமாக ஊழல் மோசடிகள் இடம்பெறுவது தவிர்க்க முடியாத ஒன்று. எனவே சுயதேவைப் பூர்த்தியினைக் குறைத்து குறிப்பிட்ட சமூக வளர்ச்சி நோக் காகக் கொள்ளாமல் பொதுவான சமூக வளர்ச் சிப் பார்வையில் உறுதியான தூரநோக்கு அபி விருத்தியை மேற்கொள்ள வேண்டும். இவ் அபி விருத்தி மனித வளமாகவோ, நகர் வளர்ச்சி யாகவோ யாதாக இருந்தாலும், பொதுநெறியில் செயற்படுவதன் மூலம் ஊழல் மோசடியை இல் லாது ஒழிக்கலாம். இதனால் இலஞ்சம் தவிர்க் கப்படும் நாடு வளம்பெறும்.

தனிப்பட்ட உயர் அதிகாரிக்குக் கொடுக் கப்படும் ஏகபோக உரிமையும் அதிகாரப் பரவ லாக்கலும் அவர்கள் வழி நடாத்தப்படுகின்ற முறையும் ஊழல் மோசடிக்கு வழிகோலுகின் றது. அந்த வகையில் அதிகாரத்தைத் துஸ்பிர யோகம் செய்து ஊழல் மோசடியில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட அமைச்சர்களை குறிப்பி டலாம். இச்செயற்பாடு நாட்டின் உற் பத்தியின் விலை உயர்ச்சிக்குக் காரணமாயின. விவசாய நாடாக இருந்தும், இன்னும் மேல் நாட்டில் கையேந்தும் நிலையில் தன்நிறைவு காணாமல் இருப்பதும், தலைமுறை தலை முறையாக மேற்கொள்ளப்பட்டுவரும் இலஞ்ச ஊழல் மோசடியும் முக்கிய காரணமெனலாம். எனவே இந்நிலையினை மாற்றுவதற்குத் தகுந்த தண்டனை வழங்கப்படும் போதுதான் நாட்டின் அபிவிருத்தியில் தன்நிறைவு கண்டு ஒளிமய மான நாடாக மாறும்.

நாட்டின் பல்வேறு அசாதாரண சூழ்நிலை யினால் பண வீக்கத்தில் ஏற்படும் மாற்றமும் இலஞ்ச ஊழலின் கீழ்மட்டம் தொடக்கம் மேல் மட்டம் வரை உள்வாங்கப்படுவது கண்கூடு. ஏனெனில் தனது தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கில் செயற்படும் போது தவிர்க்கமுடியாத ஒன்றாகின்றது. அதுமாத்திரமல்லாமல், குறைந்த தரத்தில் கூடிய ஊதியத்தைப் பெறுகின்ற போது அந்நிலை குறைவடையும் போது தன் தரத்தில் குறையை நிறைவு செய்வதற்காக இலஞ்ச ஊழ லில் ஈடுபடுகின்றனர். இது நாட்டின் அபிவிருத் தியிலே தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. எனவே இவ்வாறான சூழ்நிலை ஏற்படாமல் சிறந்த திட்ட மிடலை மேற்கொள்வதன் மூலம் நாட்டின் அபி விருத்தியில் பங்கம் ஏற்படாது பாதுகாக்கலாம்.

மேற்கூறிய பல்வேறு காரணங்களினால் ஊழல் மோசடி தவிர்க்கமுடியாத ஒன்றாகி விட்டது. சிறந்த திட்டமிடலை மேற்கொள்வதன் மூலம் இலஞ்ச ஊழல் மோசடியினைக் குறைத்து சிறந்த சுபீட்சமான அபிவிருத்தியை மேற் கொள்ளலாம். இருந்தாலும் நாட்டில் உள்ள ஒவ்வொரு பிரஜையும் நாட்டின் அபிவி ருத்தியில் தூரநோக்குச் சிந்தனை இருப்ப தோடு தன் பங்கு அபிவிருத்தியில் என்ன என் பதை உணர்ந்து சுய உணர்வோடு செயற்படும் போதுதான் ஊழலின் வலிமையினைக் குறைத்து நாட்டின் அபிவிருத்தியினை திறம்பட வழி நடாத்திச் செல்லலாம் இல்லையாயின் "திட்டம் போட்டு திருடிற கூட்டம் திருடிக் கொண்டே இருக்கும் - அதை சட்டம் போட்டுத் தடுக்கிற கூட்டம் தடுத்துக் கொண்டேயிருக்கும்" என்பது யதார்த்தம். ■

# உலகமயமாதல் செயல்முறைகளும் சவால்களும்



திரு.இ.கனகராஜா BA



இன்றைய உலகில் எல்லோறாலும் பேசப்படும் ஒரு விடயம் உலகமயமாக்கல் பற்றியே ஆகும் உலகமயமாக்கல் என்றால் என்ன என்றும், அது பழைய சர்வதேச பொருளாதார உறவு முறைகளிலிருந்து அது எவ்வாறு மாறுபடுகின்றது என்பதைக் கருத்தில் கொண்டு 1995ம் ஆண்டு "வொட்டர்ஸ்" என்பவர் சிறந்ததொறு வரைவிலக்கணம் முன்வைத்தார்.

"உலகமாயமாக்கல் என்பது சமூகம் மற்றும் கலாசார ஏற்பாடுகள் மீதான புவியியல் ரீதியான இடையூறுகள் பின் தள்ளப்படும் ஒரு சமூக செயல் முறையாகும்". இச்செயன்முறையின் போது அத்தகைய செயன்முறைகள் பின்தள்ளப்பட்டு வருகின்றன என்பதனை மக்கள் அதிகளவில் உணர்ந்து கருதுகின்றனர். "சமூக உறவுகள் மற்றும் கொடுக்கல்-வாங்கல் என்பவற்றின் இடம் சார்ந்த அமைப்பில் ஒரு நிலைமாற்றத்தை எடுத்துவரும் ஒரு செயன்முறையாக உலகமயமாக்கலுக்கு வரைவிலக்கணம் வகுக்கமுடியும்" எனக் கூறியுள்ளார்.

இத்தகைய உலகமயமாக்கலின் செயன் முறையும் சவால்களையும் உள்நோக்கி அறிவது சிறப்பானதாகும்.

இன்று காணப்படுகின்ற நாடுகளின் எல்லை என்ற கட்டுப்பாட்டுக்கோட்டை நிராகரித்து விடுவதன் மூலம் எல்லா நாடுகளும் உலக ரீதியாக சிந்திப்பதையும் அதற்காக உள்ளூர் மட்டத்தில் செயலாற்றுவதனையும் இது குறிக்கின்றது. உலகம் முழுவதையும் தன் பொருளாதார செயலாற்றல்களுக்கான சந்தையாகப் பயன்படுத்த முடியும் என்பதனை இது வலியுறுத்துகின்றது. உலக நாடுகள் எல்லாம் எல்லா நாடுகளுக்குமான பொதுவான சந்தையாக எல்லா நாடுகளையும் கருத வேண்டுமென இது விபரிக்கின்றது. பொருட்கள், சேவைகள் உற்பத்திக் காரணிகள், நாணயம் மற்றும் நிதி போன்ற எல்லாச் சந்தைகளும் தடையற்ற வகையில் திறந்துவிடப்படுகின்றன. கட்டுப்பாடுகள் எதுவுமற்ற வியாபார நடைமுறைகளை ஊக்குவிப்பதன் மூலம் நாடுகளின் இடையிலான போட்டி முறையை மிகவும் உயர்ந்த நிலைக்கு இது இட்டுசெல்கின்றது. இவை எல்லாவற்றையும் விட மனித மூளைப் பயன்கள் தகவல் தொழில்நுட்ப விரிவாக்கத்தால் எவ்வித கட்டுப்பாடுமின்றி எல்லைகடந்து பரவுகின்றது. மனித வளம் என்பது உலக நாடுகளிடையே கட்டுப்பாடின்றி இடம் பெறுகின்றது.

உலக மாயமாக்கல் என்ற விடயமானது நாடுகளிடையே பிராந்திய பொருளாதாரக் கட்டமைப்புக்களை ஏற்படுத்தியுள்ளதனையும் உணரமுடிகின்றது. அந்தவகையில் ஐரோப்பிய சங்கம் (EU) வட அமெரிக்காவில் நவ்றா (NAFTA) ஆசியாவில் சார்க் (SAARC) மற்றும் ஆசியான் பசுவிக் வலயத்தின் ஒபெக் போன்ற

பல்வேறு நாடுகளின் கூட்டமைப்புக்கள் ஒன்றி ணைந்த வகையில் உருவாக்கி வலிமை பெற்று நிற்கின்றன. உலகமயமாக்கல் எல்லைக் கோடு களை அகலமாக்கி பிராந்திய வலிமையினை யும் உறுதிப்பாட்டினையும் கொண்டு சாதாரண பலத்துடன் அன்றி கூட்டுப்பலத்துடன் தன் சவால்களை நிறைவேற்ற இந்த உலகமயமாக்கல் வழிவகுத்துத் தந்துள்ளது.

மற்றும் ஈரோ (EURO) நாணயத்தின் செலாவணி புத்தொழுக்கங்களும் உலகமய மாக்கலை சிக்கலான கூர்மைமிக்க போட்டியை நோக்கி இழுத்துச் செல்வதை அவதானிக்க முடிவதுடன் இந்த பொருளாதார ஒத்துழைப்புக் கள் தம்மை விரிவுபடுத்தவும் வேறு சில இதை ஒத்த கூட்டுக்களுடன் இசைந்து போகவும் முயல்வது உலக பொருளாதாரத்தில் புதிய காட் சிகளை உருவாக்கி வருகின்றது. இன்று பொரு ளாதார ஒத்துழைப்பு அமைப்புக்கள் உலக பௌதீக வளங்கள் மீது மேலாதிக்கம் செலுத்து வதற்காக தமக்கிடையே கடுமையான போட்டி போடுகின்றன. இப்போட்டியில் பிராந்திய ஒத்து ழைப்புக்களுக்குள் இயங்கும் பெரிய நாடுகள் தமது நலனை மேம்படுத்துவதில் சாதகமான நிலையினை ஏற்படுத்தி வருகின்றன. உண்மையை உலகமயமாதல் பொருளாதாரப் போட்டியை ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்துக்கு நகர்த்தி இருப்பதாகவே குறிப்பிட வேண்டும். இதனைத் தொகுத்து நோக்கும் போது உலகமயமாக்கலின் தற்போதைய இயல்பை கவனத்தில் எடுக்கும் போது உலகப் பொருளாதாரம் ஐக்கிய அமெரிக் காவைச் சூழ தன்னை ஸ்தாபித்துக் கொள்ளும் ஒரு செயல்முறையாக இது இருந்து வருகின் றது என்ற சரியான முடிவுக்கு வர முடியும்.

அடுத்து, உலகமயமாக்கலின் நன்மை - தீமைகளை நோக்குவோமானால், உலக வர்த் தக நிறுவனம் 'நவ்றா' போன்ற அமைப்புக்கள் உலக ரீதியில் எல்லா நாடுகளுக்கும் இதன் மூலம் கூடிய நன்மைகளைத் தரும் என்றும் உலகமய மாதலுக்கு எல்லா நாடுகளையும் இட்டுச்செல் வதற்குத் தூண்டும் என்றும் கூறியிருந்தது. அந்த வகையில் நாடுகளுக்கிடையே அதிக ரித்து வந்த நெருக்கடிகளைக் குறைத்துக் கொள்ளவும், நீண்டகால வளர்ச்சியை உறுதிப் படுத்தவும் இது உதவும். மற்றும் போட்டி என்பதற்குப் பதிலாக ஒத்துழைப்பு என்ற புதிய திசையிலான சிந்தனையினை இது ஊக்குவிக் கின்றது. அடுத்து புதிய மாதிரி கைத்தொழில்கள், சேவைக் கைத் தொழில்கள் போன்றவற்றின் வளர்ச்சி ஊக்குவிக்கப்பட்டதனால் வளர்முக நாடுகள் வளர்ச்சி கண்டன. மற்றும் உலக நாடுகள் நாணய நிதிச்சந்தை தொடர்புகள் வலிமை பெற்றிருப்பதனால் வளர்முக நாடுகள் பொருளா தார அபிவிருத்திக்கான மூலதனப் பாச்சலைப் பெறுவது எளிமையான நடைமுறையாகி யுள்ளது. தொழில்நுட்ப முயற்சியாண்மை என் பன தொடர்புபட்ட முறையில் வளர்முக நாடுக ளுக்குள் பாய்வதனால் பொருளாதாரத் துறை யில் நவீனமயமாகின்றன. உலக நாடுகள் அனைத்துக்குமான பல பொதுவான நெருக் கடிகளின் போது இவற்றை ஒருங்கிணைத்துத் தீர்ப்பதே சாத்தியமானது. இதற்கு உலகமய மாக்கல் உதவுகின்றதென்பதனை உணர்ந்து கொள்ளலாம். உலகமயமாக்கலின் தீமைகள் கண்டனங்களை நோக்கும் போது உலகமயமா தல் தொடர்பான அவ, நம்பிக்கைகளே அதிகரித் துள்ளன. உலகப் பொராளாதாரக் கூட்டமைப் பின் ஸ்தாபகர் 'கிளவுஸ் சவாப்' மற்றும் அதன் முகாமை இயக்குநர் 'குளோடா மாட்ஜா' போன்றோர் உலகமயமாக்கல் பற்றி பகிரங்க மாகக் கண்டனம் செய்துள்ளனர். அந்த வகை யில் பொருளாதார வளர்ச்சிக்கான மையத் தளங்களை நிலைபெறச் செய்வதில் உலகமய காக்கல் தீவிரமாகச் செயற்படுகின்றது. ஒரு பொருளாதாரக் குவியத்தில் இருந்து வளர்ச்சி வேறுபாடு பிராந்திய மையத்திற்கு நகர்த்தப் படுகின்றது. இதனால் சமூக உறுதியின்மை அதிகரித்துள்ளது. மற்றும் புதிய வேலை வாய்ப்புக்களை உருவாக்கியதைவிட அவை இல்லாமல் செய்த வேலை வாய்ப்புக்களே அதிகம். அத்தோடு பெரிய நாடுகளை வளர்ச்சியடையச் செய்தாலும் சிறிய நாடுகள் பலவற்றை இந்த உலகமயமாக்கமும் முன்

பிருந்த நிலையைவிட மோசமாக்கியுள்ளது. தொழில் நிறுவனம் இதன் மூலம் கூடிய ஆதாயம் பெற்றாலும் பணியாளருக்கு இதனால் நன்மை ஏதும் ஏற்படவில்லை. இதனால் தனிநபர் இளப்பகலில் கூட்டு நிறுவனங்கள் குளிர்காய உலகமயமாக்கல் இடமளித்துள்ளது. தேசிய மக்கள் அவர்களின் அபிலாசைகளை உலகமயமாக்கல் சிதைத்து வருகின்றது. தேசிய வளங்கள் மீது சொந்த நாட்டு மக்களுக்கு எந்தவித உரிமையும் இல்லாமல், சர்வதேச நிறுவனங்கள் உரிமை கொண்டாடி முடிவுகளை எடுக்கின்றது. இத்தகைய பல கண்டனங்கள் உலகமயமாக்கலுக்கு எதிராகக் கூறப்பட்டுள்ளதனாலே இதன் தீமைகளாகக் கருத முடியும்.

உலகின் வலிமைபெற்ற நாடுகள் மற்றும் நிறுவனங்களின் முடிவுகளின் அடிப்படையில் மேற்கொண்டள்ளப்பட்டுவரும் உலகமயமாதல், புதிய தோற்றப்பாடுகளை ஏற்படுத்தியுள்ளதுடன், வளர்ச்சி மையங்களை இடமாற்றியும் தொழில்நுட்பத்தின் ஆற்றங்களை பல்முனைப்படுத்தியதோடு நிதிச் சந்தையை உலகமயமாக்கியுள்ளது. ஆனால் வளர்முக நாடுகளையும் தமது அனுகூலமான திருப்திகரமான பாதையைத் தமக்கெனத் தெரிவு செய்யும் ஆற்றலின்றி தடுமாறுகின்றன. சீர்திருத்தம் பற்றிய கோசங்களும் ஓங்கி ஒலிக்கின்றன. நம்பிக்கை ஒலியை, அவநம்பிக்கை இருள் கவ்விச் செல்லும் காட்சியே எம் முன் தெரிகின்றது எனலாம். ■


"நேற்று நீ செய்த தவறை
ஒப்புக்கொண்டால்
இன்று நீ அறிவாளி என்பதை உணர்த்தும்"

"கலையரசி" மலர் வருடா வருடம் மலர
எனது இதயபூர்வமான வாழ்த்துக்கள்

**K.பாலகிருஷ்ணன்,**
நியு சென்றல் கிளினிக், பிரதான வீதி,
வாழைச்சேனை.


## அ க தி க ள் அ வ ல ம்

*ஈழத்தாயவள் பெற்றெடுத்த*
*சொத்துக்கள் நாங்கள் - இன்று*
*சொத்துக்களை இழந்து தவிப்பது*
*ஏனோ......*

*சொந்த நிலத்தை விட்டு*
*சொத்துக்களையும் இழந்து*
*சோகத்தின் மத்தியில் சோர்வதுதான்*
*நியதியோ.......*

*தாயின் மடியில் உறங்கி*
*தந்தையின் அன்பில் உருகிய*
*காலங்கள் இனியும்*
*வரும் நாட்கள் தான்*
*எத்தனையோ.......*

*இருக்க இடமில்லாமல்*
*உறங்க ஓரிடமில்லாமல்*
*விழித்திடும் எங்கள் இமைகளை*
*உறங்க வைப்பவள் தான்*
*உள்ளனரோ.......*

*புத்தகத்தை ஏந்திய*
*சிறார்களின் கையில்*
*வறுமையின் பிடியால்*
*பாத்திரத்தை ஏந்த வைத்தது*
*நியதியோ......*

*அகதிகள் என்னும் பதம்*
*அகிலத்தில் மாறிடும்*
*நாட்கள் தான்*
*எத்தனை எத்தனையோ......*

**ந.தர்சினி** (தரம் - $8^{A}$)




அதிபர், பிரதி அதிபர், பகுதித் தலைவர்களுடன் மாணவத் தலைவர்கள்

இலங்கையின் முக்கிய வறுமை ஒழிப்புத் திட்டமாகக் கொள்ளக்கூடிய சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தை எடுத்து நோக்குவோமெனின் இச் சமூர்த்தி நிகழ்ச்சித்திட்டமானது 1995ம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இச்செயல்திட்டம் பல்வேறு செயல்திட்டகளினூடாக செயற்படுத்தப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# இலங்கையின் வறுமை ஒழிப்புத்திட்டத்தில் சமூர்த்தித் திட்டம்



**திருமதி.வ.மனோகரசிங்கம்**
*Pri.Tri*

இத்திட்டத்தில் நடைமுறைப்படுத்தப் பட்ட விடயங்களை நோக்குவோமெனின் கட்டாயச் சேமிப்புக்கள், சுயவிருப்பிலான சேமிப்புக்கள், சனசமூகத் திட்டங்கள், சமூர்த்தி கொடுக்கல் திட்டம், துரிதப்படுத்தப்பட்ட கடன் திட்டம், சமூர்த்தித் அபிவிருத் திக் கடன் திட்டம், சமூர்த்தி தொழில் முனைவுக்கடன் திட்டம் சமூர்த்தி குத்த கைத் திட்டம், சமூர்த்தி வங்கிச் செயற்திட்டம், விவசாய அபிவி ருத்தி செயத்திட் டம், விழிப்புணர் வைத் தூண்டும் மற்றும் திறன்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம், சுய வேலை வாய்ப்பு நிகழ்ச்சித்திட்டம், சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், எழுத்தறிவு, சமூர்த்தி கொடி விற்பனை, வாராந்த சந்தைகள், சமூர்த்தி விற்பனை நிலையங்கள், சிறு கைத் தொழில் அபிவிருத்தி, சமூக சமூர்த்தி பாதுகாப்பு நிதியம், சமூர்த்தி புலமைப்பரிசில் திட்டம், ஊழியத்தைப் பயன்படுத்தும் திட்டம் என பல்வேறு செயல் திட்டங்களினூடாக இதனை மேற்கொண்டு வருகின்றனர்.



இச்செயல்திட்டங்களின் விளைவுகள் இலங்கையின் வறுமையில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் கண்டுள்ளபோதும் முழுமையாக வறுமை தனிக்கப்படவில்லை என்றே கூற வேண்டும். 1994ல் பதவிக்கு வந்த பொதுஜன ஐக்கிய முன்னனியின் சமூர்த்தி நிகழ்ச்சித் திட்டமானது அப்போது சமூர்த்திக்குப் பொறுப்பான அமைச்சர் எஸ்.பி.திசாநா யக்காவின் கருத்துப்படி "சமூர்த்தி, இளைஞர்களின் பங்கேற்பில் செயற்படுத்தப் பட்டு வரும் ஒரு திட்டமா கும். இந்த அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தில் படித்த, ஆற்றல் மிக்க இளைஞர்கள் பங்கேற்பதனை உறுதி செய் வதே எமது இலக்கு" எனக் கூறியிருந்தார். இந்நிகழ்ச்சித்திட்டம் தற்போது சுமார் 20 இலட்சம் குடும்பங்களுக்கு நேரடி அனுகூலங்களை வழங்கி வருகின்றது. முழுமையான ஆற்றல்களைப் பயன்படுத்தக் கூடிய விதத்தில் அவர்களுக்கு வலுவூட்டப்படு கின்றது. இத்திட்டத்திற்கென 1999ல் சுமார் 800

கோடி ரூபாய் செலவிடப்பட்டதாகவும், அதே வேளை சுமார் 150 000 இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு 160 கோடி ரூபாய் செலவில் உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடலாம்.

இவ்வாறான செயற்படுத்தலுடன் இங்கு முக்கியமாக பிறப்பின்போது எதிர்பார்க்கும் ஆயுட்காலம், எழுத்தறிவு விகிதம், பாடசாலையில் சேரும் விகிதம், தலைக்குறிய மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு மானிட அபிவிருத்தியில் இலங்கை 174 நாடுகளில் 84வது இடத்திலிருப்பதையும் இங்கு குறிப்பிட்டுக் காட்ட முடியும். எனவே சமூர்த்தி நிகழ்ச்சித் திட்டமும் இலங்கையின் வறுமையில் குறைப்பினை ஏற்படுத்த நடிவடிக்கைகளும் சிறந்த விடயமாக இன்றும் இருந்து வருகின்றது.

இறுதியாக நாம் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் அனைத்தும் திட்டமிடப்பட்ட முறையில் ஒழுங்காக இலக்குக் குழுக்களுக்குச் செல்லுமாயின் அது இலங்கையின் வறுமையைக் குறைப்பதில் முக்கிய பங்காற்றியிருக்கும். ஆனால் இத்திட்டங்களில் குறிப்பிட்டளவு பாதகமான செயற்பாடுகளும், இலக்குக் குழுக்களை சென்றடையாமல் வருமானம் கூடியோரும் இதனை அனுபவிப்பதனால் இத்திட்டம் வறுமையானவர்களை இன்னும் வறுமைக்கோட்டின் கீழ் கொண்டு செல்லக் கூடிய நிலைமையைத் தோற்றுவிக்கும். இருந்தும் இலங்கையின் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் வறுமையை குறைத்து வந்துள்ளது என்பது மறுக்க முடியாததாகும்.



## பெண்ணே! நீ அறிவாய்

### உன் ஏழு பருவங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | பேதை | - | 05 - 07 வயது |
| 2. | பெதும்பை | - | 08 - 11 வயது |
| 3. | மங்கை | - | 12 - 13 வயது |
| 4. | மடந்தை | - | 14 - 19 வயது |
| 5. | அரிவை | - | 20 - 25 வயது |
| 6. | தெரிவை | - | 26 - 31 வயது |
| 7. | பேரிளம் பெண் | | 32 - 40 வயது |

### பெண்ணின் நாற்குணங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | அச்சம் | - | பயம் |
| 2. | மடம் | - | பேதமை |
| 3. | நாணம் | - | வெட்கம் |
| 4. | பயிர்ப்பு | - | அருவருப்பு |

**ர.அனோஜினி**
தரம் - 11



# மல்தூசின் சனத்தொகைக் கோட்பாடு (Malthusian Theory)

செல்வி.வீ.வினிதா
NDI.TEA



ஆங்கிலேய நாட்டைச் சேர்ந்த மல்தூஸ் எனும் பொருளியலறிஞர் "சனத்தொகை பற்றிய தத்துவம்" (Principle of Population) எனும் தனது கட்டுரையில் சனத்தொகை பற்றிய தமது கொள்கையைப் முன்வைத்தார்.

இக்கொள்கையின்படி சனத்தொகை அதிகரிப்பானது உணவு உற்பத்தியின் அதிகரிப்பைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமானது என விளக்குகின்றார். அதாவது சனத்தொகையானது பெருக்கல் வேகத்திலும் உணவுற்பத்திக் கூட்டல் வேகத்திலும் பெருகி வருகின்றது எனக் கூறுகின்றார்.

மிகையான குடித்தொகை அதிகரிப்பே யுத்தம், நோய் என்பவற்றிற்கும் வெள்ளப் பெருக்கு, நிலநடுக்கம் போன்றவற்றால் ஏற்படும் இயற்கை அழிவுகளுக்கும் காரணமாகுமெனக்கூறும் இவரது கொள்கை இவற்றைத் தடுக்க வேண்டுமாயின் மக்கள் தமது குழந்தைகளின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும் என்கிறது.

18ம் நூற்றாண்டில் விவசாயம் செய்யும் முறைகளில் ஏற்பட்ட முன்னேற்றம் காரணமாக அநேகமான மக்களுக்கு போதியளவு உணவு கிடைத்தது. இதனால் மல்தூசின் கொள்கை வலு விளக்கத் தொடங்கியது. எனினும் 19ம் நூற்றாண்டுகளில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் ஏற்பட்ட விரைவான குடிசன அதிகரிப்பும், உணவுப் பற்றாக்குறைப் பிரச்சினைகளும் மீண்டும் மல்தூசின் கொள்கையைப் புத்துயிர் பெற வைத்தது. இன்று இவரது கொள்கை ஏற்புடையதாக மாறி வருகின்றமையைக் காணக்கூடியதாகவுள்ளது. ஏனெனில் உலகில் இன்று அதிகரித் துள்ள குடித்தொகையும் இயற்கை அனர்த்தங்களையும் கொண்டு பார்க்கும் போது ஏற்புடையதாக மாறிவருகின்றமை குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

## இலங்கை சுதந்திரத்தின் பின் கல்வி ஒழுங்கமைப்பு

| | | |
|---|---|---|
| 1950 | - | கல்வி வெள்ளையறிக்கை |
| 1951 | - | கல்விச் சட்டம் |
| 1962 | - | தேசிய கல்விக் குழு அறிக்கை |
| 1964 | - | கல்வி வெள்ளையறிக்கை |
| 1966 | - | கல்வி வெள்ளையறிக்கை |
| 1972 | - | கல்விச் சீர்திருத்தம் |
| 1978 | - | கல்விச் சீர்திருத்தம் |
| 1981 | - | கல்வி வெள்ளையறிக்கை |
| 1997 | - | கல்விச் சீர்திருத்தம் |
| 2007 | - | புதிய கல்விச் சீர்திருத்தம் |

க.மகிந்தகுமார்
தரம் - 10

தரம் குன்றாத அழகிய பவுண் தங்க நகைகளுக்கு சிறந்த இடம்

# தங்கமஹால் ஜுவலரி

**பிரதான வீதி, வாழைச்சேனை.**



★ நம்பிக்கை

★ நாணயம்

★ நேர்மை

ஓடர் நகைகள் குறித்த காலத்தில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

# INFORSYS SYSTEMS

## Computer Service Centre

**அனைத்து கணினி பாகங்களையும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.**

**எம்மிடம்**

- Computer Service and Maintenance
- Sales and Marketing
- Internet Setup and Configuration
- Software Installation and Updating
- Software Sales

**INFOSYS SYSTEMS**

(Asian Computers)

புதிதாக **Computer Sales & Service Centre** இணை ஆரம்பித்துள்ளது

**அனைத்துக் கணினிப் பாகங்களுக்கும் உத்தரவாதம் வழங்கப்படும்.**

**INFOSYS SYSTEMS**

Main Street, Valaichchenai. Tel : 065-2257519

# விஜிதா கொமினிகேஷன் அண்ட் போன் சொப்



எமது சேவைகள்

☆ போட்டோ பிரதி
☆ கணினி தட்டச்சு (தமிழ், ஆங்கிலம்)
☆ லெமினேட்டிங் / ஸ்கேனிங் / சீடி ரைட்டிங்
☆ உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத்தொடர்பு வசதி
☆ டயலொக், மொபிட்டல், லங்காபெல் இணைப்புக்கள்
☆ டயலொக், மொபிட்டல், லங்காபெல் அட்டைகள்
☆ இன்டர்நெட், ஈமெயில் வசதிகள்
☆ VCE, DVD, MP3, AUDIO CD மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
☆ கையடக்க தொலைபேசி உதிரிப்பாகங்கள் (Cover, Battery, Handsfree, Charger)

**லங்காபெல் இப்பொழுது**

| | |
|---|---|
| பிற்கொடுப்பனவு பக்கேஜ் | - 6500/= |
| முற்கொடுப்பனவு பக்கேஜ் | - 6000/= |
| இன்டர்நெட் பக்கேஜ் | - 9775/= |

மட்டுமே!

**Wijitha Communication & Phone Shop**

# 42, Main Street, Valaichchenai.

Tel : 065-2257519 Bell : 065-5670141

# ASIAN COMPUTER (PVT) LTD

## INFORSYS SYSTEMS

*Main Street, Valaichchenai.*

*Tel : 065-5670141*

## புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்

**Diploma in Microsoft Office**

3 Months

- O/L, A/L மாணவர்களுக்கான வகுப்புக்கள் ஆரம்பமாகின்றது.
- இந்த வருடம் ஆண்டு 5 புலமைப்பரிசில் எடுத்த மாணவர்களுக்கான கணினி வகுப்புக்களும் ஆரம்பமாகின்றது.
- அடிப்படை கணினி அறிவைப் பெற்றுக்கொள்வதற்கும் இப்பாடநெறி பயனுள்ளதாக அமைகின்றது.



தரமான கணினி அறிவையும்,
அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களையும்
பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்
**ஏசியன் கம்ப்யூட்டர், பிரதான வீதி, வாழைச்சேனையில்**

**Asian Computers**

Main Street, Valaichchenai.
Tel : 065-5670141

**அறிமுகம் :**

இலங்கைப் பெண்கள் இந்நாட்டின் அபிவி ருத்திச் செயற்பாடுகளில் மிகவும் குறிப்பிடத் தக்க பங்களிப்பை வழங்குகின்றனர். அவ்வாறே முறையான சேமிப்பில் அதிக வளர்ச்சி வீதத்தைக் கொண்டுள்ளது. தற்போதைய அபிவிருத்திச் செயற்பாடுளில் அவர்களது அர்ப்பணிப்பைக் கௌரவிக்கும் முகமாக, சிறந்தவொரு கடன் திட்டத்தை உள்ளடக்கியதாக இந்த "காந்தா ரண் கினும்" திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**கணக்கைத் தொடங்குவதற்கான தகுதிகள் :**

✦ 18 வயதிற்கு மேற்பட்டிருத்தல்.

✦ ஆகக்குறைந்த வைப்பு - கணனிமயப்படுத்தப் பட்ட கிளைகளாயின் ரூ. 500/= கணனி மயப் படுத்தப்படாத கிளையில் சாதாரண சேமிப்புக் கணக்கொன்றைத் தொடங்கும் தொகை.

**பணம் வைப்பில் இடல் :**

சாதாரண சேமிப்புக் கணக்குகளைப் போல விரும்பிய தொகையை மீண்டும் பெற முடியும். ஆயினும் காப்புறுதி, வருடாந்த பரிசளிப்பு போன்ற விசேட அனுகூலங்களைப் பெறுவதற்காயின் அதற்குரிய தொகை தொடர்ந்து வைப்பில் இருத்தல் அவசியமாகும்.

**வட்டி :** சாதாரண சேமிப்புக் கணக்கிற்கு மேலதிகமாக வருடாந்தம் 0.5% கிடைக்கும்.

**காப்புறுதி :** காப்புறுதிக்குத் தகைமை பெறுவதற்கு அதிகபட்சம் ரூ. 3,000/= ஐ கடந்த ஆறு மாதங்களில் கணக்கில் வைத்திருக்க வேண்டும். மரணம் நேரும்போது கணக்கிலுள்ள தொகையின் பத்து மடங்கு காப்புறுதி இழப்பீடாக வழங்கப் படும். அதேவேளை அங்ஙனம் வழங்கப்படும் அதிக பட்சத் தொகை ரூ. 500,00/= ஆகும். இத்தொகைக் கணக்கை வைத்திருப்பவருக்கு வழங்கப்படும்.

**நிரந்தர ஊனமடையும்போது / நோயுறும்போது :**

விபத்து நிகழ்ந்த தினத்தில் கணக்கிலுள்ள தொகையின் 5 மடங்கு ஆகும். அதிக பட்சத் தொகை ரூ. 500,000/= ஆகும். இத்தொகை கணக்கை வைத்திருப்பதற்கு வழங்கப்படும்.

**வேறு நன்மைகள் :**

✦ காந்தா ரண் திவிமக, காந்தா ரண் திரிய ஆகிய கடன் வழங்கும் திட்டத்தின் கீழ், இலகுவான பிணையுடன் சுயதொழில் செய்வதற்கு குறைந்த வட்டியுடன் கடன்.

✦ அப்சரா கடன் அட்டையைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு.

✦ ரூ. 5,000/= க்குக் குறைந்த கடனைக் கணக்கின் தொகைக்குச் சமமான அல்லது அதற்குக் குறைந்த தொகையை உடனே பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு. கடனுக்காக வைப்பதற்காக தொகைக்கான வட்டி விகிதத்தைவிட 2% மட்டுமே செலுத்த வேண்டும்.

1993ம் ஆண்டு இலங்கை வங்கி அறிமுகப் படுத்திய காந்தா ரண்கினும் இலங்கையில் பெண்களுக்கான முதலாவது வங்கிக் கணக்கு என்பதோடு, இன்றுவரை பெண்களுக்கென அமைந்த சிறந்த அனுகூலங்களைக் கொண்ட கணக்காகும்.






இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்



எங்கள் சேவைகள்



- டிஜிட்டல் வீடியோ
- தெளிவான போட்டோ
- டிஜிட்டல் டிசைனிங்
- பழைய போட்டோக்கள் நவீன வடிவில் மாற்றல்
- சகல விதமான போட்டோ பிரேமிங்
- பத்திரிகைகள்
- கெஸட், சீடி மற்றும் டிவிடி களில் பாடல்கள் பதிவு
- சகலவித வைபவங்களுக்குமான குளிர்பானம், ஐஸ்கிறீம்



ராஜ் வீடியோ விசன்



விபுலானந்தா வீதி, வாழைச்சேனை.

தொ.பேசி : 065-2257848

திருமணம், பூப்புனித நீராட்டு விழா, பிறந்த நாள் விழா, மற்றும் சகலவித வைபவங்களுக்கும் சகாய விலையில் அனைத்து சேவைகளும்

Best Wishes.....

Raj Video Vision

Vipulanantha Road, Valaichchenai.

Tel : 065 22547848, 0776550494









உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளின் பலதரப்பட்ட உணவு வகைகள் உடனுக்குடன் தயாரித்துக் கொடுக்கும் ஓரே இடமாகவும், தங்குமிட வசதிகளையும், வாகனத் தரிப்பிடங்களையும் ஒருங்கமையப் பெற்றதும் அனுவலக விழாக்கள், ஏனைய விழாக்களுக்குரிய ஓடர் உணவுத் தயாரிப்புக்களும் ஓரே இடத்தில் பெறுவதற்கு இன்றே நாடுங்கள்



New Lande Hotel

பிரதான வீதி (சங்கிலிப்பாலத்தருகில்)

கல்குடா.

நவநாகரிக உலகில் மங்கையர் விரும்பும் சகல ஆடைகளும், சிறுவர் முதியோர்களுக்கான ஆடைகள், இளைஞர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் புத்தம் புதிய வடிவமைப்புக்கள் கொண்ட ஆடையகமாகவும், பரிசுப் பொருட்கள், அழகுசாதனப் பொருட்கள், கைக்கடிகாரங்கள் என்பவற்றைத் தனித்துவமான முறையில் ஒரே இடத்தில் பெற நாடுங்கள்.





# சிந்துஜா ரெக்ஸ்

கல்குடா வீதி, வாழைச்சேனை.தொ.பேசி : 065-2257907

வீட்டுக்குரிய சகல மின்சாரசாதனப் பொருட்கள், கட்டுமானப் பொருட்களுக்கான கம்பிகள், சீமெந்து வகைகள், கல், மண், தண்ணீர் பம், தாங்கிகள், பைப் வகைகள், அலங்கார டைல்ஸ் வகைகள், பலதரப்பட்ட பெயின்ட் வகைகள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் பெறஇன்றே நாடுங்கள்

# கவினாஸ் ஹாட்வெயார்ஸ்

கல்குடா வீதி, வாழைச்சேனை.



பாடசாலை மாணவர்களுக் அப்பியாசக் கொப்பிகள், கற்றல் உபகரணங்கள், குறைந்த விலையில் போட்டோ பிரதி, உள்நாட்டு வெளிநாட்டு தொலைபேசி அழைப்புக்கள், சகலவிதமான கையடக்கத் தொலைபேசிக் காட், ஓடியோ, வீடியோ கசட் போன்றவற்றை ஒரே கூரையின் கீழ் பெற இன்றே நாடுங்கள்.




# "சக்தி கொமினிகேஷன்"

இல.47, காளிகோயில் வீதி,
கல்குடா.

உரிமையாளர்
திரு.ம.தியாகராஜா

# அக்ஷித்தா பதிப்பகம்

விபுலானந்தர் வீதி, வாழைச்சேனை. 065-2258108, 065-5671187



இங்கே

போட்டோ கொப்பி, லெமினேட்டிங், பக்ஸ், உள்நாட்டு - வெளிநாட்டுத் தொலைபேசி அழைப்புக்கள், இன்டநெட் - ஈமெயில் சேவைகள், வாழ்த்து மடல்கள், பாடசாலை உப கரணங்கள், அலுவலக உபகரணங்கள்.

**விசேடமாக...**

பழைய, புதிய பக்தி, சினிமா, சிங்களப் பாடல்கள் **(Audio, VCD, MP3)**, சொப்ட்வெயார், **Font, Background, Games CD**கள், விசேட தினங்களுக்கான போட்டோ அழைப்பிதழ்கள். போட்டோ டிசைனிங், ஸ்கானிங், அச்சுப் பதிப்புக்கள் புத்தகங்கள், சஞ்சிகைகள், நோட்டீசுகள், மரண அறிவித்தல்கள், பில் புக், கடிதத் தலைப்புக்கள், பரீட்சை வினாத்தாள்கள் **(STENCIL CUTTING)**, புத்தகம் கட்டுதல், அழைப்பிதழ்கள், ஆசிரியர்களுக்கான பாடவேலைத் திட்டங்கள்.

போன்றவற்றை நெகிழ்வான விலைகளில் தரமான முறையில் பெற்றுக் கொள்ளலாம்.

# WINNER TECHNOLOGY & WINNER CD WORLD

வின்னர்

Only 44,000/-

3 Years Warranty

panora PHILIPS Logitech intel inside GIGABYTE SAMSUNG

- Intel Pentium IV 3.0GHz 775 Processor
- Intel P4 Core2 Duo Support Motherboard
- 512MB DDR2 667 Ram
- 128MB In build VGA
- 160GB SATA Hard Disk
- DVD Writer
- 1.44 Floppy Drive
- ATX 450W Casing
- 15" Monitor
- Key board + Mouse + Speaker



*சகலவிதமான கணனிகள், கணனி உதிரிப்பாகங்கள், கையடக்கத் தொலைபேசிகள், தொலைபேசி உதிரிப்பாகங்கள், கொம்ப்யூட்டர் பிரிண்டிங், போட்டோ பிரதி, காகிதாதிகள், பாடசாலை உபகரணங்கள், பரிசுப் பொருட்கள், ஓடியோ, வீடியோ ரெக்கோடிங்க், புதிய - பழைய இடைக்கால பாடல்கள், திரைப்படங்கள், டீவீடீ, வீசீடீ, எம்.பீ.3 சீடிக்கள், இன்னும் ஏராளம்....*



WINNER · WINNER CD WORLD · WINNER MUSIC CENTRE

**Main Street, Valaichenai.**
**Tel: 0655680874**
**Hotline: 0776232792, 0776672820.**
**Email: wintec_c@yahoo.com**

**Pechiyamman Koyil Road, Valaichenai.**
**Tel: 0652257910**
**Hotline: 0776688798, 0779917118.**
**Email: wintec_c@yahoo.com**


பிளாஸ் மல்டிமீடியா ஹவுஸ்
FLASH MULTIMEDIA HOUSE
MAIN STREET, VALAICHCHENAI
T.P.0773842077 ,0652257790 ,0779349242
டிஜிட்டல் வீடியோ படப்பிடிப்பு
புகைப்படப்பிடிப்பு
டிஜிட்டல் அல்பம்
போட்டோ டிசைனிங் ,பிரேம்
வீடியோ எடிட்டிங்
கொம்பியூட்டர் சேல் அன்ட் றிப்பயரிங்
அஞ்சலோ மோட்டஸ்
முச்சக்கர வண்டி மோட்டார் வண்டி அசல் உதிரிப்பாகங்கள்
எம்மிடம் மட்டுமே. பஜாச் மோட்டார் வாகன விற்பனை முகவர்.
மோட்டர் வாகனங்கள்
பிரதான வீதி வாழைச்சேனை
T.P 0652257571

# பாடசாலை ஆசிரியர் குழாம்



**திரு. வீ. அரசரெத்தினம்**
(அதிபர்)
2II, Trained Social Study
பிள்ளையார் கோவில் வீதி,
வாழைச்சேனை.



வித்தியா கீர்த்தி சமன்ன
**திரு. க. கதிர்காமநாதன்**
(பிரதி அதிபர்)
BA, Trained Tamil
கல்குடா வீதி, வாழைச்சேனை



**திருமதி. த. கமலேஸ்வரன்**
BA, PGDE
(பகுதித் தலைவர் - இடைநிலை)
பாடசாலை வீதி,
பேத்தாழை.



**திருமதி. வ. மனோகரசிங்கம்**
Primary Trained
(பகுதித் தலைவர் ஆரப்பப்பிரிவு)
பிரதான வீதி, கல்குடா.



**திரு. வே. கார்த்திகேசு**
Maths. Trained
விபுலானந்த வீதி,
வாழைச்சேனை.



**திரு. சு. ஜெகநாதன்**
BA
செட்டியார் வீதி,
குருக்கள்மடம்.



**திருமதி. ரா. ரகுநாதன்**
Primary Trained
பேத்தாழை,
வாழைச்சேனை.



**திருமதி. கீ. லோகநாதன்**
Home Economics Trained
கல்குடா வீதி,
வாழைச்சேனை.



**திருமதி. யூலியன் ஏனஸ்ட்**
Primary Trained
கல்குடா வீதி,
வாழைச்சேனை.



**திரு.பி.பிரமிதன்**
(NDTE. Marit)
பெரிய கல்லாறு – 03,
கல்லாறு.



**திருமதி.ப.சின்னத்தம்பி**
Primary Trained
27, புதியசந்தை வீதி,
வாழைச்சேனை.



**திரு.இ.கனகராஜா** BA
பழைய கூட்டுறவு வீதி,
மகிழூர் – 01
களுவாஞ்சிக்குடி.



**திரு.ந.ஜெயகரன்** BA
பண்டாரியாவெளி,
கொக்கட்டிச்சோலை.



**திரு.டே.விஜயகுமார்** BA
68, நூலக வீதி,
காரதீவு – 05.



**திரு.ப.அமிர்தராஜா** BA
சோமர் வீதி, களுதாவளை – 3,
களுவாஞ்சிக்குடி.



**செல்வி.தி.விமலேந்தினி**
BA
விஷ்னு பாடசாலை வீதி,
வந்தாறுமூலை.



**திருமதி.ப.பிரதீஸ்வரன்**
BA (Hons), PGDE
87/9, கூளாவடி வீதி,
மட்டக்களப்பு.



**செல்வி.வி.வினிதா**
NDI.TEA
பேச்சியம்மன் கோவில் வீதி,
வாழைச்சேனை.



**திருமதி. சு. சாம்டினேஷ்**
BBA
கருணைபுரம்,
வாழைச்சேனை.



**திரு. சி. இளங்கோவன்**
BA (Hons), PGDE
கல்குடா வீதி,
வாழைச்சேனை.



**செல்வி. த. தமிழ்ச்செல்வி**
BA (Hons), PGDE
204, புதுக்குடியிருப்பு,
வாழைச்சேனை.



**திருமதி. மே. அ. றமேஸ்வரன்**
BA
384/14, பார் வீதி,
மட்டக்களப்பு.



**செல்வி. த. பிரதீபா**
HNDA
பிரதான வீதி,
கொம்மாதுறை.



**திருமதி. ம. ரமேஸ்காந்தன்**
BA, Dip.in.(Music)
புதுக்குடியிருப்பு,
வாழைச்சேனை.



**செல்வி. க. கேமலா**
Con. English
பிரதான வீதி,
கல்குடா.



**திரு. இ. சசிகாந்**
கல்குடா வீதி,
வாழைச்சேனை.

# "நவில்கின்றோம் நன்றிகள் பலகோடி"

எமது வித்தியாலயத்தின் பாரம்பரியத்தினை வெளிப்படுத்தும் வகையில் "கலையரசி" என்னும் சிறப்பு மலர் அழகான தோற்றமும், ஆழமான கருத்தும் கொண்டதாக வெளிவர அருள்பாலித்த ஆண்டவனை இறைஞ்சி இந்நன்றியுரையைத் தொடர்கின்றேன்.

ஒரு நிறுவனத்தின் சிறந்த தலைமைத்துவமும் அதனுடன் இணைந்த நிர்வாகப் பிரிவுகளும் குறிக்கப்பட்ட இலக்கினை அடைவதற்கு பணியத்தில் அனைவரும் ஏதோவொரு வகையில் புரிந்துணர்வுடன் சேர்ந்து செயற்பட்டு ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் குறித்த நோக்கம் இலகுவாக வெற்றிகொள்ளப்படுகிறது.

இந்த வகையில், எமது பாடசாலையில் இருந்து முதலாவது மலரான "கன்னி மலர்" ஒன்று வெளியிட வேண்டுமென்ற நன் நோக்குடன் ஆலோசனை வழங்கி செம்மைப்படுத்தி இதழ் இணையாசிரியர் எனத் தேர்ந்து இப்பணியை ஒப்படைத்த **அதிபர்** அவர்களுக்கு முதற்கண் நன்றிக்கடன் உடையவராக இருக்கின்றேன்.

இம்மலர் சிறக்க தம் ஆசிச் செய்திளை இன் முகத்துடன் வழங்கி வைத்த **மத குருமார்களுக்கும்** எம் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

மற்றும் மலர் சிறக்க வேண்டுமென்ற நன்நோக்குடன் வாழ்த்துரைகளை வழங்கிய **கல்குடா வலயக்கல்விப் பணிப்பாளர் மற்றும் பிரதிக் கல்விப் பணிப்பாளர், கோட்டக்கல்விப் பணிப்பாளர் அவர்களுக்கும்** நன்றி கூறவேண்டியது எம் பெரும் கடமையாகும்.

மலர் சிறப்புற அமைய செயற்பட்ட **மலராசிரியருக்கும்,** ஆக்கபூர்வமான படைப்புக்களை எமக்களித்த **ஆசிரியர்கள், மாணவர்கள்** ஆகியோருக்கும் நன்றிகள்.

இதழ் வெளிவர முன்னின்று உழைத்த **இதழாசிரியர்** அவர்களுக்கும் நன்றிகள்.

மலரை ஆக்குவதில் எங்களோடு தோளோடு தோள் நின்றுழைத்த **நிர்வாகக்குழு,** மற்றும் **ஆலோசனைக்குழு, வெளியீட்டுக்குழு** ஆகிய குழுசார்ந்த ஆசிரியர்களுக்கும் எமது நன்றிகள்.

இம்மலர் சிறக்கவேண்டுமென்ற நோக்குடன் பண உதவி நல்கிய **நண்பர்களுக்கும்,** அனுசரணையாளராகத் திகழ்ந்த **விளம்பரதார்களை** வாயார வாழ்த்துவதுடன் அவர்களுக்கும் மனமுவந்த நன்றிகள்.

இந்த மலர் செம்மையான முறையில் வடிவமைப்புப் பெறுவதற்கு மலர் காப்பாளரின் வேண்டுகோளுக்கு இணங்கி தனித்துநின்று கணினி மயப்படுத்தித்தந்த எமது பாடசாலை **ஆசிரியர் திரு.சி.இளங்கோபன்** அவர்களுக்கும், மலருக்கு முன் அட்டையை வடிவமைத்த **செல்வன் லோ.சுபோசன்** அவர்களுக்கும் எமது நன்றிகள்.

இம்மலருக்கு மேலதிக கணனி வடிவமைப்புச் செய்து இதழை அழகுற வடிவமைத்த **செல்வி.அ.ஜெயசுதா** அவர்களுக்கும், விரைவாக அச்சிட்டுத் தந்த **"சண்" உரிமையாளருக்கும், ஊழியருக்கும்** எமது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் குழாம் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மற்றும் பாடசாலையிலிருந்து வெளிவரும், இந்த கன்னி மலரை விமர்சனம் செய்த **திருமதி.யோ.குணரெட்னம்** தமிழ் உதவிக் கல்விப்பணிப்பாளர் அவர்களுக்கும் நன்றிகள்.

இம்மலர் சிறப்புற வெளிவர அனைத்து வழிகளிலும் உதவிகளை வழங்கிய அனைத்து **அன்பர்களுக்கும்** எமது இனிய நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

**திரு.ந.ஜெயகரன் (இணை இதழாசிரியர்)**




சண் அச்சகம் - 05, இருதயபுரம் மேற்கு, மட்டக்களப்பு. 065-2222597